ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கைக்கு தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள்

1



# மீன்பிடிப்பு நடவடிக்கைகள்

உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள
நடவடிக்கைக்கு
தொழில்நுட்ப
வழிகாட்டு முறைகள்

1

# மீன்பிடிப்பு நடவடிக்கைகள்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம் 1996

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே. இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் இயக்குநர் தகவல் பிரிவு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே, டொமே டி , காரகல்லா 00100, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

© உவேஅ 1996

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
*சனவரி 2007*

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*January 2007*

# ஆவணம் தயாரித்தல்

ஜுன் 6 முதல் 11 வரை 1994 ல், சிட்னி பிரிட்டிஷ் கொலம்பியா, கனடாவில் பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு மீதான வல்லுநர் கலந்தாய்வின் அடிப்படையில் உவே அமைப்பிற்காக ஜான் ஃபிட்ஸ் பாட்ரிக், இயக்குனர், மீன்வள தொழில் பிரிவு தலைமையில் மீன்பிடிப்பு தொழில் நுட்பவியல் சேவைக்காக மீன்பிடிப்பு நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டது.

மீன்வளக்குழுவின் பரிந்துரைக்கு (COFI) ஏற்ப வரைவு வழிகாட்டு முறைகள் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு, 1994 செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 5 வரை ரோமில் நடைபெற்ற தொழில் நுட்பக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. வரைவு இணைப்புகளின் சில முழு அளவில் அல்லது முன்னேற்ற நிலையிலான வரைவுகளாக இருந்தன. சில மேலும் விரிவாக்கக்கூடிய நிலையில் இருந்தன.

நடத்தை விதித் தொகுப்பின் வளர்ச்சிக்கு இணையாக உலக கடலாண்மை நிறுவனம்:

அ. மீன்பிடி கலன்களின் பாதுகாப்புக்கான டொரிமோலினோஸ் பன்னாட்டு சம்பிரதாயங்கள் குறித்த டொரிமோலினோஸ் மூலப் பத்திரம் 1993 பின்பற்றுதல்;

ஆ. கண்காணிப்பு சான்றிதழ் மற்றும் பயிற்சிக்காக சம்பிரதாயங்களை திருத்தி அமைத்தல்;

இ. மீன்பிடி கலன்களின் பணியாளர்களுக்கு பயிற்சி மற்றும் சான்றளித்தலுக்காக புதிய வழக்கத்தினை ஏற்படுத்துதல்;

ஈ. கடலில் மோதலைத் தவிர்த்தலுக்கான பன்னாட்டு கட்டுப்பாடுகளை (உவே அமைப்பின் பரிந்துரைப்படி) திருத்துதல் ஆகியவைகளை மேற்கொண்டது.

விதித்தொகுப்பின் இணைந்த பகுதியாக, ஆழ்கடலில் மீன்பிடிகலன்களின் பன்னாட்டு பாதுகாத்தல் மேலாண்மை முறைகளுக்கு இணக்கத்தினை ஊக்குவிக்கும் ஒப்பந்தத்தை (இணக்க ஒப்பந்தம்) உமவே அமைப்பு பின்பற்றியது. மீன்பிடிப்பு அங்கீகார கருத்தினை உள்ளடக்கியது. விதித் தொகுப்பின் கட்டுரை 8 ல் இக்கருத்து அடங்கியுள்ளதால் மீன் பிடி நடவடிக்கைகள் பெரிதும், வழிகாட்டு முறைகள் இணைப்பு 3 மற்றும் 4 ஆகியவற்றை சரி செய்தலை எளிதாக்கியது.

கீழ்க்கண்டவைகளைக் கருத்தில் கொண்டும் வழிகாட்டு முறைகள் தயாரிக்கப்பட்டன:

அ. ஜுன் 6– 11, 1994 சிட்னி, பிரிட்டிஷ் கொலம்பியா கனடா பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு நடவடிக்கைக்காண வல்லநர் கலந்தாய்வு அறிக்கை;

ஆ. இணக்க ஒப்பந்தத்தை விரிவாக்குதல்;

இ. இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்புகள் மீதான ஐ.நா. கூட்டத்தில் விவாதம்;

ஈ. நடத்தை விதிட்தொகுப்பின் விரிவாக்கம்;

மேலும், குறிப்பான தொழில் நுட்ப பொருள் குறித்த அறிக்கைகள் தயாரிப்பில் உள்ளன. இவை ''மீன் பிடிப்பு நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டு முறைகளின் பிற்சேர்க்கையாக'' தயாரிப்பு பணி முடிந்தவுடன் வெளியிடப்படும்.

வழிகாட்டு முறைகள் தொடக்கமானவை. நடைமுறைப்படுத்துதலின் மூலம் திரட்டப்படும் விபரங்களால், மதிப்பிடப்படும் மற்றும் சரிசெய்யப்படும்.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தொழில் நுட்ப சேவை
மீன்பிடி நடவடிக்கைகள்
உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள தொழில் நுட்ப வழிகாட்டு முறைகள்
எண் 1 ரோம், உவேஅ. 1996 பக்கங்கள் 92. இணைப்புகள் 6.


**சுருக்கம்**

மீன்வளக்குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்கி உவே மீன்பிடி நடவடிக்கைகளுக்கான தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளின் முதல் வரைவினை தயாரித்தது. 1994 செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 5 வரை ரோமில் நடைபெற்ற பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்புக்கான தொழில் நுட்ப கலந்தாய்வுக்கு சமர்ப்பித்தது. சுற்றுப்புறச்சூழ்நிலை வளர்ச்சிக்கான ஐக்கிய நாட்டுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் 21 கான்கனின் அறிவிக்கை பொறுப்பார்ந்த மீன்வள வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை சிட்னி பிரிட்டிஷ் கொலம்பியா கனடா ஜுன் 6–14 ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வரைவு தயாரிக்கப்பட்டது.

அதன் பிறகு, இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்புக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் கலந்து பேசப்பட்டு நடத்தை விதித் தொகுப்பு விரிவாக்கப்பட்டது. டொரிமோலினோஸ் பன்னாட்டு சம்பிரதாய மீன்பிடி கலனின் பாதுகாப்புக்கான மூலப்பத்திரம் மற்றும் மீன் பிடி கலன்களின் பணியாளர் பயிற்சி மற்றும் சான்றளித்தலுக்கான புதிய பன்னாட்டு சம்பிரதாயம் உலக கடலாண்மை நிறுவனத்தின் வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வரைவு சரிசெய்யப்பட்டது.

தொழில்நுட்ப வழிகாட்டு முறைகள், மீன்வள நடவடிக்கைகளுக்கான நடத்தை விதித் தொகுப்பினை நடைமுறைபடுத்துதலுக்கு உதவியாக வழங்கப்பட்டுள்ளது. நாடுகள், பன்னாட்டு நிறுவனங்கள், மீன்வள மேலாண்மை அமைப்புகள், உரிமையாளர்கள், மேலாளர்கள், மீன்பிடி கலன்களை வாடகைக்கு அமர்த்துவோர், மீனவர் மற்றும் அவர்களின் நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு இவை தெரிவிக்கப்படும். பொது மக்களுக்கும் பொறுப்புகள் பற்றிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.


*வழங்குதல்*

அனைத்து உவேஅ உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள்
ஆர்வமுள்ள நாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள்
உவே அமைப்பின் மீன்துறை
உவே அமைப்பின் மண்டலங்களில் உள்ள அலுவலர்கள்
ஆர்வமுள்ள அரசு சாரா நிறுவனங்கள்

## உள்ளடக்கம்


பக்கம்

**பின்னணி** ---------------------------------------------------- 7

**முன்னுரை** ---------------------------------------------------- 9

1. குறிக்கோள், பொருள் வரையறை மற்றும் பயன்பாடு ---------------------- 9
2. அனைத்து நாடுகளுக்குரிய நடைமுறைகள் ----------------------------- 10
3. கொடியிட்ட நாடுகளுக்கான வழிமுறைகள் ----------------------------- 13
4. துறைமுக நாடுகளுக்கான வழிமுறைகள் ------------------------------- 18
5. மீன்வள பாதுகாப்பிற்கான வழிமுறைகள் ------------------------------- 20
6. மீன்வள நடவடிக்கைகளுக்கான வழிமுறைகள் -------------------------- 23
7. திறனை நன்மைக்காக பயன்படுத்துதல் மற்றும் ஓசோன் படலத்தை பாதுகாத்தலுக்கான வழிமுறைகள் ------------------------------------- 29
8. மீன்பிடி கலன்களுக்கான துறைமுகம் மற்றும் இறங்குதளங்களின் வடிவமைப்பு கட்டுமானம் மற்றும் மாற்றங்களுக்கான வழிகாட்டு முறைகள் ------ 30
9. செயற்கை உறைவிடங்கள் அமைத்தல், மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்களை நிறுவுதல், கரையிலிருந்து விலகியுள்ள பகுதிகளில் அநாவசியபெரருட்களை (Structures) நீக்குதல்ஆகியவற்றிற்கான வழிமுறைகள் -- 32


### இணைப்புகளின் பட்டியல்


1. மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் பன்னாட்டு சம்பிரதாயங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளின் தாக்கம்– உதாரணங்கள் -------------- 34
2. மீன்பிடி கலன்கள் குறி அடையாளம் இடுதல் மற்றும் அடையாளம் காணுதலுக்கான தரப்படுத்தப்பட்ட விபரங்கள் ------------------------------------- 44
3. மீன்பிடிக்கருவிகளை அடையாளமிட முன்மொழியப்படும் முறை -------------- 51
4. மீன்பிடிக் கருவிகளின் அடையாளம் அமைவிடம் காண்பதற்காகப் பயன்படுத்தப்படும் விளக்குகள் வடிவமைப்புகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட அமைப்புகளுக்கான கருத்துருக்கள் ------------------------------------ 60
5. கரைக்குத் தொலைவில் பன்னாட்டு கடல் படுகை மற்றும் தனிபொருளாதார மண்டலத்தில் நிறுவப்பட்டவை மற்றும் அமைப்புகளை நீக்குதல் தொடர்பான வழிகாட்டு முறைகள் மற்றும் நிலைபடுத்தப்பட்டவை ---------------------- 72
6. மீன்பிடிகலன்களுக்கான துறைமுகம் இறங்கு தளங்களின் வளர்ச்சி மற்றும் மேலாண்மைக்கான செயல்முறைகள். ----------- 80

## பின்னணி

1. மனித இனத்திற்கு மீன்பிடிப்பு முக்கிய உணவு ஆதாரமாக தொன்று தொட்டு விளங்குகிறது. இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன. எனினும், வளர்ந்து வரும் அறிவு மற்றும் மீன்வள தொழில் நுட்பங்களின் வளர்ச்சியினால் தொழில் புதுப்பிக்கப்பட்ட போதிலும் மீன்வள ஆதாரங்கள் எல்லையற்றது அல்ல. வளர்ந்து வரும் உலக மக்கட்தொகைக்கு சத்துணவு, பொருளாதாரம் மற்றும் சமூக நலம் ஆகியவற்றில் அவற்றின் பங்கு நிலை நிறுத்தப்படுவதற்கு, மீன்வள ஆதாரங்களை முறையாக நிர்வகிக்கும் தேவை உள்ளது என்பது உணரப்படுகிறது.

2. 1982–ல் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கி ஏற்றுக் கொண்ட கடல் சட்டம் கடல் சார் ஆதாரங்களை நல்ல முறையில் நிர்வகிக்க புதிய வடிவமைப்பை வழங்கியது. உலக கடல் மீன்வளத்தில் 90 சதவீதம் தன்னுள் கொண்டிருக்கும் தனிபொருளாதார மண்டலத்தில் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்த மற்றும் நிர்வகிக்க பொறுப்புகளை கடலோர நாடுகளுக்கு புதிய ஆழ்கடலின் சட்ட அமைப்பு வழங்கியது.

3. சமீப காலங்களில் உணவுத்துறையில் உலக மீன்வளப்பிரிவு மிக விரைவாக முன்னேறுகிறது. மீன் மற்றும் மீன் வளப்பொருட்களுக்கு உலக அளவில் உயர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப புதிய மீன் பிடிகப்பல்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் தொழில்களில் கடலோர நாடுகள் முதலீடு செய்து அவ்வாய்ப்புகளை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடற்ற வகையில் மீன் பிடித்தல் அடிக்கடி மேற்கொள்ளப்படுவதால் பல மீன்வள ஆதாரங்கள் நிலை நிறுத்தப்பட இயலாதவை ஆகிவிடும் என்பது உண்மை.

4. முக்கிய மீன் இருப்புகள் அளவுக்கதிகமாக பிடிக்கப்படுவதற்கு தெளிவான அடையாளங்கள், சுற்றுச்சூழல் அமைப்பில் மாறுபாடுகள், குறிப்பிடக் கூடிய பொருளாதார பின்னடைவுகள், மேலாண்மை மற்றும் மீன் வர்த்தகம் இடையே ஏற்படும் பன்னாட்டு கருத்து வேறுபாடுகள் ஆகியவை மீன்வளத்தின் நீண்ட வளங்குன்றாத தன்மையையும் மற்றும் உணவு விநியோகத்தில் மீன்வளத்தின் பங்கினையும் அச்சுறுத்துகின்றன. ஆகையால், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழு 1991 மார்ச்சில் நடைபெற்ற 19வது அமர்வில் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் அடங்கிய மீன்வள மேலாண்மைக்கு புதிய வகைமுறைகளை பரிந்துரைத்தது. அவ்வாறே சமூக பொருளாதார பரிசீலனைகளும் உடனடியாக தேவைப்படுகின்றன. பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கை கருத்தை ஏற்படுத்த உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பயன்பாடுகளை வளர்க்க நடத்தை விதித் தொகுப்பை விரிவு படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டது.

5. மெக்சிகோ அரசு, உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு பற்றி கான்கனில் பன்னாட்டு கூட்டத்திற்கு மே 1992ல் ஏற்பாடு செய்தது. கான்கன் அறிவிக்கை அக்கூட்டத்தில் மேலொப்பம் இடப்பட்டு பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை தயாரிக்க ஆதரவு அளித்திட UNCED Rio Summit கவனத்திற்கு 1992ல் கொண்டு வரப்பட்டது. 1992 செப்டம்பரில் நடைபெற்ற ஆழ்கடல் மீன்பிடிப்பின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தொழில் நுட்ப கலந்தாய்வு ஆழ்கடல் மீன் பிடிப்பு குறித்தான பிரச்சினைகளுக்கு தீர்வாக, விதித் தொகுப்பை மேலும் விரிவாக்க பரிந்துரைத்தது.

6. 1992 நவம்பரில் நடைபெற்ற 102வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் குழு விதித் தொகுப்பை விரிவாக்குவது பற்றி விவாதித்தது. ஆழ்கடல் மீன் பிடிப்பு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க பரிந்துரைத்தது. 1993ல் நடைபெற இருந்த மீன் வள குழுவிற்கு விதித் தொகுப்பு கருத்துருவை அளிக்க கேட்டுக் கொண்டது.

7. 1993 மார்ச்சில் நடைபெற்ற மீன்வளக்குழுவின் 20வது அமர்வு அத்தகைய விதித்தொகுப்பின் வழிகாட்டு முறைகளையும் சேர்த்த உள்ளடக்கத்தையும் முன்மொழியப்பட்ட வடிவமைப்பையும் பொதுவாக பரிசீலித்தது. விதித்தொகுப்பை மேலும் விரிவாக்க காலக் கெடு வழங்கியது. விதித்தொகுப்பின் பகுதியாக ''அதிவேக'' அடிப்படையில், ஆழ்கடலில் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைப்பாதிக்கும் கலன்களுக்கு மறு கொடி இடுதலை தவிர்க்க கருத்துரு தயார் செய்ய உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது. 1993 நவம்பரில் 27வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்டம், ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை ஊக்குவிக்கும் ஒப்பந்தத்தை ப் பின்பற்றுவதில் முடிந்தது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்ட தீர்மானம் 15/93 ன்படி இது விதித் தொகுப்பில் இணைப்பு பகுதியாக இணைந்தது.

8. தொடர்புடைய பன்னாட்டு விதிகளுக்கு இணங்கி ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பின் கடல்சட்டம் 1982 ன் படி பகுதிகளை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் 1982 டிசம்பர் 10, இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்பு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்த 1995 மற்றும் 1992 கான்கன் அறிவிக்கையின்படி 1992 சுற்றுப்புறச்சூழ்நிலை மற்றும் வளர்ச்சி ரியோ அறிவிக்கை, குறிப்பாக கட்டுரை 17 நிகழ்ச்சி நிரல் 21க்கு இணங்கி அர்த்தம் கொள்ளும் வகையில் பயன்படுத்திட ஏதுவாக விதித்தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

9. தொடர்புடைய ஐக்கிய நாட்டு முகமைகள் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களுடன் கலந்து ஆலோசித்து விதித்தொகுப்பின் வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

10. விதி தொகுப்பு 5 அறிமுக கட்டுரைகள் கொண்டது. அவை தன்மை மற்றும் நோக்கம், குறிக்கோள் பிற பன்னாட்டு காரணகர்த்தாவினருடன் தொடர்பு, செயல்பாடு, கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல் மற்றும் வளரும் நாடுகளுக்கான சிறப்பு தேவைகள் ஆகும். இந்த 5 அறிமுக கட்டுரைகளை தொடர்ந்து பொது கோட்பாடுகள் என்ற கட்டுரை அமையும். அதைத்தொடர்ந்து மீன்வள மேலாண்மை, மீன்பிடிப்பு நடவடிக்கை, நீர்வாழ் உயிரின மேம்பாடு, கடலோர மேலாண்மையுடன் இணைந்த மீன்வளம், பிடித்த மீன்களை பாதுகாக்கும் அறுவடைக்குப்பிந்தைய செயல்பாடு, விற்பனை மற்றும் மீன்வள ஆராய்ச்சி என்ற 6 தலைப்பில் கட்டுரைகள் இடம் பெறும். முன்பே தெரிவித்தவாறு ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பன்னாடுகளுக்கிடையே ஆன பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை பற்றிய இணக்கத்தை ஊக்குவிக்கும் ஒப்பந்தம், சட்ட விதித் தொகுப்பு நடவடிக்கைக்கு ஒரு அங்கமாக அமைந்தது.

11. நடத்தை விதி தொகுப்பு சுய விருப்பமானது. எனினும் அவற்றின் சில பகுதிகள் டிசம்பர் 10 1982 கடல் சட்டத்தில் தெரிவித்துள்ள பன்னாட்டு விதிகளின் அடிப்படையில் ஆனவை. ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் பாதுகாத்தல் மேலாண்மை பற்றி கடைபிடிக்கப்பட வேண்டிய இணக்கத்தை ஊக்குவிக்கும் 1993ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் போன்றவற்றை குழுவினர் இடையே சட்டப்படி கட்டுப்படும் காரணகர்த்தாக்களுக்கு கட்டுப்படுத்துகிற பகுதிகளையும் விதி தொகுப்பு கொண்டுள்ளது.

12. 31.10.1995 அன்று பொறுப்பார்ந்த மீன்பிடிப்பிற்கான நடத்தை விதிகளை 28வது கூட்ட அமர்வு 4/95 தீர்மானத்தில் ஏற்றுக்கொண்டது. அதே தீர்மானத்தில் விதித் தொகுப்பினை நடைமுறைப்படுத்த உதவியாக பொருத்தமான தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளை உறுப்பினர் மற்றும் ஆர்வமுடைய உகந்த நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கித் தர உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது.

## முன்னுரை

### 1. குறிக்கோள் பொருள் வரையறை மற்றும் பயன்பாடு

### 1.1 குறிக்கோள்

1. கடல் வாழ் ஆதாரங்களை வரும் வம்சாவளியினர் பெறும் வகையிலும், உலக உணவு பாதுகாப்பிற்கு பெரும் பங்கு அளிப்பதுடன் வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் நீண்ட காலத்திற்கு அவைகளை நிலைநிறுத்துவதற்கான உறுதி அளிப்பது நடத்தை தொகுப்பின் நீண்ட கால குறிக்கோள்களில் ஒன்று. நடத்தை தொகுப்பின் 8வது அத்தியாயம் மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கான வழிகளை மேலும் விரிவாக்குகிறது.

2. தொழில் நுட்ப வழிமுறைகளின் உடனடி குறிக்கோள் அத்தியாயம் 8 வழிமுறைகள்படி மீன்பிடிப்பு நடவடிக்கைகள் பொறுப்பார்ந்த முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்த தேவையான செயல்முறைக்கும் நடைமுறைக்கும் உரிய அறிவுரை வழங்குவதே ஆகும்.

### 1.2 பொருள் வரையறை

3. இந்த வழிமுறைகளுக்காக அப்படி அல்ல என்று வேறுவகையில் சொல்லாதவரையில் கீழ்க்கண்ட வரையறைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

அ) ‘‘**மீன்பிடிகலன்**’’ எனின், கடல்வள ஆதாரங்களை வர்த்தக ரீதியில் அறுவடை செய்ய உபயோகப்படுத்தப்படும் அல்லது உபயோகப்படுத்தப்பட உள்ள கலன். தாய்கலன் மற்றும் அத்தகைய மீன்பிடிப்பு நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடும் இன்னபிற கலன்களும் இதில் அடங்கும்[1].

ஆ) ‘‘**மீன்பிடிப்பவர்**’’ எனின் கரையிலிருந்தோ நிலைத்த அல்லது மிதக்கும் மேடையிலிருந்தோ அல்லது மீன்பிடி கலனிலிருந்தோ நடைபெறும் மீன்பிடிப்பு நடவடிக்கையில் பங்குகொள்பவர்.

இ) ‘‘**உரிமையாளர்**’’ எனின் மீன்பிடி உரிமம் அல்லது மீன்பிடிகலனுக்கு சொந்தமான தனி நபர் அல்லது பங்குகளை கொண்ட பங்காளர்,

ஈ) ‘‘**மேலாளர்**’’ எனின் மீன்பிடிப்பு நடவடிக்கை அல்லது மீன்பிடிகலனின் உரிமையாளர் சார்பாக இயங்கும் தனிநபர் அல்லது பங்காளர்.

உ) ‘‘**வாடகைக்கு அமர்த்துபவர்**’’ எனின் குறிப்பிட்ட காலத்திற்கோ அல்லது பயணத்திற்கோ கலனை குத்தகையாக வழங்கும் தனிநபர் அல்லது பங்காளர்.

ஊ) ‘‘**மீன்பிடி பாதுகாப்பு கலன்**’’ எனின் வர்த்தக ரீதியில் நடைபெறும் நடவடிக்கையில் ஈடுபடும் கலன் அல்லது கண்காணித்தல் கட்டுப்படுத்துதல் கவனமாக கண்காணித்து சட்டத்தை அமுல்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக நாடு ஒதுக்கீடு செய்த அரசு பணிக்கான கலன்.

---

1 *நவம்பர் 1993ல் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கூட்டம் அனுமதித்த ஆழ்கடல் மீன்பிடிகலன்களுக்கான பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை குறித்த பன்னாட்டு இணக்கத்தினை ஊக்குவிக்கும் ஒப்பந்தத்திலிருந்து பெறப்பட்டவை. ஒரு ஒப்பந்தத்திற்கும் மற்றொரு ஒப்பந்தத்திற்கும் இடையே மீன்பிடிகலன் என்பதற்கான பொருள் வரையறை மாறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது. வாக்குவாதத்திற்குரிய பிரச்சினையாகிவிடும் என்பதால் சில எடுத்துக்காட்டுகளில் பொருள் வரையறை மேற்கொள்ளப்படவில்லை. 1982 கடல் சட்டத்திற்கான ஐக்கிய நாட்டு மரபோ அல்லது ஐக்கிய நாட்டு ஒப்பந்தமோ மீன்பிடிகலன்களுக்கான பொருள் வரையறையை கொண்டுள்ளது. மேலும் மீன்பிடிப்பு குறித்த தேசிய சட்டங்களில் மீன்பிடிகலன்களுக்கான பொருள் வரையறை மிகவும் பரந்தது ஆகும். இணக்க ஒப்பந்தத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருள் வரையறைக்கு மேலானது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

எ) “**கப்பலில் ஏற்றுமதி தொழில்**” எனின் ஒரு மீன்பிடி கலத்திலிருந்து மற்றொரு மீன்பிடி கலத்திற்கோ அல்லது முழுமையாக சரக்கு ஏற்றிச்செல்லும் கப்பலுக்கோ மாற்றும் பணி.

### 1.3 பயன்பாடு

4. தன்னார்வ அடிப்படையில் நாடுகளால் வழிமுறைகள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட வேண்டும்.

அ) கடல், பெருங்கடல், உள்நாட்டு நீர்நிலைகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கும்,

ஆ) மீன்பிடிப்போர், உரிமையாளர், மேலாளர், மீன்பிடி கலன்களுக்கான துறைமுக தலைவர் மற்றும் கடல்வழி போக்குவரத்து மற்றும் மீன்வள மேலாண்மை தொடர்பான தக்க அதிகாரமுடையோர்க்கும்,

இ) அனைத்து மீன்பிடி கலன்கள் மற்றும் பத்தி 3ல் வரையறுக்கப்பட்டவாறு மீன் ஏற்றிச் செல்லும் கலன்களுக்கும்.

## 2. அனைத்து நாடுகளுக்குரிய நடைமுறைகள் (பார்வை–பிரிவு 8.1 நடத்தை விதி தொகுப்பு)

### 2.1 மீன்பிடிப்பில் ஈடுபடுவோருக்கு

5. பொறுப்பார்ந்த மீன்பிடிப்பை ஊக்குவிக்க மீன்பிடிப்பில் ஈடுபடுவோருக்கு நாடுகள் கீழ்க்கண்ட வகையில் நிபந்தனைகள் ஏற்படுத்தி உறுதி செய்ய வேண்டும்.

அ) மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளோரின் ஆர்வம் அங்கீகரிக்கப்பட வேண்டும். மீன்வள ஆதாரத்தின் நலம் மற்றும் வம்சாவளிகிடையேயான பங்களிப்பு ஆகியவற்றிற்கு நீண்ட கால பங்களிக்க இவர்களுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்கப்படுதல்.

ஆ) மீன்பிடிப்போர் மற்றும் மீன்பிடிகலன் உரிமையாளர்களுக்கு தேவையற்ற பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளை அனுமதித்து போதிய வருமானத்திற்கு வகை செய்தல்.

இ) மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பாதுகாப்பு நலன் குறித்த விடயங்களில் பொருத்தமான மரபுகளின் பகுதிகளையும் மீன்பிடித்தொழிலில் வேலை மற்றும் பணி பற்றிய நிலை குறித்த குழுவின் பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு உரிய உணர்வு அளித்தல்.

ஈ) மேலாண்மை கொள்கைகளை விரிவாக்கும்பொழுது மீன்பிடிப்பில் ஈடுபட்டோரின் சிந்தனைகளை கருத்தில் கொள்ளும்வகையில் வழிமுறைகள் அமைத்தல்[2].

### 2.2 மீன்பிடிப்பிற்கு அங்கீகாரம்

6. தங்களுக்கு உட்பட்ட எல்லையில் உள்ள நீர்நிலையில் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளே நடைபெறுகின்றனவா என்பதை நாடுகள் உறுதிப்படுத்தவேண்டும்.

7. அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடி நடவடிக்கை பற்றிய தகவல்கள், அங்கீகரிக்கப்பட்டவரின் பெயர், முகவரி, பொருத்தமெனின் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் கலனின் தொழில்

---

2 *மீன்பிடிப்பில் ஈடுபட்டோர் மற்றும் மீன்வள மேலாண்மைக்கு பொறுப்பானவர்கள் இடையே கூட்டு ஊக்குவிக்கப்படவேண்டும். மீன்வள மேலாண்மைக்கான வழிமுறைகளில் மேலும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.*

நுட்ப தகவல்கள் மீன்பிடிப்புக்கான அங்கீகாரத்தில் இடம்பெற வேண்டும். நாடுகள் அவர்களால் மீன்பிடிப்பிற்காக வழங்கப்பட்ட அனைத்து அங்கீகாரத்திற்கான பதிவேடுகளை நிர்வகித்து அவ்வப்போது போதிய இடைவெளியில் புதுப்பிக்க வேண்டும்.

**8.** மீன்பிடிப்பிற்கான அங்கீகாரம் பெறுவோர் மீன்பிடி நடவடிக்கைக்கு பொருத்தமான இடத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிகளை தவறாது கடைபிடிக்கும் வகையில், அளிக்கக் கூடிய உறுதி மொழியே நிபந்தனையாக கொண்டிருக்க வேண்டும்.

**9.** மீன்பிடிப்பிற்கான அங்கீகாரம் அக்கறையான நிபந்தனைகளையும் கொண்டிருக்கும்.

அ) மீன்பிடிக்கப்படும் பகுதி, பிடிக்கப்படும் மீன் வகைகள், கலன் மற்றும் மீனவருக்கு உரிய பங்கு,

ஆ) மீன்பிடி வலை வகைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடி சாதனங்கள்,

இ) காலம்/பருவ கால கட்டுப்பாடுகள் சில வகையான மீன்பிடி கலன்களுக்கு உரிய சான்றிதழ் பெற வேண்டிய தேவை மற்றும்,

ஈ) கடற்பயண அதிகார பத்திர கட்டுப்பாடுகள்.

10. எச்சரித்தல் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பிற்காக நாடுகள் போதிய தொகுதிகளை நிர்மாணித்திட வேண்டும். மீன்பிடிப்பு நடவடிக்கைக்கான சட்ட அமுலாக்கம் மற்றும் தொடர்பான நடவடிக்கைகளுக்காக போதிய வசதிகள் செய்யப்பட வேண்டும்.

அ) எச்சரித்தல் கட்டுப்பாடு மற்றும் கண்காணித்தல் இவற்றிற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்குதல்[3].

ஆ) பாதுகாத்தல் மற்றும் மேலாண்மையில் போதிய அளவிற்கு முக்கியத்துவத்துடன் இணக்கமான செயலாக்கத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ள சட்ட ரீதியான அனுமதி வழங்குதல்.

இ) எச்சரித்தல் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊர்தி கலன் மற்றும் வான்ஊர்திகளுக்கு பொருத்தமான குறியீட்டு வசதிகள்.

ஈ) மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள அனைவரும் நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் தவறான நடத்தைக்கான அபராதம் ஆகியவற்றை அறியும் விதத்தில் உள்ள தொடர்பு சாதனங்களை உறுதிப்படுத்துதல்.

## 2.3 கல்வி, பயிற்சி மற்றும் சான்றளித்தல்

**11.** மீன்பிடிப்பில் ஈடுபடுவோர் மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் திறமையுடன் தங்கள் பணிகளை கவனிக்க ஏற்ற வகையில் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை பின்பற்றிட தேவையான வசதிகளை நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும். இதுகுறித்து நடத்தை விதி தொகுப்பின் பகுதிகளையும் பொருத்தமான பன்னாட்டு மரபுகளையும், சட்ட ரீதியிலான விபரங்களையும் செயல்முறைகளைம் உணரச் செய்தல் வேண்டும். அவர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய மீன்பிடிப்பு நடவடிக்கை மற்றும் அவர்களது பொது கல்வி நிலை ஆகியவற்றை கருத்தில்கொண்டே கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் அமைய வேண்டும். பாரம்பரிய மீனவர்களுக்கு சட்ட ரீதியானவற்றை புரியவைக்க முயல்வதை எதிர்பார்ப்பது ஏற்புடையது அல்ல. மாறாக பெரிய மீன்பிடிகலன்களை பொறுப்பு ஏற்க இருக்கும் நபர்கள் இதனை அறிந்திருக்க வேண்டும். வயதான பங்கேற்போர் பாதிக்கப்படாதவகையில் வசதிகள்

---

[3] *சில நாடுகள் எச்சரிக்கை கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு நோக்கங்களுக்காக வர்த்தக ரீதியிலான ஒப்பந்தத்தில் ஈடுபடுவதை பொருத்தமாக கருதுகிறது.*

ஊக்குவிக்கப்பட வேண்டும். அவர்கள் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புத்தாக்க பயிற்சிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். ஆகையால் சான்றிதழ்களுக்கு புதிய தேவை என்பதால் முதியோர் பிரிவும் உள்ளடங்கும்.

12. சான்றிதழ் வழங்கப்பட்டமைக்கான விவரங்களுக்கு பதிவேடுகள் நிர்வகிக்கப்பட வேண்டும். இவை உடனடியாக மீட்கப்பட வேண்டிய வகையில் அவை அமைப்பில் சேமித்து வைக்கப்பட வேண்டும். பதிவேட்டில் பதிவு கீழ்க்கண்ட தகவல்களை பெற்றிருக்க வேண்டும்.

- அ) வழங்கும் அதிகாரம் உடையவரின் விவரங்கள்.
- ஆ) சான்றிதழில் குறிப்பிடப்படும் கிளையின் விளக்கம்.
- இ) செல்லத்தக்க காலக்கெடு மற்றும் நோக்கம் குறித்து இணைத்த நிபந்தனைகள்.
- ஈ) உடையவரின் பெயர், பிறந்த தேதி மற்றும் நாட்டுரிமை.
- உ) தலைப்பு, வழங்கும் அலுவலரின் கையொப்பம், கையொப்ப தேதி.

13. இந்நிலையில், சான்றிதழ் என்ற வார்த்தைக்கு, மீன்பிடிகலன் பணியாளர்களுக்கான பயிற்சி சான்றளித்தல், கண்காணிப்பு பற்றி பன்னாட்டு மரபுகளில் (1995) வரையறுத்தவாறு அர்த்தம் ''எத்தகைய பெயரில் தெரிவிக்கப்படினும், வழங்கப்படினும் அல்லது மரபுகளுக்கு இணைந்து அங்கீகரிக்கப்படினும், பத்திரத்தில் தெரிவித்தப்படி உரிமையாளர் பணி புரிய அங்கீகரிக்கும் அல்லது தேசீய கட்டுப்பாட்டுப்பாடுகளின்படி அங்கீகாரம் பெற்ற முறையாக அமைந்த பத்திரம்'' என்பதே அர்த்தம் ஆகும்.

14. மீன்பிடிப்பு நடவடிக்கை தொடர்பான குற்றச்சாட்டு எனின், நபர் அல்லது நபர்களுக்கு வழங்கப்பட்ட கீழ்கண்ட அங்கீகாரத்தை இரத்து செய்தல், தற்காலிகமாக நிறுத்தி வைத்தல், அனுமதித்தல், மறுத்தல் ஆகியவற்றிற்கான பகுதிகள் உள்ளடங்கியுள்ளது என்பதனை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

- அ) மீன்பிடிக்க, மற்றும்,
- ஆ) கலனில் தலைவர்களாகவோ அலுவலர்களாகவோ பணியாற்ற

15. தவறு இழைத்த மீன்பிடிகலத்தின் அலுவலர்கள் அல்லது தலைவர்கள் குறித்து எடுத்த நடவடிக்கை பற்றி (மேற்குறிப்பிடப்பட்ட பத்தி 12ல் தெரிவித்தவாறு உள்ள) பதிவேடுகளிலும் பொருத்தமாக பணி பதிவேட்டிலும் மற்றும்/அல்லது குற்றம் சாட்டப்பட்டவரிடம் உள்ள தகுதி சான்றிதழிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு கொடியிட்ட நாடு (சான்று வழங்கிய நாட்டை தவிர்த்து) இதுகுறித்து மேற்கொண்ட நடவடிக்கையினை முழுதும் அறியும் வகையில், நடவடிக்கைகள், போதிய வகையில் எளிதில் தெளிவாக புலனாகும் விதத்தில் அமைதல் வேண்டும்.

16. அந்நிய நாட்டினரை நியமிக்க விரும்பி கொடியிட்ட நாடு கோரிக்கை அளிப்பின், சம்மந்தப்பட்ட பிற நாடு அந்நாட்டினரின் தகுதி குறித்து தகவல் தெரிவித்து ஒத்துழைக்க வேண்டும்.

## 2.4 பாதுகாப்பு

17. அனைத்து மீன்பிடி நடவடிக்கைகளும் பாதுகாப்புடன் மேற்கொள்ளப்படுவதை நாடு உறுதிசெய்ய வேண்டும்.

18. நாடுகள் ஒருங்கே ஏற்பாடுகள் செய்வதுடன் மற்றும் பொருத்தமான பன்னாட்டு நிறுவனங்களுடன் தேடுதல் மற்றும் காப்பாற்றுதலுக்கு ஒருங்கிணைந்த மீன்பிடிக் கலனின்

நடவடிக்கைகளுக்கு வகை செய்தல் வேண்டும். அத்தகைய நோக்கங்களுக்காக தொடரில் உள்ள மீன்பிடிகலன்களின் அளவு, வகை, தனிப்பட்ட கலன்களின் உத்தேச நிலை ஆகியவற்றை கருத்தில் கொள்வதுடன் கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளை பின்பற்ற உரிய ஆலோசனைகளை நாடுகள் வழங்க வேண்டும்.

அ) கரை மற்றும் துயர் உறும் கலனின் அருகாமையில் உள்ள கலனில் உள்ள தேடுதல் மற்றும் காப்பாற்றும் அதிகாரம் உடையோரை துயர நிகழ்வை விரைவாக தெரிவித்து எச்சரிப்பது, (IMO, GMDSS) அதனால் ஒருங்கிணைந்து (SAR) அவர்கள் உதவுவது என்பதே பாதுகாப்பின் அடிப்படை கருத்து.

ஆ) குறைந்த நேரத்தில் விரைவான நடவடிக்கை விரைவு, பாதுகாப்பான தொடர்பு, கடல் சார் பாதுகாப்பு தகவல்களை பிரகடனப்படுத்துதல், கடல் பயண தெளிவுரை, வானிலை அறிக்கை மற்றும் முன் அறிவிப்பு, கலன்களுக்கு இதர பாதுகாப்பு தகவல்கள் வழங்குதல் ஆகியவற்றிற்கு போதிய அமைப்புகள் பெற்றிருத்தல்.

இ) கடல் சார் நகரும் மற்றும் கடல் சார் நகரும் துணைக்கோள் சேவைக்கான பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் தொடர்பு அமைப்பு.

ஈ) கலனின் நிலை அறிவிக்கும் அமைப்பு.

**19.** நாடுகள் பொருத்தமாக இணைந்தோ அல்லது தனியாகவோ உள்நாட்டு மீன்வளத்திற்கும் பாதுகாப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல்[4].

**20.** வானிலை மற்றும் தவிர்க்கப்பட வேண்டிய இடங்களைப்பற்றிய தகவல்களை மீன்பிடிப்போர் அறியும் வகையில் முன்அறிவிப்பு மற்றும் ஒளிபரப்பு அமைப்புகளை நிர்மாணித்தல்.

## 3. கொடியிட்ட நாடுகளுக்கான வழிமுறைகள் (பார்வை–விதித் தொகுப்பின் பிரிவு 8.2)

### 3.1 கொடி பங்கீடு, மீன்பிடிப்பு அங்கீகாரம் மற்றும் பதிவேடுகள்.

**21.** பதிவு சான்றிதழ் அல்லது கொடி பங்கீடு தொடர்பான பத்திரம் அல்லது மீன்பிடி உரிமம் மூலம் கொடி பறக்கவிடும் உரிமை பெற்ற கலன்களின் விவரங்களைப் பதிவு செய்யும் அமைப்பை நிர்மாணித்தல். மீன்பிடிகலன்களுக்கு வழங்கப்பட்ட மீன்பிடிப்பிற்கான அங்கீகாரப் பதிவுகளை உடனடியாக ஒப்பிட்டுப் பார்க்க அனுமதிக்கும் அமைப்பு (பத்தி 7ல் குறிப்பிட்டபடி). பலநாடுகளில், கலனைப் பதிவு செய்யும் அதிகாரம் உடையவர், மீன்பிடிப்பு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் உடையவர் ஆகியவர் மாறுபடுவதால் இரு நடவடிக்கைகளுக்கும் இடையே இணைப்பு இருக்க வேண்டும். குறிப்பாக கொடி மாற்றும் கலன்களுக்கு இது முக்கியமானது.

**22.** மேலும் பத்தி 7ன் கட்டுப்பாட்டு விதிகளின்படி உரிமையாளர், மேலாளர் மற்றும்/அல்லது வாடகைக்கு அமர்த்துபவர் மேற்கொள்ளப்பட வேண்டிய நிபந்தனைகளை மீன்பிடி கலன்கள் பெறும் மீன்பிடிப்பிற்கான அங்கீகாரம் கீழ்க்கண்டவற்றிக்காக கொண்டிருக்க வேண்டும்.

---

[4] *பொதுவாக உள்நாட்டு நீர்வளம், கடல் சார் பாதுகாப்பு செயல்முறை திட்டங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சிறிய அளவிலான உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடல் மீன்வளம், சிறு தர மீனவர்கள் மீது நாட்டின் தனிக்கவனம் பெறுதல் வேண்டும்.*

அ) மீன்பிடி கலன்களுக்கான கொடி பங்கிடுதல்.

ஆ) தேசீய பதிவேட்டின் பதிவிற்காக கலனின் தகவல்கள்.

இ) பிடிப்பில், இருப்பில் உள்ளது, ஒதுக்கப்பட்டது போன்ற விபரங்கள், கலன் நிலை அறிவிப்பு.

**23.** கொடியிட்ட நாடுகள் தவிர்த்து ஆழ்கடலிலோ அல்லது இதர நாடுகளில் இயக்கப்படும் அல்லது இயக்க நினைக்கும் மீன்பிடிகலன்கள் நாட்டு நியமனம் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும்.

**24.** மேலும் கொடியிட்ட நாடு தவிர்த்து ஆழ்கடலிலோ அல்லது இதர நாடுகளில் இயக்கப்படும் அல்லது இயக்க நினைக்கும் நாடுகளின் மீன்வள ஆராய்ச்சி கலன்களுக்கு பதிவு சான்றிதழ் வழங்குதலை கொடியிட்ட நாடு உறுதி செய்யவேண்டும். அவைகளின் நடவடிக்கை குறித்து தகுதியான அங்கீகாரம் பெற்றவர் வழங்கிய அங்கீகாரத்தை கொண்டு செல்லவேண்டும். இதுகுறித்து அத்தகைய கலன்கள் பன்னாடுகள் சம்மதித்த செயல் விதி தொகுப்புகளை பின்பற்ற வேண்டும் [5].

**25.** பொதுவாக மீன்பிடிகலன்கள் முறையாக கட்டுப்பட்டு பொருத்தமான கீழ்க்கண்ட விவரங்கள் பதிவுசெய்யப்பட்ட பொது பதிவேடுகளை வைத்திருக்க வேண்டும்.

அ) கலனின் பெயர் அல்லது எண்.

ஆ) பதிவு செய்யப்பட்ட துறைமுகம்/தாய்துறைமுகம்.

இ) ITU பன்னாட்டு வானொலி அழைப்புக் குறி [6]

ஈ) கடலில் மோதலைத்தவிர்க்க ஏற்படுத்தப்பட்ட 1972 பன்னாட்டு கட்டுப்பாடுகளின்படி நீளத்தை அளக்கும் முறையில் கலனின் மொத்த நீளம்.

உ) 1977 டொர்ரிமோலினோஸ் மீன்பிடி கலன்களின் பாதுகாப்பிற்கான பன்னாட்டு கட்டுப்பாடு மற்றும் அது குறித்து மாற்றியமைக்கப்பட்ட 1993 டொர்ரிமோலினோஸ் வரைறைகளின்படி பதிவு செய்யப்பட்ட நீளம்.

ஊ) 1969 பன்னாட்டு மரபுகளின் உட்புற கொள்ளளவு வரையறைப்படி பதிவு செய்யப்பட்ட கொள்ளளவு.

எ) கட்டுமானப்பொருள்.

ஏ) கலன் மாதிரி/மீன்பிடி முறை(கள்)

ஐ) உட்பகுதியின் கொள்ளளவு கன மீட்டரில் மற்றும் செலுத்தும் குழுவினரின் எண்ணிக்கை.

ஒ) பிரதான இயந்திரங்(களின்) குதிரைச்சக்தி(kw).

ஓ) கட்டுமான தேதி(பொருந்துமெனில்) லாயிட்ஸ் பதிவு எண்.

ஔ) (பொருந்துமெனில்) INMARSAT எண்

க) (உரிமையாளர்(கள்) மற்றும் மேலாளர்(கள்)) பெயர்(கள்) மற்றும் முகவரி

கா) அடமானம், கடல்சார் உரிமை மற்றும் இதர தடை பற்றிய விவரங்கள்.

---

5 *கொடியிட்ட நாட்டை தவிர்த்து இதர பகுதிகளில் இயங்கும் மீன்வள ஆராய்ச்சி கலன்கள் மேற்கொள்ள வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் இணைப்பில் தரப்படும்.*

6 *ஒன்றியம் அல்லது நாடுகளால் ஒதுக்கப்பட்ட பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றிய அழைப்பு க்குறிகளின் விவரங்கள் மீன்பிடிக் கலன்களின் விற்பனைக்கான திட்டமிட்ட தெளிவுரைகளின் மாதிரிகள் பார்வையில் உள்ள இணைப்பு **11** ல் உள்ளன.*

26. கொடி பங்கீடு பெற்றமைக்கான பத்திரம் அல்லது மூலப்பதிவுச்சான்றிதழை, தன்னால் கொடி பங்கீடு செய்யப்பட்ட கலன்கள், கலனில் கொண்டு செல்கின்றன என்பதை கொடி நாடு உறுதி செய்யவேண்டும். மேலும் கலன்கள், உரிய அதிகாரம் உடையோரால் வழங்கப்பட்ட மீன்பிடி அங்கீகாரத்தையும் எடுத்துச்செல்ல வேண்டும்.

27. கலன், தன் பாதுகாப்பில் பயணமாகிறது என்பதனை பிற நாடுகளுக்கு உணர்த்தும்வகையிலான பத்திரத்தையும் கொடி நாடு வழங்க வேண்டும். கட்டப்பட்ட இடத்திலிருந்து கலன் கொடியிட்ட நாட்டிற்கு வழங்கப்படும்பொழுதோ புதிதாக கொடியிட்ட நாட்டிற்கு உள்ளதாகும்படி விற்பனை செய்யப்படும்பொழுதோ பதிவினை மற்றொரு நாடு முடிவிற்குகொண்டுவரும்பொழுதோ இந்த வசதி பயனுள்ளதாக இருக்கும். புது கொடியிடும் நாடு, வந்தவுடன், முறையான பதிவு சான்றிதழ் (அல்லது தற்காலிக சான்றிதழ்) சாதாரணமாக வழங்கப்படும்.

28. தேசீய பதிவேட்டில் மீன்பிடி கலன்களின் பதிவு அல்லது நுழைவினை முடிவாக்க அளிக்கப்படும் விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆதார தகவல்கள் இணைக்கப்பட வேண்டும்.

அ) விண்ணப்பத்திற்கானகாரணம் (இயக்கத்தை நிறுத்திக்கொள்ளுதல்/ நீக்குதல்/ விற்பனை) மற்றும்,

ஆ) பொருந்துமெனில் புதிய உரிமையாளர்களின் முகவரி(கள்) நாட்டுரிமை(கள்).

29. முடிவாக்கியதையும் மற்றும் தெரிந்திருப்பின் புதிய கொடியிட்ட நாட்டின் பெயர் பற்றிய விவரங்கள் பொருத்தமான பன்னாட்டு நிறுவனங்களுக்கும் மற்றும் கடல் வாழ் ஆதாரங்களைப்பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தலுக்கான பன்னாட்டு ஒப்பந்தத்தில் அங்கம் பெறும் நாட்டு பங்குதாரர்களுக்கும் கொடியிட்ட நாடு அங்கம் வகிக்கும் எனின், வழங்கிட வேண்டும்.

30. மீன்பிடிகலன், கூட்டுமுயற்சி ஒப்பந்தத்தில் உள்ளது எனில், கொடியிட்ட நாடு பதிவினை நீக்காது எப்போதும் கலனிற்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டதாக இருக்க வேண்டும். இந்நிலையில் வாடகைக்கு அமர்த்த பத்திரங்களை மாற்றி கொடுக்கும் நிலையில் அலுவலர்கள் அல்லது செலுத்துவோர் இல்லாத வெறுமையான நிலையில் குறிப்பிட்ட காலத்திற்கு கலன் வாடகைக்கு அமர்த்த இவ்விதிமுறைகளுக்கு விலக்கு இருக்கலாம் என்பது முக்கியமாக குறிப்பிடத்தக்கது. வாடகைக்கு அமர்த்த தொடக்க பதிவேடுகளை சில நாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் அல்லது நீக்கலாம்.

### 3.2 மீன்பிடிகலன் பராமரிப்பு மற்றும் உரிமை கட்டளை அளவை

31. தேசீய விதிமுறைகள், அது அங்கம் வகிக்கும் பன்னாட்டு மரபுகளில் பொருந்தும் பகுதிகளுக்கு இணைந்து தனது கொடியினை பறக்கவிட உரிமை கொண்ட கலன்கள் பராமரிக்கப்படுகின்றன என்பதனையும், எந்நேரத்திலும் பதிவேடுகள் சரியாக உள்ளன என்பதையும், கொடியிட்ட நாடு உறுதி செய்யவேண்டும்.

32. அதிகாரம் படைத்த அலுவலர், பொருந்தியவகையில் அளவை பணிக் கலன் ஒன்றை நிர்வகிக்க வேண்டும். இது, மற்ற நாடுகள் அல்லது கொடியிட்ட நாட்டில் குறிப்பாக எப்பொழுதேனும் செல்லும் துறைமுகத்தின் பெருவாரியாக வகைப்படுத்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் மூலமாக செய்த ஏற்பாடுகளின் உதவியுடன் அமையும்.

33. கொடியினை பறக்கவிட உரிமை கொண்ட தனது கலன்களில் நீர்வாழ் சுற்றுப்புறத்தை தீங்காக்கும் பொருட்களை கொண்ட மாசுபடுத்தும் வர்ணங்களை

உபயோகப்படுத்துவது இல்லை என்பதை அடிக்கடி மேற்கொள்ளும் ஆய்வுகள் மூலம் கொடியிட்ட நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

### 3.3 மீன்பிடி கலன்களின் நிலை அறிவிப்பு

**34.** அனைத்து மீன்பிடி கலன்களும் பொருத்தமான மீன்பிடிப்பு மற்றும் கடற்பயண சாதனங்களை வைத்திருக்க வேண்டும். உரிய தகுதி படைத்த அலுவலருக்கு தவறாது கலனின் நிலை அறிவிக்க வேண்டும். நிலை அறிவிக்க பல வழிமுறைகள் உள்ளன. கலனின் அளவு, செயல்படும் இடம், அமுலில் உள்ள பாதுகாப்பு பின்னணி ஆகியவற்றிற்கு ஏற்ப அறிவிக்க வேண்டும். கலனின் வானொலி தொடர்பு அல்லது துணைக்கோள் தொடர்பு மூலம் கலன் தன் நிலை அறிவிக்க உரிய சாதனங்களை கலன் கொண்டு செல்லும் தேவையை மீன்பிடி அங்கீகாரம் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

### 3.4 மீன்பிடி கலன் மற்றும் மீன்பிடி சாதனங்களுக்கு அடையாளம் இடுதல்

**35.** ஏப்ரல் 10–14,1989 உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வள குழு தனது 18வது அமர்வில் தன்னார்வ அமைப்பில் பின்பற்ற ஒப்புதல் அளித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமான தெளிவுரை மாதிரி மற்றும் வழிமுறைகளுக்கு இணங்கும் வகையில் கொடி பறக்க உரிமை பெற்ற கலன்கள் அடையாளம் இடப்படுவதை கொடியிட்ட நாடு உறுதி செய்ய வேண்டும். (இணைப்பு II பார்வை)

**36.** தேசீய சட்டம் இயற்றல், வலை சாதனங்களின் உரிமையாளரை அறிய மீன்பிடி வலை மற்றும் மீன்பிடி சாதனங்களுக்கு அடையாளம் இடும் தேவையை கொண்டிருக்க வேண்டும். அத்தேவைகள் ஒரே மாதிரியான, பன்னாடுகளிலும் அடையாளம் காணத்தக்க சாதன அடையாள முறைகளை கணக்கில் கொள்ள வேண்டும். வலைகள், கயிறு, கடலில் நங்கூரம் இட பயன்படும் சாதனங்கள், இதர சாதனங்கள் மற்றும் மீன்களை திரட்ட பயன்படும் சாதனங்கள், கடலில் வழிந்திடும் வலைகள், கயிறுகள் மீன்களை திரட்ட பயன்படும் சாதனங்கள் ஆகியவைகளும், அவற்றின் நிலை மற்றும் பரப்பினை அறியும் வகையில் அடையாளம் பெறப்பட வேண்டும். மேலும் தகவல்கள் கீழ்க்கண்டவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

அ) இணைப்பு 3 மீன்பிடி வலைகளை அடையாளம் இட ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகள்.

ஆ) இணைப்பு 4 மீன்பிடி வலைகள் அறிதல் மற்றும் நிலைகாணலுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விளக்கு மற்றும் வடிவம் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்.

### 3.5 மீன்பிடி கலன்களின் பாதுகாப்பு

**37.** அனைத்து வகை மற்றும் அளவு கொண்ட மீன்பிடி கலன்களுக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

**38.** மீன்பிடி கலன் பாதுகாப்பிற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க கட்டுப்பாடுகள் அமைக்கப்படும்பொழுது நாடுகள் கீழ்க்கண்டவற்றை கணக்கில் கொள்ள வேண்டும்.

அ) 1977 டொர்ரிமோலினோஸ் மீன்பிடி கலன்களின் பாதுகாப்பிற்கான பன்னாட்டு கட்டுப்பாடு மற்றும் அது குறித்து மாற்றியமைக்கப்பட்ட 1993 டொர்ரிமோலினோஸ் மூலக்கூறு (வழக்கில் இல்லாது)

ஆ) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு/ILO/IMO ன் மீனவர், மீன்பிடி கலன்களின் பாதுகாப்பு விதி தொகுப்பு.

இ) சிறிய மீன்பிடி கலன்கள் மற்றும் சாதனங்கள் வடிவமைப்பு, கட்டுமானத்திற்கான உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு/ILO/ IMOவின் தன்னார்வ வழிமுறைகள்.

### 3.6 பயிற்சி மற்றும் சான்றளித்தல்

**39.** பத்தி **11** முதல் **16** வரையிலுள்ள வழிமுறைகள் மூலமாகவும் கொடி நாடுகள் பயிற்சி பெற்ற, அனுபவம் பெற்ற பொருத்தமான இடத்தில் சான்றளிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே தங்கள் கொடி பறக்க உரிமை பெற்ற கலன்களில் பொறுப்பிலுள்ளனர் என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும். இதனில், மீனவருக்கான பயிற்சி மற்றும் சான்றளித்தலில் ILO/ IMO/ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு பத்திரத்தின் பகுதி அல்லது மாற்றியமைக்கப்பட்டவாறு கணக்கில் கொள்ள வேண்டும். மீன்பிடி கலன் அலுவலர் மற்றும் கலன்களை செலுத்துவோர் சான்றிதழுக்கு திறன்பெற உள்ள நபர்களை பயிற்சி, பிற அதிகாரம் படைத்தோரால் நடத்தப்படுவது வழக்கமானஒன்று என்பதால், அத்தகைய அதிகாரம் உடையோரின் கவனத்திற்கு விதித் தொகுப்பு கொண்டு வரப்படுவதை நாடு உறுதிப்படுத்த வேண்டும். விதித்தொகுப்பின் பகுதிகளில் சான்றிதழுக்கு திறன்பெற நடைபெறும் தேர்விற்காக தயார் செய்யும்பொழுது பயிற்சியாளர் விதித் தொகுப்பில் நன்கு பரிச்சயம் பெற வேண்டும்.

**40.** ஒரு கொடி நாடு,

அ) தனது கொடியினை பறக்க விடும் உரிமையுடைய மீன்பிடி கலத்தில், கலத்தின் தலைவர் அல்லது பிற அலுவலர்களாக பணிபெறும் வாய்ப்பிலுள்ள பிற தேசத்தவர் போதுமான பயிற்சி பெற்றவர் என்றும்,

ஆ) பொருந்தும் இடத்தில், அவர்களது திறனுக்கான சான்றிதழ் கொடி நாட்டின், நாட்டினருக்கான தேவையை ஒத்திருத்தல் வேண்டும் என்றும் உறுதியளித்திட வேண்டும்.

**41.** வெளிநாட்டு கொடி உடைய கலன்களில் பணியாற்றும் வாய்ப்பிலுள்ள நபர்களின் விவரங்களை, கொடி நாடு கோரும் நாடு, கொடுத்து ஒத்துழைக்க வேண்டும்.

**42.** உரிமையாளர்கள், மேலாளர்கள் மற்றும் வாடகைக்கு அமர்த்துவோர் மேற்கொள்ளப்பட உள்ள பயணத்திற்கு கலன்களின் பதிவேடுகள் சரியான நிலையில் உள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக பதிவு சான்றிதழ் முறைப்படி அமைந்ததாக இருக்க வேண்டும். செல்லுபடியாகாத சான்றிதழ், கலனை நாடு அற்றதாக மாற்றிவிடும். இப்பாகுபாடு பிற நாட்டு பகுதிகளிலோ அல்லது ஆழ்கடலிலோ, கலனின் இயக்கத்திற்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்.

### 3.7 காப்புறுதி நுழைவு/வாய்ப்பு

**43.** உரிமையாளர், மேலாளர் மற்றும்/அல்லது வாடகைக்கு அமர்த்துவோர், கலன் செலுத்துவோர், மூன்றாவது நபருக்காக கடன், இடத்திற்கு இடம் மாறுபடும் உண்மையான தேவைகள் ஆகியவற்றிற்காக காப்புறுதிபெறும் வாய்ப்பை கொடி நாடு எளிதாக்க வேண்டும்.

அ) அந்நிய செலாவணி பெறும் வாய்ப்பு

ஆ) கடல் சார் பொதுவான அமைப்புகளை எளிதாக்குதல்

இ) பிற சட்டப்படியான கட்டுப்பாடுகள் (எ.கா சட்டப்படியான கடன் கட்டுப்பாடு)

44. கலன் செலுத்துவோர் மூன்றாவது நபருக்கான இழப்பு, மீன்பிடி கலன் இயக்கத்தினால் ஏற்படக்கூடிய தூய்மைக்கேடு ஆகியவற்றிற்காக மீன்பிடி கலனின் உரிமையாளர், மேலாளர் மற்றும் அல்லது வாடகைக்கு அமர்த்துபவர் காப்புறுதி பெறும் தேவை ஏற்படும். கலன் மானியம் அல்லது கலன் விண்ணப்பம் பெறும் நிலையிலும் கலனின் இழப்பு மற்றும் சேதத்திற்கான காப்புறுதி பாதுகாப்பு தேவை ஏற்படும்.

### 3.8 கலன் செலுத்துவோரின் மீட்பு

45. கடல் பயணம் செய்வோரின் மீட்பு மரபுகளில் (1987 எண் 166) அமைந்துள்ள கொள்கைகளுக்கு உட்பட்டு கலன் செலுத்துவோர் மீட்புக்கு உரிமையுடைவயர் என்பதனை கொடி நாடு உறுதி செய்ய வேண்டும். கட்டுரை 1 (2) அதிகாரம் உடைய மற்றும் சமூக பங்குதாரர்களுடன் ஆலோசித்து செயல்படுவதற்கு மீன்பிடி கலன்களுக்கு மரபுகள் வழி வகுத்துள்ளது.

## 4. துறைமுக நாடுகளுக்கான வழிமுறைகள் (பார்வை–பிரிவு 8.3 விதி தொகுப்பு)

### 4.1 அந்நிய கொடி நாட்டிற்கான உதவி

46. பன்னாட்டு விதிகளுக்குட்பட்டு பயன்படுத்தத் தக்க பன்னாட்டு ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளையும் சேர்த்து, தான் நிறைவேற்றவும் பிற நாடுகளுக்கு விதித்தொகுப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றிட உதவும் வகையில், துறைமுக நாடு தேசீய சட்டம் இயற்றலில் வழி வகை நிறுவப்பட வேண்டும். அதன் விபரங்கள் அவற்றை செயல்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்ற எல்லா நாடுகளுக்கும் கிடைக்க துறைமுக நாடு ஏற்பாடு செய்ய வேண்டும்.

47. பிற நாடுகளின் கலன்களுக்கு எதிராக வடிவம் மற்றும் உண்மையில் வேற்றுமை காணுதல் கூடாது.

### 4.2 துறைமுக நாட்டின் ஆய்வு

48. மீன்பிடிக்கும் கலன், துறைமுக நுழைவில் திறன் உடைய அதிகாரம் படைத்தவரிடம் கலன், சரக்கு செலுத்துவோர் பற்றி வழங்கவிருக்கும் தேவையான பத்திரங்களை, துறைமுக நாடு ஆய்வு செய்தல் வேண்டும். மீன்பிடி கலன்[7] மற்றும் அதன் பத்திரங்களின் பரிசீலனையும் அவைகளுள் அடங்கும்.

அ) கலனின் பதிவு பற்றிய சான்றிதழ் கலன் பறக்கவிடும் கொடியை பங்கீடாக பெற்றது தொடர்பான இதர ஆவணங்கள்

ஆ) கலனின் பாதுகாப்புச் சான்றிதழ்

இ) மீன்பிடிக்கும் அங்கீகாரம்

ஈ) பொருந்துமிடத்தில், இதன் ஆழ்கடல் மீன் பிடிப்புக்கான அங்கீகாரம்

---

7 *மேலும் வழிமுறைகள் IMO மரபு வழி உள்ளன*
- *எளிதாக்கப்பட்ட பன்னாட்டு கடல் போக்குவரத்து மரபுகள் (FAL)*
- *கடலில் உயிர்ப்பாதுகாப்பு மரபுகள் (SOLAS)*
- *1977 டொர்ரிமோலினோஸ் மீன்பிடிகலன்களின் பாதுகாப்பிற்கான பன்னாட்டு கட்டுப்பாடு மற்றும் அதுகுறித்து மாற்றியமைக்கப்பட்ட 1993 டொர்ரிமோலினோஸ் முறைமை குறித்து.*

உ) இவற்றின் இணக்கத்தைத் தீர்மானிக்க மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடித்தலைப் பரிசீலித்தல்

i) துறைமுக நாட்டின் தனிப்பட்ட பொருளாதார மண்டத்தில் இயங்கும் கலன்களுக்கான தேசீய கட்டுப்பாடுகள்

ii) கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல் மேலாண்மை சுற்றுப்புறச்சூழ்நிலையைப் பாதுகாத்தல் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்கள்.

### 4.3 காவலில் வைத்தல்

**49.** கலன் மேற்கண்ட தேவைகளுக்கு இணக்கமானது அல்ல என்று நம்புவதற்கு போதிய காரணம் இருப்பின் துறைமுக நாடு மீன்பிடிகலனை காவலில் வைக்கலாம். அப்படி இல்லாவிடில் 47 (ஆ) துணைப்பத்தியின் படி.

அ) அந்த துறைமுகத்தில் குறைகள் நிறைவு செய்யப்பட இயலாதவை

ஆ) கடற்பயண சாதனம் மற்றும் கலத்தின் உந்து இயந்திரம், அவசரகால அல்லது உபரி சாதனங்கள் போதிய அளவில் நிரூபித்துக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

இ) பிரிவில் உள்ள கலன் குறித்து பங்கீட்டு சங்கம் சார்பான அளவையாளர் ஒப்புதல் தெரிவிப்பின்.

**50.** கண்டுபிடித்த குறைபாடுகள் பற்றியும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிபும் உடனடியாக கொடிநாட்டிற்கு துறைமுக நாடு தெரிவிக்க வேண்டும். துறைமுக நாடு, கொடி நாட்டின் கோரிக்கையின்படி, நிலைமைக்கு ஏற்றவாறு எந்த மேல் நடவடிக்கையையும் எடுத்திட தயார்நிலையில் இருக்க வேண்டும்.

**51.** மீன்பிடிகலன் தகுந்த காரணமின்றி முடக்கப்படுதல் கூடாது[8]. தகுந்த காரணமின்றி கலன் முடக்கப்பட்டதாக உரிமையாளர் கருதினால் துறைமுக நாட்டிடம் இழப்பீடு கோரலாம்.

**52.** மேற்கண்ட பத்தி 49 ஐத் தொடர்ந்து, துறைமுக நாடு பன்னாட்டு மரபிற்கு இணங்க சட்ட ரீதியாக துறைமுக நாடு பங்கு பெறும் மண்டல ஒப்பந்தப்படி, தேவைக்கு ஏற்ப தொடர்புடைய பன்னாட்டு அமைப்புகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

### 4.4 சான்றிதழ் மற்றும் மீன்பிடி அங்கீகாரம் செல்லத்தக்க நிலை

**53.** துறைமுகத்தை விட்டு வெளியேறியபின், ஆழ்கடலில் மீன்பிடிகலன் இருக்கும் பொழுது, கொடி பங்கீடு அல்லது மீன்பிடி அங்கீகாரம் பெற்றமைக்கான சான்று அல்லது ஆவணம் காலாவதியாகும் பட்சத்தில், கொடி நாட்டிற்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும். ''ஆழ்கடலில் மீன்பிடிகலன்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பன்னாடுகளுக்கிடையேயான பாதுகாத்தல் மேலாண்மை நடைமுறைகள் பற்றிய இணக்கத்தை ஊக்கப்படுத்தும் ஒப்பந்தம்'' தொடர்பான பகுதியில் கலன் இயக்கப்படின், அப்பகுதியின் மீன்வள மேலாண்மையை நிர்வகிக்கும் தகுதியுடைய அமைப்பிற்கு இத்தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்[9].

---

[8] *பன்னாட்டு மரபில் முடக்கத்திற்கான பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன டொர்ரிமோலினோஸ் முறைமைகளைப் பார்க்கவும்.*

[9] *பெரிய சரக்குக்கப்பல்களுக்காக பல மண்டல அளவிலான பரஸ்பர நல்லெண்ண உடன்படிக்கை (M.O.U) பொருள் நினைவுக்குறிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை மீன்பிடிக்கலன்களை நீக்கியுள்ளன. ஆனால் பிற கலன்கள் விதித்தொகுப்பில் அடங்காது. துறைமுக அளவையாளர்களின் குறைபாடுகள் பற்றிய குற்றச்சாட்டுகளினால் IMO வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தையினை விரிவுபடுத்தியுள்ளது.*

### 4.5 நாடு அற்ற மீன்பிடிகலன்

54. ஒரு கலன் இரு மாநில கொடிகளுடன் வசதிக்கு ஏற்ப கொடிகளை உபயோகிப்பதாக நம்புவதற்கு போதிய காரணம் இருப்பின், துறைமுக நாடு, கலனை, நாடு அற்ற கலனாக நடத்தி முடக்கம் செய்ய வேண்டும். துறைமுக நாடு மேற்கொண்ட செலவினத்தை ஈடுசெய்வதற்கு தேவையெனில் கலனை விற்பனை செய்துவிடலாம்.

### 4.6 பயிற்சி

55. துறைமுக நாட்டின் ஆய்வாளர்கள் மற்றும் அளவையாளர்களுக்கான பயிற்சியில் வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையை பின்பற்ற நாடுகள் தங்களுக்கிடையே ஒத்துழைக்க வேண்டும்.

## 5 மீன்வளபாதுகாப்பிற்கான வழிமுறைகள்

### 5.1 மீன்வளபாதுகாப்புக் கலன்கள்

56. பத்தி 10 ல் அமைக்கப்பட்டவாறு, எச்சரிக்கை செய்தல், கட்டுப்படுத்துதல், எச்சரிக்கையுடன் கண்காணித்து சட்டத்தை அமுலாக்குதல் ஆகியவற்றிகாக நாடுகள் வசதிகளை நிறுவ வேண்டும். ஊர்திகள், கலன்கள், வானூர்திகள் மற்றும் பிற உபயோகங்களும் இதனுள் அடங்கும்.

57. பத்தி 55 ல் கண்ட நோக்கங்களுக்காக நாடுகள் ஒதுக்கிய கலன்கள், சட்டத்திற்குப் புறம்பாக மீன்பிடிப்பில் ஈடுபடுவதாக சந்தேகப்படின், எந்த ஒரு கலனையும் நிறுத்தவோ அல்லது உள்ளே சென்று பறக்க விடப்பட்டுள்ள கொடிக்கான உரிமையை பெற்றுள்ளதா என்பதனை நிர்ணயிக்கவும் சரியான அடையாளம் இடப்படாவிடில், பெயர், பதிவுத்துறைமுகம், சார்ந்த நாடு இவற்றைத் தீர்மானிக்கவும் உரிமை பெற்றுள்ளன. மீன்வள பாதுகாப்புக் கலனின் நாட்டினைத் தவிர்த்து, பிற கொடி நாடுகள் கொடியினைப் பறக்க விடும் கலன்களுக்கு, இத்தகைய குறுக்கீடுகள் செல்லத்தக்கனவையே.

58. மீன்வள பாதுகாப்புக்கலன் தெளிவாக குறியிடப்படவேண்டும். மீன்பிடிகலன் செலுத்துவோரிடையே இத்தகைய நோக்கம் குறித்த சந்தேகங்களை விலக்குவதற்காக அரசு பணியில் உள்ளது என அடையாளப் படுத்தப்படல் வேண்டும். மேலும் குறிப்பாக இது,

அ) மீன்பிடிகலன்களுக்கு குறியிடுதல் மற்றும் அடையாளம் இடுதல் பற்றிய ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமான தெளிவுரைகளுக்கு இணங்க குறியிடப்பட வேண்டும்.

ஆ) ''மீன் வளபாதுகாப்புக்கலன்'' என்று கலனின் இரு புறங்களிலும் நீர்ப்பரப்பிற்கு மேலாக வர்ணத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். மீன்பிடிக்கலன்களுக்கு குறியிடுதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமான தெளிவுரைகளுக்கு இணங்க எழுத்துக்களின் நடை மற்றும் அளவு இருக்க வேண்டும்.

இ) பின்னணியில் வேறுபடுத்திக் காட்டும் நிலையில் இரண்டு வர்ணப்பட்டைகள் ஒவ்வொன்றும் 0.8 மீ அகலம் 0.8 மீ இடைவெளியில் அடிமட்டக் கோட்டிலிருந்து 60$^\circ$ கோணத்தில் முன்புறமாக சாய்ந்தவாறு அமைக்கப்பட வேண்டும். முன்புறம் தள எல்லைக் கோடுகளுக்கிடையே மேற்கண்ட அ) மற்றும் ஆ) படி காண்பிக்கப்பட்ட குறிகளையும் கலனின் பெயரை மறைக்காத வண்ணம் அமைக்க வேண்டும்.

59. கொடி நாடு பங்கு பெறும் பொருத்தமான பன்னாட்டு மரபு அல்லது ஒப்பந்தத்தின்படி ஆழ்கடல் பகுதியில், தனிபட்ட பொருளாதார மண்டலத்தில் மீன்வளப் பாதுகாப்புக்காண கலனின் தலைவர், அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் என்பதனை உறுதிப்படுத்தும் பத்திரத்தினை மீன்வள பாதுகாப்புக் கலன் கொண்டு செல்ல வேண்டும்.

## 5.2 மீன்வள பாதுகாப்பு அலுவலர்கள்

60. மீன்வள பாதுகாப்பு அலுவலர்களின் அதிகாரம் குறித்த விபரங்களை சான்றிதழ் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள், பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலமாக மீன்பிடிப்போர் உணரும் வகையில் அறிய வகை செய்தல் வேண்டும்.

61. மீன்வள பாதுகாப்பு நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் பொதுவான அதிகாரங்கள், ஆணையிடும் நாட்டைச் சார்ந்த எந்த ஒரு மீன்பிடிக்கலனும், ஆணையிடும் நாடு பங்கு பெறும் ஆழ்கடல் மீன் பிடிப்பு பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை முறைகளுக்கான பன்னாட்டு ஒப்பந்தப்படி இருக்க வேண்டும். விவரம் பின்வருமாறு :

அ) கலனை (மீன் பிடிகலன்) நிறுத்த தலைவருக்கு காரணங்கள்

ஆ) தலைவர் மீன் பிடிப்பை நிறுத்துதல் மற்றும் இயக்கப்பட்ட மீன் பிடி வலைகளை திரும்பவும் கலனுக்கு கொண்டு வருதல்

இ) உரிய அனைத்து வழிகளின்படி மீன்பிடிகலன் ஏற்றலை எளிதாக்குதல்

ஈ) அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் அதிகாரங்களை செயல்படுத்த உதவும் தேவையான நபர்களுடன் மீன்பிடி கலனுக்கு செல்லுதல்

உ) கலன் செலுத்துவோர் அல்லது அவர்களில் ஒருவர் பற்றிய ஏதேனும் பதிவுச்சான்றிதழை, மீன் பிடிப்பு விபரப்பதிவுகளை, கலன் பற்றிய செலுத்துவோர் அல்லது மீன் பிடிகலனில் உள்ள எந்த ஒரு நபரைப் பற்றிய பத்திரத்தையும் தேவையெனில் தலைவர் முன்னிலைப் படுத்துதல்

ஊ) மேற்குறிப்பிட்ட எந்த ஒரு பத்திரத்தையும் பரிசீலித்து நகல் எடுத்துக் கொள்ளுதல்; கலன் செலுத்துவோரைக் கணக்கெடுத்தல்

எ) நேரில் ஆஜராகி கலன் செலுத்துவோர் அல்லது கலனில் உள்ள எந்த ஒரு நபர் பத்தி 2 ல் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு பத்திரம் பற்றிய விளக்கத்தையும் தலைவர் அளித்தல்

ஏ) நாட்டின் தேசீய சட்டத் தொகுதிக்கும், நிலைக்கும் ஏற்ப ஆழ்கடல் பன்னாட்டு ஒப்பந்தத்திற்கு முரணாக செயல்பாடு உள்ளதா என்பதனை அறிய தேவை இருப்பதாகக் கருதப்படின், தேடல், பரிசீலனை மற்றும் விசாரணை.

ஐ) பாதுகாப்புக்கலன் கொடி நாட்டின் துறைமுகம் ஒன்றிற்கு, நிலைக்கு ஏற்றாற்போல் ஆழ்கடல் பரப்பிற்கான பன்னாட்டு ஒப்பந்தத்தில் கொடுக்கப் பட்டுள்ள துறைமுகத்திற்கு தேடல், பரிசீலனை மற்றும் விசாரணை நோக்கத்திற்கு கலனை கொண்டு செல்லுதல்

ஒ) ஆணையிடும் நாடு பங்கு கொண்ட பன்னாட்டு ஒப்பந்த கட்டுப்பாடுகளுக்கு எதிராக எந்த ஒரு நபரும் குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் நிலையில், அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் எந்த வித கட்டளை அதிகாரப் பத்திரம் அல்லது பிற செய் வகையின்றி குற்றம் புரிந்ததாக சந்தேகப்படும் நபரை கொண்டு செல்லுதல், குற்றம் உள்ளதாக கருதப்படும் கலனை செலுத்துவோருடன் ஆணையிடும் நாட்டின் துறைமுகத்திற்கு கொண்டு செல்லுதல் மேலும் அவர்களை தகுதி வாய்ந்த நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தல், கலன், செலுத்துவோர், கலன் தலைவர் ஆகியோரை சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுக்குத் தீர்ப்பு அளிக்கப்படும் வரை காவலில் வைத்தல்,

ஓ) காவலில் உள்ள மீன்பிடிகலன் விடுவிக்கப் படுவதற்கு முன்பாக கலனை வேறு யாரேனும் எடுத்துச் செல்வதை தடுத்திட பறிமுதல் செய்யப்பட்ட, கொண்டு வரப்பட்ட அல்லது முடக்கம் செய்யப்பட்ட கலன்களை அசைவற்றதாக செய்து மீன் பிடிகலனின் பாதுகாப்பிற்கு ஏற்பாடுகள் செய்தல்

ஔ) குற்ற நடவடிக்கைகளில் உபயோகப்படுத்தப்பட்ட எந்த ஒரு மீன் பிடி வலை சாதனங்கள் மற்றும் கருவிகளை பறிமுதல் செய்தல்.

க) குற்ற நடவடிக்கைகளில் பிடிக்கப்பட்டதாக கருதப்படும் மீன் மற்றும் மீன்உபபொருட்களை பறிமுதல் செய்தல்

கா) குற்றம் தொடர்பானதாக கருதப்படும் எந்த ஒரு பத்திரத்தையும் பறிமுதல் செய்தல் அல்லது நகலெடுத்தல்

**62** மேற்கண்ட பத்தி **60** ல் குறிப்பிடப் பட்ட அதிகாரங்களை செயல்படுத்தும் பொழுது தேவையான ஏற்புடைய வலிமையினை அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் உபயோகிக்கலாம்

**63.** அருகில் உள்ள துறைமுகத்திற்கு பாதுகாப்புடன் செல்ல விடுக்கும் கோரிக்கைக்கு மீன் பிடிகலன் இணங்கிட மறுக்கும் நிலையில், அக்கலன் எச்சரிக்கப்பட்டு அதன் நிலை மீன் வளபாதுகாப்புக் கலனுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். மீன் பிடிகலன்துறைமுகத்தை வந்து அடைந்த நிலையில், மீன்வள பாதுகாப்புக் கலனின் தலைவர், தளத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் துணையோடு தக்க அதிகாரம் உடையவரிடம் ‘‘மறுப்புரை’’ புகார் அளிக்க வேண்டும். மீன் பிடிகலன் தொடர்ந்து மீன் பிடிக்க விரும்பினால், மீன் வளபாதுகாப்புக் கலன் உரிய நடவடிக்கை எடுத்து மீன்பிடி வலைகளை வேறுபடுத்தி தக்க அதிகாரம் உடையவருக்கு எடுத்த நடவடிக்கை பற்றி அறிக்கை தர வேண்டும்.

### 5.3 நாடுகளற்ற மீன்பிடிகலன்கள்

**64.** கடல் சட்டப்படி பொருள் **92** பத்தி **2** ஐக்கிய நாடுகளின் மரபுப்படி நாடற்ற ஒரு மீன் பிடிகலன் அருகில் உள்ள துறைமுகத்திற்கு பாதுகாப்புடன் செல்லப்பட வேண்டும். அத்தகைய நடவடிக்கை செலுத்துவோர் சார்ந்த நாட்டினை கேள்விக் குறியாக்கும் அழைப்பாகவோ அல்லது செலுத்துவோரில் எந்த நபரும் நாடு அற்றவராக அறிவிக்கப் படுவதாக கருதக் கூடாது. ஒவ்வொரு செலுத்துவோரின் தூதரகம்/ அயல் நாட்டு பிரதிநிதி மற்றும் உரிய பன்னாட்டு அமைப்புகள் ஆகியவற்றிற்கு உரியவாறு துறைமுக நாடு தெரிவிக்க வேண்டும்.

**65.** கொடிப்பங்கீடு பெற்றமைக்கான தொடர்புடைய பத்திரம் அல்லது சான்றிதழ் கலன் கடலில் இருக்கும் பொழுது காலாவதியாகும் நிலையில், பத்திரம் அல்லது சான்றிதழை புதுப்பிக்கும் நோக்கத்தில் கொடி நாடு உள்ளது என்பதை உணர்த்தும் பிரதியை பாதுகாப்புக்கலன் பெற வேண்டும். இதற்காகவாய்மொழித் தொடர்பு, வானொலி தொலைபேசி இணைப்பு ஆகியவை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

### 5.4 வலிமையில்லாத செயல்பாடு

**66.** நாடுகள் ‘‘வலிமைகாட்டாத’’ செயல்பாடுகளை உபயோகிக்க வேண்டும். அவைபின்வருமாறு :

அ) கண்காணிப்பாளர்களை, தகவல் சேகரித்தல், கலன் தலைவர், செலுத்துவோரின் நடத்தை பற்றி அறிக்கை கொடுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக (ஆணையிடும் அதிகாரம் இல்லாதபடி) உபயோகித்தல்

ஆ) மீன்பிடிகலன்களின் பதிவுகளுக்காகவும் மீன்பிடிப்பு அங்கீகரித்தலுக்கும் துணை மண்டலம் மற்றும் மண்டலம் நிர்மாணித்தல்.

இ) தொலைதூரப்புலன் உணர்வு மற்றும் செய்தித் தொடர்பு தொழில் நுட்பங்கள்[10]

ஈ) தளம் மற்றும் பதப்படுத்தும் நிலையங்களில் மீன்பிடிப்பு மற்றும் சாதனங்களை எச்சரித்தல், ஆய்வு செய்தல்

உ) துறைமுக நாடுகளின் ஆய்வு மற்றும் அறிவிக்கை

67. எச்சரித்தல், கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் கலன்கள் மற்றும் வானூர்திகள் கலனுக்குள் செல்லாது மீன் பிடிகலன்களை அடையாளம் காண்பதிலும் மீன் பிடி அங்கீகாரத்தை சரிபார்ப்பதிலும் போதிய தொடர்பு வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டும்

68. பாதுகாப்புக்கலன்கள் ''ஒருங்கிணைந்த தேடுதல் மற்றும் காப்பாற்றுதல்'' (SAR) பணிகளுக்கானதாகவும் இருக்க வேண்டும் என்பதனை நாடு உறுதி செய்ய வேண்டும். மீன்பிடிகலன்களின் ''மேய்ப்பவனாக'' இருக்கும் பாரம்பரிய பாங்கிற்கும் கூடுதலாக, பாதுகாப்புக் கலன்கள் வழக்கமான பணிகளுக்கிடையே அல்லது சிறப்புப் பணியாக வானிலை பற்றிய செய்திகளை சேகரித்து ஒலிபரப்புதல்.

## 6 மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கான வழிமுறைகள்(பார்வை பிரிவு 8.4, 8.5 விதித்தொகுப்பு

### 6.1 மீன்பிடி வலைகள்

69. தகுதியான அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், மீன்பிடி வலைகள், மீன் பிடி பழக்கம் மற்றும் செயல்பாடுகளுக்காக அனுமதிக்கத்தக்க உரிய மேலாண்மை கொள்கைகளை பின்பற்ற வேண்டும்[11]

70. மீன்பிடி வலைகள் மற்றும் மீன் பிடி முறைகள் பற்றிய கட்டுப்பாடுகளை மீன்பிடிப்பில் ஈடுபடுவோர் மதிக்க வேண்டும். மீன்பிடிப்பு பகுதியில் தகுதியற்ற காலத்தில் மீன்வளத்திற்கு ஆபத்தை விளைவிக்கும், மீன் இருப்பு அல்லது சுற்றுச்சூழலுக்கு இடர் விளைவிக்கும் வகையில் வலைகள், மீன் பிடி முறைகளை உபயோகித்தல் கூடாது.

71. இலக்கான அல்லது இலக்கற்ற மீன் வகைகள் சேதமாகாது என்பதனை முடிவு செய்யும் முன், கூட்டிய மதிப்பீட்டிற்கான செயல் விளக்கம் இன்றியும் புதிய மீன் பிடி பழக்கத்தையோ அல்லது மீன் பிடிப்பு முறையையோ அறிமுகப்படுத்துதல் கூடாது. இதனைப் போன்று முன் கூட்டியே மதிப்பீடு, பாரம்பரிய வர்த்தக ரீதியிலான அடிப்படையில், பாரம்பரிய அல்லது சிறு தொழில் புரியும் மீனவர் மற்றும் சமுதாயத்தினருக்கு, தீங்கு இழைக்காது என்பதனை, முன்கூட்டிய மதிப்பீடு தெரிவித்த பின்பே, புதிய மீன்பிடி பழக்கம் மற்றும் மீன்பிடி வலைகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

72. பொதுவாக தகுதிபடைத்த அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், மீன் பிடி உரிமையை பாரம்பரிய மற்றும் சிறு தொழில் மீனவருக்கு பங்கிடலாம். தொழில் ரீதியாக மீன் பிடிப்போர் மற்றும் சிறு தொழில் புரியும் மீனவர்களுக்கிடையே ஊக்கமான அல்லது மந்தமான வலைகள் குறித்து எழும் மோதல்களை குறைக்கும் வகையில் கட்டுப்பாடு அமலபடுத்தப்பட வேண்டும்.

---

[10] *தொலை தூரப்புலன் உணர்வு துணைக்கோள் தொடர்பு வசதிகள் குறித்து நாடு தொழில் நுட்பக் கட்டுப்பாடுகள் மற்றும் குறைந்த செயல்பாட்டிற்கான ஏற்றுக் கொள்ளத் தக்க கட்டுப்பாடுகள் அடிப்படையில் சாட்டப்பட்ட முரண்பாடுகளுக்காக தோற்றுவிக்கப்படும் நீதிமன்ற வருகையில் சாட்சிக்காக ஒப்பந்தத்தை நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக,*

- *கலனை அடையாளம் காணுதல்*
- *கலனின் நிலை, நாள், நேரம்*

[11] *மீன்பிடிப்பில் ஈடுபடும் மீன் அறுவடை முறைகள் தொடர்பாக இவ்வழிமுறைகளுடன் கொடுக்கப்படும் இணைப்பில் ''மேலாண்மை முறைகள் மற்றும் இயக்க வழிமுறைகள்'' உள்ளன.*

73. கட்டுப்பாடுகளை விரிவுபடுத்தும்பொழுது இலக்கு மற்றும் இலக்கு இல்லாத மீன்களுக்கான மீன் பிடி பழக்கம், மீன் பிடி வலைகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகளுக்கு உரிய உணர்வுகளை, தகுதி படைத்த அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் வழங்க வேண்டும். இவர்கள் பொதுவாக தொழில் உபயோகப்படுத்தும் வலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் பிடி வகைமுறைகள் பற்றி கணக்கில் கொள்வதற்காக மீன் பிடிப்பில் ஈடுபடுபவர்கள் உடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

74. தகுதி படைத்த அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மீன்பிடித் தொழிலில் உள்ளோர் மீன் பிடி வலைகளைத் தேர்ந்தெடுக்கும் வளர்ச்சியில் இணைந்து செயல்பட வேண்டும்.

75. மேலும் மாநிலங்களுக்கிடையே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய செய்முறைகளை வளர்க்கவும் மீன்பிடி வலைகளைத் தேர்வு செய்வதிலும், மீன் பிடி முறைகள், செய்வகை முறைகளைத் தேர்வு செய்வதிலும் நெருங்கிய இணைந்த செயல்பாடு வேண்டும். தோற்றுவிக்கப்பட்ட இச்செய்திகளைத் தொடர்பு உள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் நாடுகள் விரிவாக பரப்பிட உறுதி செய்ய வேண்டும்.

### 6.2 மீன் பிடிகலன்களின் நடத்தை

76. மீன்பிடிப்பில் தலையிடுதல் இல்லாத நிலையில் தனது மீன் பிடிப்பு இயக்கத்தின் நோக்கத்திற்காகவோ அல்லது விபத்தின் விளைவாகவோ அல்லது தனது கட்டுப்பாட்டிற்கு மேலான சூழ்நிலையிலோ அல்லாது மீன்பிடித்தளத்தில் மீன் பிடிக்கும் போது எந்த ஒரு கலனும் நங்கூரமிடுதல் அல்லது தங்குதல் கூடாது.

77. கடலில் (கலன்களின்) மோதல்களைத் தடுக்க ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு இணங்கும் விதத்தில் அனைத்துக் கலன்களும் தங்கள் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். ஏற்கனவே அமைக்கப்பட்ட மீன்பிடி வலைகளிலோ அல்லது மீன் பிடிகலன்களின் நடவடிக்கையிலோ குறுக்கிடுதல் கூடாது.

78. மிகத்தவிர்க்க முடியாத தருணங்கள் தவிர மீன்பிடிகலன்கள் மீன்பிடிப்பதற்கு குறுக்கீடாக, தடையாக, மீன் பிடி வலைகள் மற்ற மீன்பிடிகலன்கள், நீர்வாழ் சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் பொருட்களை கடலில் அல்லது உள்நாட்டு நீர்நிலைகளில் கொட்டுதல் கூடாது.

79. மீன்பிடிகலன் முறைதவறும் பொழுது, வேறு வகையில் அதற்கு அல்லாத மீன் பிடி வலைகளை குறுக்கிடும் பொழுது அவ்வலைகளுக்கு ஏற்படும் சேதத்தினை மிகவும் குறைவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த நேரத்தில் வலைகளுக்கு உரிய மீன்பிடிகலன், மேலும் சீர்கேடாக்கும் எந்த ஒரு செயலையும் தவிர்த்தல் வேண்டும்.

80. மீன்பிடிகலன் அல்லது எந்த ஒரு மீன்பிடி நடவடிக்கைக்கு பொறுப்பானோர், சேதமான மீன்பிடி வலையை மீட்க பெரும் முயற்சி செய்தல் வேண்டும். வலைகளை மீட்கும் வெற்றியடையாத முயற்சிகளில், வலையின் அளவு, நிலை மற்றும் வலை அடையாளம் ஆகியவற்றைத் தகுந்த அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும். முடிந்த வரையில் இழந்த வலைகளை மீட்டு துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லுதல் வேண்டும். மீட்க இயலாத நிலையில் வலைகளின் விபரங்கள் மற்றும் நிலை ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு தெரிவிக்கப் பட வேண்டும்.

81. ‘‘கப்பல் போக்குவரத்து பிரிவினை திட்டம்’’ மற்றும் கப்பல் வழித்தடம் பாதிக்கப்படும் பகுதிகளை தவிர்த்தல் குறித்து கட்டுப்பாடுகளைப் பற்றிய விழிப்புணர்வை மீன் பிடிப்போரிடையே ஏற்படுத்துவதுடன் அவற்றை அவர்கள் மதிக்க வேண்டும்.

82. கடலில் (கப்பல்) மோதல்களைத் தவிர்ப்பதற்கான பன்னாட்டு கட்டுப்பாடுகளின்படி ஆணையிடப்பட்ட விளக்கு மற்றும் வடிவமைப்பு தொடர்பான விதிமுறைகளுக்கு கூடுதலாக இணைங்கி கடலில் தன் நிலை குறித்து மீன் பிடி வலைகள் அடையாளம் இடப்பட வேண்டும்[12]

### 6.3 மீன்பிடிகலன் இயக்கத்திற்கான பதிவேடுகள்

83. மீன்பிடிகலனின் உரிமையாளர், மேலாளர் மற்றும் மீன்பிடிப்போர், மீன்பிடி வலைகள், மீன்பிடிப்பு முறைகள், பிடிப்பு பற்றிய அறிவிக்கைகளை குறித்து தகுதி வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அமைக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுதலை உறுதி செய்தல் வேண்டும். தகுதி வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களுக்கு தேவைப்படும் பதிவேடுகளை தினசரி குறிப்பு புத்தகங்களாக பொறுப்பானோர் நிர்வகிக்க வேண்டும். அவை பொருத்தமானவற்றை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

கப்பல் தள தினசரி நாட்குறிப்பு புத்தகம்

அ) துறைமுகத்திலிருந்து கிளம்பும் நாள், புறப்படும் நேரம்

ஆ) கண்காணிப்பு அலுவலர்

இ) அட்ச / தீர்க்க ரேகைப்படி மதிய நிலை அல்லது டெக்கான்/ லோரன் பதிவுகள்

ஈ) வானிலை மற்றும் கடலின் நிலை

உ) தானியங்கி வழிகாட்டி தொடக்கி வைக்கப்பட்ட / நிறுத்தப்பட்ட நேரம் மற்றும் நாள்

ஊ) உந்துதலில் இருந்து மீன்பிடி முறைக்கு மாறிய நேரம் மற்றும் நாள்; அவ்வாறே மீன்பிடி முறையிலிருந்து உந்துதலுக்கு மாறிய நேரம்.

எ) கப்பலுக்கு மாற்றலில் நிலை நேரம் மற்றும் நாள்

ஏ) துறைமுகத்தை அடைந்த நேரம் மற்றும் நாள்

ஐ) கடல் மற்றும் துறைமுகத்தில், அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின், குறுக்கீடுகள் பற்றிய விபரங்கள் குறிப்புரை பத்தியில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

மீன்பிடி தினசரி நாட்குறிப்பு புத்தகம்

அ) மீன்பிடி வலைகள் இடப்பட்ட நேரம் நாள் மற்றும் நிலை

ஆ) விடப்பட்ட மீன்பிடி வலையின் வகை மற்றும் அளவு

இ) எங்கு எப்பொழுது வலை மீட்கப்பட்டது (நேரம் நாள் மற்றும் நிலை)

ஈ) பிடிக்கப்பட்ட மீனின் எடை மற்றும் வகை

உ) பிடிக்கப்பட்டவையில், தளத்தில் பதப்படுத்தப்பட்ட மற்றும் இருப்பு செய்யப்பட்ட விபரங்கள்

ஊ) பிடிபட்ட மீனின் வகைகள் மற்றும் அவற்றின் எடை

எ) பார்வையாளரின் குறிப்புரை

---

12 *உலக கடலாண்மை நிறுவனம் (IMO) 14 –19 ஜுலை 1991 ல் விக்டோரியா பிரிட்டிஷ், கொலம்பியா, கனடாவில் மீன் பிடி வலைகளுக்கு அடையாளம் இடுதல் குறித்த வல்லுநர்களின் ஆலோசனை அறிக்கையை ஆய்வு செய்தது. மோதல் கட்டுப்பாடுகள் பற்றிய உவேஅ அமைத்த மாற்றங்களை ஏற்றுக் கொண்டது. உ.க.நி மீன்பிடிகலன்களுக்கு அடையாளம் இடுதல் குறித்த கருத்துருவினை கட்டுப்பாடுகளில் அடக்க தேவையில்லை என கருதியது. பார்வை இணைப்பு 4.*

எந்திரங்களுக்கான தினசரி நாட்குறிப்பு புத்தகம்

அ) துறைமுகத்திலிருந்து கிளம்பும் நாள் மற்றும் தேதி

ஆ) கடல் பயணத்தில் எரிபொருள்

இ) வானிலை மற்றும் கடலின் நிலை

ஈ) கண்காணிப்பு அலுவலர்

உ) மதியப்பதிவுகள்

ஊ) கண்காணிப்பில் / நாளில் முதன்மை எந்திரங்கள் ஓடிய நேரம்

எ) கண்காணிப்பில் / நாளில் துணை எந்திரங்கள் ஓடிய நேரம்

ஏ) கண்காணிப்பில் / நாளில் குளிர்விக்கும் எந்திரங்கள் ஓடிய நேரம்

ஐ) மீன் இருப்பு அறையின் வெப்பநிலை

ஒ) எண்ணெய் / தண்ணீர் பிரிப்பான் உபயோகத்தில் இருந்த நேரம்

ஓ) முதன்மை இயந்திரத்தில் சராசரி நீரின் வெப்பநிலை மற்றும் புகை வெளியேற்றம்

ஔ) இயல்பான ஓட்டத்திலும் மற்றும் மீன் பிடி முறையிலும் இயந்திரத்தின் நிமிடத்திய சுழல் எண்ணிக்கை

க) தள இயந்திர உபயோகம் நாள் மற்றும் நேரம்

கா) கப்பலில் எடைகூட்டுதல் மற்றும் எடை நீக்கிடல் விபரங்கள்

**84.** கலனில் உள்ளோர் தினசரி நாட்குறிப்பு புத்தகங்கள் நிர்வாகம் குறித்த கட்டுப்பாடுகளுக்கு இணங்கிட ஏதுவாக மீன்பிடிகலன்கள் பொருத்தமான கடல்பயண சாதனங்களும் மற்றும் கருவிகளும் கொண்டுள்ளன என்பதனை உரிமையாளர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

**85.** கையால் எழுதப்பட்ட தினசரி நாட்குறிப்பு புத்தகங்களுடன் கூடுதலாக மின்னணு சாதன விபர சேமிப்பு வசதிகளை கொண்டிருக்க வேண்டும். தேவைக்கு ஏற்ப தொலைதூர தொடர்பு வசதி மூலம் நிலை, மீன்பிடி மேலாண்மை நோக்கத்திற்கான செயல் மற்றும் கடலில் பாதுகாப்பு அறிய சாதனங்களைக் கொண்டிருக்க வேண்டும். செயல்முறை விஸ்தரிப்பிற்காக அத்தகைய வசதி முழுவதும் தானியங்கி வசதி உடையவையாகவும் மற்றும் மீன் பிடிப்பு விபரங்கள் பதிவு மட்டும் கைகளால் மேற்கொள்ளும் நிலை தேவை. அத்தகைய செயல்பாட்டிற்கான தொழில் நுட்ப வசதிகள் உள்ளன. விபரங்கள் அனுப்பிட தேவைகள் சேர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். ஆனால் வரம்பு தேவையற்றது.

அ) முக்கிய இயந்திரத்தின் செயல்பாடு

ஆ) வெப்பநிலை உணர்த்திகள் (உறைய வைக்கும் குழாய்கள், மீன் அறைகள் போன்றவை)

இ) கலனின் நிலை மற்றும் போக்கு

ஈ) ஆழம் காட்டும் கருவி / சோனார் விபரங்கள் மற்றும்

உ) மீன்பிடிப்பு விபரம்

### 6.4 மீன்பிடிப்பு கவனம்

**86** மீன்பிடிப்பில் பெற்ற மீன்களை (மீன்கள்) விற்கப்படும் வரை, அதன் தரம் சரியாக நிர்வகிக்கப் படும் முறையில் மீன்பிடிப்பு முறையாக, கையாளப்படும் என்பதனை மீன்பிடிகலனின் அலுவலர் மற்றும் செலுத்துவோர் உறுதி செய்ய வேண்டும்.

87 எதிர்பார்க்கப்பட்ட மீன்பிடிப்பு செயல்பாட்டு வகைக்கு ஏற்ப மீன் பிடிகலனில் மீன் வைக்கும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளதை உரிமையாளர் அல்லது மேலாளர் உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக அனைத்து நிலைகளிலும் சரியான வடிகால் வசதி செய்யப்பட வேண்டும். மீன்பிடி அறைகளை குழாய்களின் மூலம் (தக்க விசை ஆதாரத்தை கருத்தில் கொள்ளாது). சுத்தம் செய்யும் பொழுது உபயோகப்படுத்தும் குழாய்களை வடிகாலில் தங்கியவற்றை நீக்க உதவும் குழாய்களாக பயன்படுத்துதல் கூடாது.

88. தக்க வகையில் மீன் அறை அல்லது பொருத்தப்பட்ட மீன் பிடி கொள்கலன்களுக்கு வர்ணம் பூசுவதற்கு தீமையற்ற மாசு படுத்தாத வர்ண வகைகள் வழங்குவதை உரிமையாளர் மற்றும் / அல்லது மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

89. குறிப்பாக பனிக்கட்டிகளில் மீன்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லும் கலன்கள் கால முறைப்படி மீன் அறைகள் காற்றோட்டம் பெற வேண்டும்.

### 6.5 காப்புறுதி பாதுகாப்பு

90. மீன் பிடிகலனில் அவர்களது உரிமைகள் மூன்றாம் நபர் மற்றும் செலுத்துவோர் பாதுகாக்கும் வகையில் போதிய காப்புறுதி பாதுகாப்பினை உரிமையாளர் அல்லது மேலாளர் கொண்டு செல்ல வேண்டும். கலன் காப்பீடு செய்யப் பட வேண்டும் என்ற பன்னாட்டு தேவையில்லை என்பதனையும் உணரவேண்டும். மேலும் இது பொதுவாக வர்த்தக ரீதியிலான அபாயம் உண்டாக்கும் நிலை என்பதால் உரிமையாளர்கள், தரகர் மற்றும் கடல்சார் தொடர்புடையோர் ஒருவருக்கொருவருடன் ஆலோசித்து உரிமையாளர் முடிவு செய்ய வேண்டிய பொருள். அதனால் காப்புறுதி பாதுகாப்பு நிலைக்கு உரிமைக் கட்டளை ஏதும் இல்லை. இருந்த போதிலும் மற்றவைகளுக்கிடையே அத்தகைய கொள்கைகள் உள்ளடக்கப்பட வேண்டும் என அறிவுரைக்கப்படுகிறது.

அ) கலனின் கட்டுமானம் மற்றும் இயந்திரம்

ஆ) பாதுகாப்பு மற்றும் இழப்பீடு

இ) சண்டை மற்றும் வேலை நிறுத்தம்

ஈ) தூய்மைக் கேடு

91. பாதுகாப்பு மற்றும் இழப்பு ஈடு கொள்கைகள், மீன்பிடிகலனின் செலுத்துவோர் விபத்தில் காயம் அடையும் நிலை / இறக்கும் நிலையில், போதுமான காப்பீட்டு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

92. வாடகைக்கு அமர்த்தப்படும் கலனில் கலன் செலுத்துவோரின் ஊதியத்தைப் பாதுகாக்க தேவையான ‘‘வாடகை இழப்பீடு’’ என்பதற்கான பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

93. எங்கு பொருந்துமோ அங்கு, உரிய அதிகாரம் உடைய மீன் பிடிப்பில் ஈடுபடுவோர் ஒருவருக்கொருவர் இடையே காப்புறுதி சங்கங்களை அமைத்துக் கொள்ள உதவி செய்ய வேண்டும்.

94. உரிமையாளர் அல்லது மேலாளர் மூன்றாவது நபர் மற்றும் செலுத்துவோருக்கு ஏற்படும் இன்னல்களிலிருந்து பாதுகாத்திட சட்டத்தேவையினை உரிய அதிகாரமுடையோர் வழங்க வேண்டும்.

95. உண்மையான கலன் ‘‘கலனின் கட்டுமானம் மற்றும் இயந்திரம்’’ பாதுகாப்பு கலனின் மதிப்புடன் அல்லது பதில் பொருள் மதிப்புடன் தொடர்புடையது. வர்த்தக ரீதி காரணங்களுக்காக மேற்கண்டபடி கலந்துரையாடப்படும் பொருளும் ஆகும். காரணங்களை அமைப்பதற்கு முன்பாக கீழ்நிலையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதும் ஆகும்.

96. வாடகை இழப்பு அல்லது வர்த்தக ரீதியிலான பின்னடைவு காரணமாக, செலுத்துவோரின் ஊதியம். குறித்த பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்திற்காக, உரிய அதிகாரம் உடையவருக்கு வாடகைக்கு கலன் தேவைப்படும் நிலை எழலாம். கடலோர நாடு சார்ந்தோர் அயல் கொடியிட்ட கலனில் செலுத்துவோராக இருக்கும் பொழுதும் அல்லது வெறுமையான பட்டைய படகுகளுக்கும் இது குறிப்பாக தொடர்புடையதாக இருக்கும்.

### 6.6 மாற்றி ஏற்றுதல்

97. அனைத்து பாதுகாப்பு மற்றும் மீன்பிடி மேலாண்மை முறைகளுக்கு இணக்கமான கட்டுப்பாடுகளுடன் மீன் மற்றும் மீன் பிடி உபபொருட்கள் மாற்றி ஏற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

98. தனிபட்ட பொருளாதார மண்டலத்தில் இயங்க அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடி கலன்களுக்கிடையே மாற்றி ஏற்றுதலில், மாற்றி ஏற்றுதல் தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தில் தான் நடைபெற வேண்டும். மேலும்,

அ) ஒவ்வொரு கலனிலும் மாற்றத்தை நாள் நேரம் நிலை அளவு மற்றும் மீன் வகை உரித்தான தகவல்களுடன் தினசரி குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்தல் வேண்டும். மேலும்,

ஆ) கடலோர நாட்டின் அங்கீகரித்தல் இன்றி மற்ற மீன் பிடிப்பை ஏற்றிச் செல்லும் கலன், பிடித்தவற்றை விடுவிக்கும் நோக்கத்துடன் கடலோர நாட்டிற்கு வெளியே உள்ள துறைமுகத்திற்கு செல்லக் கூடாது.

99. உரிய அதிகாரம் உடையோர் முறையான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடி முறைகளை மீன் பிடிப்புகளின் போது வீசிய வலைகளிலிருந்து நேரடியாக பிற கலன்களுக்கும் மற்றும் இரட்டை மடியில் ஈடுபட்டுள்ள கலன்கள் மற்றும் / அல்லது தாய்க்கலன்களுக்கு மாற்றி ஏற்றுதலுக்கு வசதி செய்யும் வகையில் அமைக்க வேண்டும்.

100. பிடித்தவற்றை மீன் பிடிகலனிலிருந்து, துணைக்கலனிலிருந்து அல்லது இதர சரக்கு ஏற்றிச் செல்லும் கலனிலிருந்து மாற்றி ஏற்றுதலையும், தினசரி குறிப்புப்புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும். தனியான ரசீது விற்பனைக் குறிப்பினை பிற கலன் வழங்கிட வேண்டும். கலத்தின் முத்திரையையும் இவை பெற்றிருக்க வேண்டும்.

101. அனைத்து மாற்று ஏற்றுதல் பெருங்கடல் / தனி உரிமைப் பொருளாதார மண்டலம் / துறைமுகம் எங்கு ஆயினும், சரக்கு ஏற்றியமைக்கான பட்டியலில் கலனின் பெயர் மற்றும் பிடிக்கப்பட்டவையின் உற்பத்தியிடம் போன்ற தகவல்களும் காணப் பெறுதல் வேண்டும். கூடுதலாக முழுத் தகவல்களும் துறைமுக நாட்டின் ஆய்விற்கு கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். துறைமுக நாடு வழங்க வேண்டுபவை.

அ) பிடிக்கப்பட்டவற்றை ஏற்றிச் செல்லும் கலனின் பெயர் பதிவு செய்யப் பட்ட துறைமுகம் நாட்டு உரிமை பன்னாட்டு வானொலி அழைப்பு சங்கேதக்குறி.

ஆ) மீன்பிடிப்பை மேற்கொண்ட கலனின் பெயர் பதிவு செய்யப் பட்ட துறைமுகம் நாட்டு உரிமை பன்னாட்டு வானொலி அழைப்பு சங்கேதக்குறி.

இ) மீன் பிடிப்பு அங்கீகாரத்திற்கான விபரங்கள்

ஈ) பிடிக்கப்பட்டவையின் இனவாரி மற்றும் எடை அளவு விபரங்கள்

உ) பிடிக்கப்பட்டவை அல்லது அதன் பகுதி பெறப்பட்ட மீன் பிடிப்புப் பகுதி

## 7. திறனை நன்மைக்காக பயன்படுத்துதல் மற்றும் ஓசோன் படலத்தை பாதுகாத்தலுக்கான வழிமுறைகள்

### 7.1 திறனை சேமித்தல் மற்றும் நன்மையாக்குதல்

102. மீன்வளத்தில் திறனை நன்மைக்காக பயன்படுத்துதலில் பன்னாட்டு அமைப்புகள் மற்றும் மீன் தொழிலில் உள்ளோருடன் ஒத்துழைத்து நாடு நியமங்களை ஏற்படுத்தி பின்பற்ற வேண்டும். பயன்பாட்டிற்கான நியமங்கள் மற்றும் வழிமுறைகள் அறுவடை மற்றும் அறுவடைக்கு பிந்தைய இரு நிலைகளிலும் முழுதுமாக அனைத்து பயன்களை தொகுதியிலுள்ளோர் பெறும் வகையில் இருக்க வேண்டும்.

103. ஓசோன் படலத்தைப் பாதிக்கும் பொருட்களைப் பற்றிய மாண்டிராவில் 1987ல் நடைபெற்ற வியன்னா சம்பிரதாயத்தின்முக்கிய பத்திரத்திலுள்ள நிபந்தனைகளை, அத்தகைய நியமங்கள் மற்றும் தொடர்பான வழிமுறைகள் கணக்கில் கொள்ள வேண்டும். ஏனெனில் திறனை நன்மைக்காக பயன்படுத்தும் திட்டங்களில் அவை நேரடியான செல்வாக்கு உடையன. தொழில் நுட்ப நியமங்கள், தெளிவான விபரங்கள், பரிந்துரைகள் வழிகாட்டு முறைகளின் பிற்சேர்க்கை ஆக்கப்படும்.

104. உடமையாளர் / மேலாளர் திறனை பயனாக்குதலை அதிகரிக்கவும், வாயு மண்டலத்திற்கு ஊறு விளைவிக்கும் பொருட்களின் வெளியேற்றத்தைக் குறைக்கவும் ஏற்ற வகையில் கலன் வடிவமைக்கப்பட்டுள்ளது / சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்திட வேண்டும்.

105. திறனை சேமிக்க பங்கு அளிக்க இயக்க தந்திரங்களை, உடமையாளர் / மேலாளர் / வாடகைக்கு அமர்த்துவோர் கலனின் அலுவலர்கள் பின்பற்ற வேண்டும். புவியியல் தகவல் அமைப்புகளை மேம்படுத்தியும், இருப்பு பற்றி மீன்வளம் தொடர்பான தகவல்கள் அவற்றின் பங்கீடு நகருதல், கடல் தள இயல்புகள் ஆகியவற்றை தெரிவிப்பதன் மூலமும் நாடுகள் இத்தகைய இயந்திர தந்திரங்களுக்கு பங்கு அளிக்க வேண்டும். மீன்வளம் தொடர்பான செய்திகளை உள்ளடக்கும் வகையில் மின்னணு தொகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். மேலும் நாடுகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் உபயோகத்திற்காக துணைக்கோள் உதவியுடன் உண்டாக்கப்பட்ட தகவல்களை உடனடியாக உபயோகிக்கவும். மீன் பிடிப்பு நிபந்தனைகளின் முன் அறிவிப்பிற்கும் ஒத்துழைக்கவும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

106. மீன்பிடி கலனின் அலுவலர் மற்றும் செலுத்துவோர், திறனை நன்மையாக்குதல் மற்றும் சேமித்தல் நுட்பங்களில் பயிற்சி பெறுதல் வேண்டும். நாடு, பொருந்தும் பொழுது, அரசு சாரா நிறுவன பயிற்சி நிறுவனங்களின் நடைமுறையில் உள்ள பயிற்சி தொடர் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது, என்பதை உறுதி செய்ய வேண்டும்.

107. வெளியேறும் வாயுப் பொருட்கள் நைட்டிரேட், சல்பேட் போன்ற தீங்கு விளைவிக்கும் பொருட்கள், உரிய அதிகாரமுடையோர் அமைத்துள்ள நிலைகளுக்கு மிகாது உள்ளது என்பதை உறுதி செய்யும் அளவிற்கு கடல்சார் இயந்திர பராமரிப்பு மற்றும் இயக்கத்தில் மீன் பிடிகலனின் அலுவலர் மற்றும் செலுத்துவோர் உரிய பரிச்சயம் பெற வேண்டும்.

### 7.2 குளோரோஃப்ளோரோகார்பன் (CFC) மற்றும் ஹேலான்

108. தீயணைப்புக்கருவிகளில் உள்ள ஹேலான், குளிர் சாதனங்களில் உள்ள குளோரோஃப்ளோரோகார்பன் உபயோகத்தை வகைப்படுத்ததலுக்குரிய நிபந்தனைகள் தேசீய சட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

109. நாடுகள், உரிமையாளர், மேலாளர், மீன் பிடித்தொழிலில் ஈடுபடுவோர் பாதுகாப்பான குளோரோஃப்ளோரோகார்பன் வெளியேற்றத்திற்காக உள்ள பன்னாட்டு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

### 8. மீன்பிடிகலன்களுக்கான துறைமுகம் மற்றும் இறங்குதளங்களின் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் மாற்றங்களுக்கான வழிகாட்டு முறைகள் (பார்வை பிரிவு 8.9 விதித்தொகுப்பு)

110. மீன்பிடிகலன்கள் மற்றும் அவற்றின் இயக்கத்திற்காக துறைமுகம் அமைக்க இடம் தேர்வு செய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் கடலோரப்பகுதி மேம்பாட்டிற்கு பொறுப்பான அதிகாரமுடையோர் இடையே ஆலோசனையை அனுமதிக்கும் கட்டுமான அமைப்பு ஒன்றினை நாடு நிறுவ வேண்டும்[13].

111. மண்டலம் அல்லது சார்மண்டல இயல்புடன் கடலோரப்பகுதி மேம்பாட்டு ஏற்பாடு மற்றும் ஏற்பாடுகளுக்காக தங்களிடையே நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்.

112. போதிய ஆராய்ச்சி மற்றும் சுற்றுச் சூழல் எச்சரிக்கை ஆகியவற்றிற்கானவற்றை அளித்திட மீன்வள மேம்பாட்டிற்கு பொறுப்பானோர் உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக பூகோளவியலில் தகவல் அமைப்புகள் (GIS) போன்றவை உட்படுத்தப்பட வேண்டும்.

அ) நீரியல் வானிலை விபரம் கடல் தளம் (ஏரி தளம்) புவியியலைத் தெரிவிக்கும் (படுகை) வரைபடங்கள், மீன் முட்டையிடும் பகுதிகள், மீன் பிடிப்பு பகுதிகள்/ மீன் இனப்பங்கீடு விபரங்கள் (மீன் படப்புத்தகங்கள்) எண்ணெய் / வாயு நிறுவனங்கள் குழாய் பதிப்பு, தொலைபேசிக் கம்பிகள், சுரங்கத் தொழிலுக்காக குறிப்பிடப்பட்ட பகுதிகள்[14]

ஆ) கழிவுப்பொருட்களை நீரியல் சுற்றுப்புறத்திற்கு வெளியேற்ற கரையோர வசதிகளின் நிலைப் பரப்பு வெளியேற்றும் முறை மற்றும்

இ) திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் அவற்றின் சம்மந்தம்.

113. பொருத்தமான நிலையில், சுற்றுச்சூழல் ஆய்வு நடைமுறையில் உள்ள வசதிகளை மேம்படுத்துதல், புதிய துறைமுகம் மற்றும் இறங்கு தளங்களுக்கு ஆன விண்ணப்பங்களுக்கு ஆதரவு, நாட்டிற்கு தேவை.

114. பொதுவாக உரிய அதிகாரம் உடையவர் ஏற்றுக் கொள்ளத்தக்க நியமங்களை[15] பின்பற்றுதல் வேண்டும். மேலும் கட்டுமானம், வடிவமைப்பு, மீன் பிடிகலன்களின் துறைமுகம் மற்றும் இறங்குதள நிர்வாகம் பற்றிய வழிகாட்டு முறைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அ) மீன் பிடிகலன்களுக்கு பாதுகாப்பான துறைமுகம்

ஆ) நன்னீர் தேவையைப் பூர்த்தி செய்யும் ஏற்பாடுகள்

இ) போதிய சுகாதார வசதிகள் அமைப்பு

ஈ) கழிவுப் பொருள் வெளியேற்ற(எண்ணெய் மற்றும் எண்ணெய் கலந்த நீர்

---

13 *கடலோரப்பகுதி மேம்பாட்டில் மீன்வளத்தின் ஒருங்கிணைப்பு விதித்தொகுப்பின் 10 வது கட்டுரையில் பொருள் மற்றும் அதற்கு தனியான வழிகாட்டுமுறை ஆதாரங்கள் உள்ளன.*

14 *கரை அல்லது ஆழ அமைப்பு அத்துடன் விரிவான விபரங்கள் அடங்கிய வரைபட அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து தொலைவில் நிறுவுவது வழக்கமானதே.*

15 *மீன்பிடிகலன்களுக்கான துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களின் வளர்ச்சி மற்றும் மேலாண்மைக்கான முறைகள். நடைமுறை வசதிகளின் மேம்பாடு வழிகாட்டு முறைகளின் இணைப்பாகத் தயாரிக்கப்படும்.*

உட்பட) வசதியமைப்பை ஏற்படுத்துதல்

ஊ) (மீன் பிடி சாரா நடவடிக்கைகளினால்) வெளியிலிருந்து மாசுபடுதல் ஏற்படாத நிலை

ஊ) மீன்பிடிப்பு நடவடிக்கைகளினால் மாசுபடுதல் தோன்றாத நிலை

எ) போதிய கலன், வாங்குபவர் மற்றும் விற்பவர் ஆகியோருக்கு சேவை வசதி அமைப்பு.

ஏ) சுற்றுச் சூழலில் வாய்ப்பினால் மேற் கொள்ளப்பட்ட இயக்கத்தின் விளைவுகளை எச்சரித்தலை மேலாண்மைத் திட்டங்கள் உள்ளடக்க வேண்டும்.

ஐ) நீரியல் சுற்றுச் சூழல் மாசுபடுதல் குறித்த உரிய சம்பிரதாயங்களுக்கு இணங்கி இருத்தல் குறிப்பாக MARPOL 1972 / 8 ன் இணைப்பு 5 கட்டுப்பாடு எண் 3 (கழிவுப் பொருட்களால் மாசு படுதலைத் தடுத்லுக்கான கட்டுப்பாடுகள்)

ஒ) மீன்பிடித் தொழிலில் உள்ளோர் பிரத்யேக மற்ற வசதிகளில் மற்ற உபயோகிப்பாளர்களுடன் ஒருங்கிணைப்பு பெறுதல்.

ஓ) மணல் அரிப்பு, மணல் படிதல் இவற்றைச் சமாளிக்க ஏற்பாடுகள் செய்திடுதல்

115. துறைமுகம் மற்றும் இறங்குதளங்களுக்கான உப விதிகளுக்கு உறுதியாக நிற்க உதவிடும் வகையில் உபயோகிப்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும் துறைமுகம் மற்றும் இறங்குதளங்களை நிர்வகிக்கும் அமைப்புகளில் தீவிர ஈடுபாடு கொள்ள உபயோகிப்பாளர்கள் ஊக்கப்படுத்தப்படல் வேண்டும்.

## 9 செயற்கை உறைவிடங்கள் அமைத்தல், மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்களை நிறுவுதல், கரையிலிருந்து விலகியுள்ள பகுதிகளில் அநாவசிய பொருட்களை நீக்குதல் ஆகியவற்றிற்கான வழிமுறைகள்.

### 9.1 கொள்கை

116. நீரில், நீர்ப்பரப்பில் செயற்கை அமைப்புகள் ஏற்படுத்தி மீன் பிடிப்பு வாய்ப்புகளை அதிகரிப்பது மற்றும் இருப்பு மிகுதியை அதிகப்படுத்துவது ஆகியவற்றிற்காக நாடு, கொள்கை மற்றும் மேலாண்மை அமைப்புகளை, ஏற்படுத்த வேண்டும்.

117. பன்னாட்டு சம்பிரதாயங்களின்படி ஆழ்கடலில் உள்ள அநாவசிய அமைப்புகளை அகற்றிடும் தேவை பற்றி உரிய அதிகாரம் உடையோர் உணர்தல் வேண்டும்[16]. மேலும் முழுதும் அல்லது பகுதியாக அவ்வமைப்புகளை அகற்றுதல் மற்றும் கழித்தல் குறித்து தீர்மானிக்கும் முன்பாக உரிய அதிகாரமுடையவர் கலந்து ஆலோசிக்கப்பட்டார் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

### 9.2 செயற்கை உறைவிடம்

118. உரிய அதிகாரமுடையவர், செயற்கை உறைவிடம் அமைத்தல் மற்றும் அதன் கட்டுமானத்திற்கான பொருட்களை தேர்ந்தெடுக்கும்பொழுது மாசுபடுத்தலை (கடல்சார் சுற்றுப்புறச்சூழ்நிலையை) தடுக்கும் மற்றும் கடற்பயண பாதுகாப்பு குறித்த பன்னாட்டு சம்பிரதாயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

119. மேலும், செயற்கை உறைவிடம் அமைத்தல், மண்டலத்தின் பிற உபயோகிப்பாளர்களுக்கிடையே தீங்கிழைக்கும் வாய்ப்புகளைக் குறைக்கவும் பயன்களை அதிகப்படுத்துவதற்குமான, கடலோரப்பகுதி மேம்பாட்டிற்காக ஒருங்கிணைப்பு என்ற நோக்கில், பார்க்கப்பட வேண்டும்.

120 அத்தகைய உறைவிடங்கள் அமைத்தல் கட்டுமானம் நிறுவுதல் ஆகியவற்றிற்கு ஒப்புதல் பெறும் தேவையை செயற்கை உறைவிட கட்டுமானத்தை நிர்வகிக்கும் அமைப்பு உள்ளடக்க வேண்டும். பாரம்பரிய மற்றும் பிழைப்பிற்காக மீன் பிடிப்போரின் உரிமையையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

121. கடற்பயண நோக்கத்திற்காக வரைபடம், நிலப்படம் பராமரித்தலுக்கு பொறுப்பு வகிக்கும் உரிய அதிகாரமுடையவரிடமும் அதேபோல் செயற்கை உறைவிடம் மற்றும் மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்களை நிறுவுதல், மற்றும் நீக்குதலுக்கு முன்பாக உரிய சுற்றுச்சூழல் அதிகாரமுடையோரிடமும் தகவல் தெரிவிக்கப்படும் என்பதை உரிய அதிகாரமுடையவர் உறுதி செய்ய வேண்டும்.

### 9.3 மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்கள்

122. நிலைநிறுத்தப்பட்ட மற்றும் நகரும் சாதனங்களின் நிறைவேற்றலை செம்மையாக்கிட மீன்களை திரளவைக்கும் தொழில்நுட்பம் வளர்க்கப்பட வேண்டும்.

123. மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்கள் (FAD) தொடர்பாக அமைப்பு உரிய அதிகாரமுடையவருக்கும், உபயோகிப்பாளர்களுக்கும், சிறிய வடிவமைப்பு நியமம், இயக்கம் மற்றும் சாதனங்களின் பராமரிப்பு பொறுப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

---

[16] *1989 அக்டோபரில் உ.க.நி. கரையிலிருந்து விலகிய பகுதிகளில் உள்ள நிறுவப்பட்டவை மற்றும் கடல் பகுதியில் உள்ள தனிப்பட்ட பொருளாதார மண்டலத்தில் உள்ள அமைப்புகளை நீக்குதல் குறித்தான வழிகாட்டு முறைகள் மற்றும் நியமங்களைப் பின்பற்றியது. இவை இணைப்புத் தொடரில் சேர்க்கப்பட்டுள்ளன.*

124. மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்களை நிறுவ ஒப்புதல் பெற வேண்டும். ஒப்புதல் வழங்கும் அமைப்பின் உரிய அதிகாரமுடையவர் உரிமையாளர்களின் பதிவுகளையும் பராமரிக்க வேண்டும். பதிவுகள் குறைந்த தேவையை கொண்டிருக்க வேண்டும்.

அ) உரிமையாளர் அடையாளம் காட்டிட உரிய அதிகாரம் உடையவரால் வழங்கப்பட்ட அடையாளம்

ஆ) உரிமையாளர்(களின்) பெயர் மற்றும் முகவரி

இ) மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்களின் வகை

ஈ) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் பூகோள நிலை

125. மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனத்தில் மீன் பிடிக்கும் அங்கீகாரம், மீன் பிடிக்க உபயோகப்படுத்தப்படும் முறை பற்றிய தகவல்கள் பிடிக்கப்பட்டவை பற்றி அறிவித்தலின் தேவை ஆகியவற்றை பெற்றுக் கொண்டதை உரிய அதிகாரமுடையவர் உறுதி படுத்த வேண்டும்.

126. மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்கள் நிலைநிறுத்தப்பட்டதோ அல்லது நகருபவையோ ஆயினும் பகல் மற்றும் இரவில் அவற்றின் நிலையினை அடையாளம் காணும் வகையில் சாதனங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

127. மீன்களை ஒரு இடத்தில் திரளவைக்கும் சாதனங்களை இழந்ததைப்பற்றி அறிவிக்கும் பொழுது கடல் பயணத்திற்கு அவை அபாயம் விளைவிக்கும் எனக் கருதப்படின் அவற்றை மீட்டல் போன்றவற்றிற்காக சாதனங்களை உரிய அதிகாரமுடையவர் நிறுவ வேண்டும்.

# இணைப்பு 1

மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் பன்னாட்டு சம்பிரதாயங்கள்,
ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளின் தாக்கம் – உதாரணங்கள்

## இணைப்பினைத் தயாரித்தல்

மீன்பிடிப்பு நடவடிக்கைகளில் பன்னாட்டு சம்பிரதாயங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்பாடுகளின் தாக்கம் குறித்த உதாரணங்களை இந்த இணைப்பு கொண்டுள்ளது. மீன் பிடிப்பு மேலாண்மை, கப்பலின் இயக்கத்தால் ஏற்படும் மாசு படுத்தலைத் தடுத்தல், கடலில் பாதுகாப்பு மீன்பிடிப்புத் தொழிலில் பணி மற்றும் சேவைக்கான நிபந்தனைகள் போன்ற மீன் வள மேலாண்மையின் பல பகுதிகளை இந்த உதாரணங்கள் உட்படுத்தும். உரிய அதிகாரமுடையவர்(கள்) இந்த ஆவணங்களின் நிலை பற்றிய மேல் விபரங்களையும் பெற வேண்டும். முகவரிப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆவண தயாரிப்பு தொடர்பான பின்னணி ஆவணங்கள் பட்டியல் இடப்பட்ட ஆவணங்களை உள்ளடக்கும். கடல் விவகார கோட்டத்தின் வருடாந்திர ஆய்வு உ.ம.வே அமைப்பின் விபரங்கள் ஆதாரமும் (FARISIS) கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளன.

## உள்ளடக்கம்


பக்கம்

அ. ஐக்கிய நாடுகளில் ........ 36

ஆ. பன்னாட்டு கடல்சார் அமைப்பில் ........ 37

இ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பில் ........ 39

ஈ. பன்னாட்டு மீன்வள ஒப்பந்தங்கள் ........ 40

இணை 1

**அ. ஐக்கிய நாடுகளில்**

**1. கடல் திட்டுப்படுகை சம்பிரதாயங்கள், 1958. அமலில் உள்ளது.**

நோக்கம்

கடல்திட்டுப் படுகையின் இயற்கை ஆதாரங்களை ஆராய்தல் உபயோகித்தல் குறித்து வரையறை செய்து எல்லை நிர்ணயித்தல்.

**2. ஆழ்கடலில் உயிர் வாழும் ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் பிடித்தலுக்கான நியமங்கள், 1958. அமலில் உள்ளது.**

நோக்கம்

நவீன தொழில் நுட்ப வளர்ச்சி வசதியினால் ஆதாரங்களை அதிக அளவில் உபயோகிக்கும் அபாயநிலையை கருத்தில் கொண்டு ஆழ்கடலில் உயிர் வாழும் ஆதாரங்களைப் பாதுகாத்தல் தொடர்பான பிரச்சினைகளை பன்னாட்டு ஒத்துழைப்புடன் தீர்த்தல்

**3. ஆழ்கடல் மரபுகள், 1958. அமலில் உள்ளது.**

நோக்கம்

ஆழ்கடல் குறித்தான பன்னாட்டு சட்ட விதிகளை ஒழுங்குபடுத்தி தொகுத்தல்

**4. கப்பல் பதிவிற்கான ஐக்கிய நாடுகளின் நிபந்தனை மரபுகள், 1977.அமலில் இல்லை. (UNCTAD)**

நோக்கம்

உறுதி செய்யும் நோக்கம் மற்றும் நிலைக்கு ஏற்றவாறு நாடு மற்றும் அதன் கொடியை பறக்கவிடும் கப்பல்களுக்கு இடையே உண்மையான தொடர்பினை பலப்படுத்தவும், சக்தி வாய்ந்த வகையில் அதிகாரங்களைப் பயன்படுத்தவும் கப்பல் உரிமையாளர்கள், இயக்குவோர் இடையே பொறுப்புடைமை, அடையாளம் காணுதல் நிர்வாகம், தொழில் நுட்பம் பொருளாதாரம் மற்றும் சமூக நலம் குறித்தவைக்கானவை. கப்பல்களின் மீது எல்லை மற்றும் கட்டுப்பாடு உடைய கொடி நாடு இம்மரபுகள் உள்ளடக்கிய நிபந்தனைகளை உபயோகிக்கலாம்.

**5. கடல் சட்டத்தில் ஐக்கிய நாடுகளின் சம்பிரதாயங்கள், 1982. அமலில் உள்ளது.**

நோக்கம்

கடலுக்கான பரந்த புதிய சட்டபூர்வ பரிபாலனம் அமைத்திடவும் மற்றும் தேவையான சுற்றுப்புறச் சூழ்நிலை நிபந்தனைகள் குறித்து கடல் சார்ந்த சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுபடுதலை சமாளிக்க நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை சுற்றுப்புறச் சூழ்நிலைக்கான நியமங்கள் கொண்ட மூல விதிகளை தோற்றுவித்தல்

**6. ஓசோன் படலத்தைக் குறைக்கும் பொருட்களுக்கான மாண்டிரியல் மூலப்பத்திரம், 1987. அமலில் உள்ளது. (UNEP)**

நோக்கம்

ஏற்றத்தாழ்வு இன்றி உலக அளவில் வெளியிடப்படும் பொருட்களைக் குறைக்கும் விதத்தில், விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் அடிப்படையில், அவற்றின் நீக்கத்தை உடனடியான குறிக்கோளாகக் கொண்டு, தொழில் நுட்பம் மற்றும் பொருளாதாரக் கருத்துக்களை கணக்கில் கொண்டு, கட்டுப்படுத்த தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கையை, ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ளுதல்.

**7. கடல் சார் உரிமை மற்றும் அடமானம் மீதான பன்னாட்டு சம்பிரதாயங்கள், 1993. அமலில் இல்லை. (IMO/UNCTAD)**

நோக்கம்

கப்பல்களுக்கு நிதி கொடுத்தல் மற்றும் நாட்டில் கப்பல்களுக்கு வளர்ச்சிக்கான நிலையினை ஊக்குவித்தல்.

**ஆ. பன்னாட்டு கடல்சார் அமைப்பில்**

**8. பன்னாட்டு கடல்சார் போக்குவரத்தை எளிதாக்குதல் – சம்பிரதாயங்கள், 1965. அமலில் உள்ளது. (FAL)**

நோக்கம்

ஆவணங்களின் தேவைகள், வழக்கங்கள், பன்னாட்டு பயணங்களை மேற்கொள்ளும் கப்பல் வகை தங்குதல், புறப்பாடு பற்றிய தொடர்பான செய்முறைகளை எளிதாக்குதல், குறைத்தல், கடல் சார் போக்குவரத்தை எளிதாக்குதல்.

**9. சுமை வழி 1966 மற்றும் மூலக்கூறு குறித்த பன்னாட்டு சம்பிரதாயங்கள் 1988, அமலில் உள்ளது.**

நோக்கம்

உயிர் மற்றும் உடைமை பாதுகாப்பு குறித்த தேவையை கருத்தில் கொண்டு பன்னாட்டு பயணம் மேற்கொள்ளும் கப்பல்களில் பாரம் எற்றுதலுக்கான கோட்பாடுகள் மற்றும் விதிகள் ஒரே மாதிரியாக நிறுவப்படுதல்.

**10. கப்பல்களின் கொள்ளளவை அளத்தல் குறித்தான பன்னாட்டு சம்பிரதாயங்கள், 1969. அமலில் உள்ளது. (IMO/UNCTAD)**

நோக்கம்

பன்னாட்டு பயணங்களை மேற்கொள்ளும் கப்பல்களில் கொள் அளவினை அளப்பதற்காக கோட்பாடுகள் மற்றும் விதிகள் ஒரே மாதிரியாக நிறுவப்படுதல்.

**11. கடலில் மோதல்களை தடுத்திட ஏற்பாடுகள் குறித்து பன்னாட்டு சம்பிரதாயங்கள், 1972. அமலில் உள்ளது[1]**

நோக்கம்

கப்பலில் நிறுவப்பட வேண்டிய விளக்குகள், வடிவமைப்புகள் குறித்த கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளை நிறுவுதல்.

**12. கழிவுகள் மற்றும் பிறவற்றை குவிப்பதால் கடல்மாசு படுதலை குறித்த பன்னாட்டு சம்பிரதாயங்கள் (இலண்டன் சம்பிரதாயங்கள்/ LC, இலண்டன் குவிக்கும் சம்பிரதாயங்கள்/ LDC),1972. அமலில் உள்ளது.**

நோக்கம்

குவித்தல் மூலம் கடல் மாசுபடுதலை தடுத்தல் மற்றும் சம்பிரதாயங்களுக்கு இணைப்பாக மண்டல ஒப்பந்தங்களை ஊக்குவித்தல்.

---

1 *தள்ளுபடி செய்கிறது / COLREG* ***1960***

**13. கப்பல்களிலிருந்து மாசுபடுதலை தவிர்த்தல் – பன்னாட்டு சம்பிரதாயங்கள் அதன் மூலப்பத்திரத்தால் மாற்றப்பட்டவாறு 1978, MARPOL 73/78[2]. அமலில் உள்ளது.**

நோக்கம்

எண்ணெய் மற்றும் இதர தீங்கு தரும் பொருட்களால் ஏற்படும் மாசு பாட்டினை முழுதுமாக நீக்குதல், அத்தகைய பொருட்களின் எதிர்பாராத வெளியேற்றத்தைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் கடல் சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்தல்

**14. எண்ணெய் அல்லாத மற்ற பொருட்களால் கடல் மாசுபடுதல் குறித்தான பெருங்கடலில் தலையீடு குறித்த மூலக்கூறு ஆவணம் , 1973. அமலில் உள்ளது.**

நோக்கம்

எண்ணெய் அல்லாத மற்ற பொருட்களால் கடல்பகுதிக்கு அல்லது தொடர்பான உரிமைகளில் கடுமையான உடன் நிகழக்கூடிய அபாயமான மாசுபாட்டினால் கடல்சார் பகுதிகளில் விபத்துக்களில் முடியும் இனங்களில் நடவடிக்கை மேற்கொள்ள நாடுகளுக்கு வழிவகை செய்து தருதல்.

**15. கடலில் உயிர்ப்பாதுகாப்புக்காக பன்னாட்டு சம்பிரதாயங்கள் (SOLAS),1974, அதன் மாறுதல்கள் மற்றும் மூலக்கூறுகளுடன்[3]. அமலில் உள்ளது.**

நோக்கம்

பொதுவாக ஒப்பந்தம், ஒரே மாதிரியான கோட்பாடுகள் மற்றும் விதிகளை நிறுவுவதன் மூலம் கடலில் உயிர்ப்பாதுகாப்பினை அபிவிருத்தி செய்தல். முதல் பிரதி 1914 ல் கொண்டுவரப்பட்டது. இரண்டாவது 1933 ல் மூன்றாவது 1952 ல், நான்காவது 1965 ல் அமலுக்கு வந்தது. தற்போதைய ஒன்று 1974 முதல் பின்பற்றப்படுகிறது.

**16. கடல்சார் உரிமைகளில் கடன் வரையறுத்தலுக்கான சம்பிரதாயங்கள், 1976. அமலில் உள்ளது.**

நோக்கம்

வரையறுத்தலுக்கு உட்பட்ட, வரையறைக்கு விலக்கம் பெறக்கூடிய உரிமைகளில், கடல்சார் உரிமைகளில், கடன் வரையறுத்தல் குறித்து ஒரே மாதிரியான விதிகளை நிறுவுதல்.

**17. மீன்பிடிகலன்களின் பாதுகாப்பிற்கான டொரிமோலினோஸ் பன்னாட்டு சம்பிரதாயங்கள், 1977 மற்றும் டொரிமோலினோஸ் குறித்த 1993 மூலக்கூறு. அமலில் இல்லை.**

நோக்கம்

மீன்பிடிக்கலன்களின் கட்டுமானம், சாதனங்கள், நிலைத்த தன்மை, வானொலி செய்தித் தொடர்பு, இதர பாதுகாப்பு அம்சங்களுக்காக ஒரே மாதிரியான விதிகளை நிறுவுதல்.

**18. கப்பலோட்டிகளுக்கு கண்காணித்தல் பயிற்சி மற்றும் சான்று அளிக்கும் நியமங்களுக்கான பன்னாட்டு சம்பிரதாயங்கள், 1978 மற்றும் 1995ல் மாற்றியபடி. அமலில் உள்ளது.**

நோக்கம்

கப்பலோட்டிகளுக்கு கண்காணிப்பு பயிற்சி மற்றும் சான்றளித்தலில் சம்பிரதாயங்களை, பொதுவான ஒப்பந்தத்தில் நிறுவி கடலில், உயிர், உடமை, பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்பை நிறுவுதல்.

---

2 *தள்ளுபடி செய்கிறது / OILPOL* ***1954***

3 *தள்ளுபடி செய்கிறது/ SOLAS* ***19***

**19. கடல்சார் தேடுதல் மற்றும் காப்பாற்றுதலுக்கான பன்னாட்டு சம்பிரதாயங்கள், 1979. அமலில் உள்ளது.**

நோக்கம்

கப்பல் அறிவிக்கை ஒழுங்கு முறை அமைப்பு SAR சேவை, கடலில் துயரில் உள்ளோரை காப்பாற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்னாட்டு கடல்சார் தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் (SAR) திட்டத்தை நிறுவுதல்.

**20. கடல்சார் கப்பல் பயண பாதுகாப்புக்கு எதிராக சட்டப்புறம்பான நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கான சம்பிரதாயங்கள், 1988. அமலில் உள்ளது.**

நோக்கம்

பாதுகாப்பினை மேம்படுத்துதல் கப்பலில் உள்ள செலுத்துவோர் மற்றும் பயணிகளுக்கு ஆபத்தினை குறைத்தல்.

**21. அழிவின் மீட்புக்கான பன்னாட்டு சம்பிரதாயங்கள், 1989. அமலில் இல்லை.**

நோக்கம்

அழிவின் மீட்பு நடவடிக்கை குறித்து ஒரே மாதிரியான விதிகளை நிறுவுதல்

**22. மீன்பிடிகலன் பணியாளர்களுக்கான கண்காணிப்பு, சான்றளித்தல் பயிற்சி நியமங்களுக்கான பன்னாட்டு சம்பிரதாயங்கள், (1995). அமலில் இல்லை.**

நோக்கம்

மீன்பிடிகலனின் பணியாளர்களுக்கான கண்காணிப்பு, சான்றளித்தல் பயிற்சி நியமங்களுக்கான பன்னாட்டு சம்பிரதாயங்களை பொதுவான ஒப்பந்தத்தில் நிறுவி கடலில் உயிர் உடமை மற்றும் கடல் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்பினை நிறுவுதல்

**இ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பில்**

**23. வற்புறுத்தப்பட்ட தொழிலாளர் சம்பிரதாயம் 1930 (எண். 29).**

நோக்கம்

வற்புறுத்தப்பட்ட மற்றும் கட்டாய தொழிலாளரை எவ்வகையிலும் உபயோகப்படுத்துவதை முடிவுக்கு கொண்டு வருதலை கோட்பாடாக நிறுவுதல்

**24. சங்கத்திற்கான சுதந்திரம் மற்றும் சம்பிரதாயம் அமைக்கும் உரிமையை பாதுகாத்தல் 1946 (எண். 87) மற்றும் தொடர்பான சம்பிரதாயங்கள். (எண். 98 மற்றும் 135). அமலில் உள்ளது.**

நோக்கம்

அனைத்து தொழிலாளர்களுக்கும் சங்கத்திற்கான சுதந்திரம் மற்றும் அமைப்பு உரிமையை தங்களுக்கிடையே தன்னார்வ ஒப்பந்த பேரங்களை மேம்படுத்த கோட்பாடு நிறுவுதல்

**25. வற்புறுத்தப்பட்ட தொழிலாளர் மரபினை நீக்குதல் 1957, (எண்.105)**

நோக்கம்

குறிப்பான சந்தர்ப்பங்களில் எவ்வகையில் ஆயினும் வற்புறுத்தப்பட்ட அல்லது கட்டாயப்படுத்தப்பட்ட தொழிலாளர் உபயோகத்தைத் தடுத்தல்

**26. (வேலைவாய்ப்பு மற்றும் வேலை) வித்தியாசம் காணும் மரபு 1958, (எண். 111)**

நோக்கம்

குறித்த காரணங்களுக்காக வேலை வாய்ப்பு மற்றும் வேலைக்கு இடையே வித்தியாசம் காணுதல் கூடாது என்பதற்கான கோட்பாடு நிறுவுதல்

**27. மருத்துவ பரிசோதனை (மீனவர்) சம்பிரதாயங்கள், 1959, (எண். 113)**

நோக்கம்

மீனவரின் வயது, மேற்கொள்ளவிருக்கும் பணி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவ பரிசோதனைகளுக்கு நியமங்கள் ஏற்படுத்துதல்

**28. மீனவருக்கான ஒப்பந்த கட்டுரைகள் மரபு, 1959, (எண். 114)**

நோக்கம்

மீனவர்களுக்கான ஒப்பந்த கட்டுரைகளில், வேலைவாய்ப்பில் அவர்களுக்கான நிபந்தனைகள் தெளிவாக அமைக்கப்பட்டு, மீன்பிடிகலனின் உரிமையாளர் அல்லது அவரது பிரதிநிதி கையொப்பமிட அமைப்புகளை நிறுவுதல் வேண்டும்.

**29. மீனவரின் தகுதிச் சான்றிதழ் மரபு , 1966, (எண். 125)**

நோக்கம்

கடற்பிரயாண விபரங்கள், பன்னாட்டு கட்டுப்பாடுகள் பற்றிய அறிவு, பாதுகாப்பாக செயல்படும் முறைகள், இயந்திரங்கள் மற்றும் சாதனங்களை இயக்குதல், பொருத்தமான மீன்பிடி தொழில் நுட்பங்கள் மற்றும் கோட்பாடு, செயல்முறையில் பெறப்படும் பயிற்சிகளின் அளவு போன்ற விபரங்களை பாடத்திட்டத்தில் பொருட்களாக அமைத்தல்.

**30. செலுத்துவோரின் (மீனவரின்) இட வசதிக்கான சம்பிரதாயங்கள், 1966, (எண். 126)**

நோக்கம்

அவசர நிலையில் தப்பித்தல் உட்பட போதிய பாதுகாப்பு, காலநிலையிலிருந்து பாதுகாத்தல், தூங்குமிடங்களில் காற்றோட்டம், சமைக்கும் இட வசதிகள், மருத்துவப் பெட்டி, நோயுற்றோர் தங்குமிட வசதிகள் உறுதி செய்யப்படுதல்.

**31. கப்பலோட்டிகளை நாட்டிற்கு திருப்பிஅனுப்புதலுக்கான சம்பிரதாயங்கள் (புதுப்பிக்கப்பட்டது), 1987, (எண். 166), அமலில் உள்ளது**

நோக்கம்

கப்பலிலிருந்து வெளியேறும் கப்பலோட்டிகளை திருப்பி அனுப்புவதற்கான நிபந்தனைகளை நிறுவுதல்.

**ஈ. பன்னாட்டு மீன்வள ஒப்பந்தங்கள்**

**32. கடல் துருவி சோதனைகளுக்கான பன்னாட்டு மன்றத்தின் சம்பிரதாயம் (திருத்தப்பட்டது) அமலில் உள்ளது**

நோக்கம்

கோப்பென்ஹேஹெனில் 1982 ல் நிறுவப்பட்ட கடல் துருவி சோதனைகளுக்காக பன்னாட்டு மன்றத்தின் புதிய அமைப்பு விதிகள் ஏற்படுத்துதல்.

**33. அமெரிக்கா இடையில் வெப்ப மண்டல சூரை மீன்களுக்கான குழு நிறுவுதலுக்கான சம்பிரதாயம், அமலில் உள்ளது**

நோக்கம்

கிழக்கு பசிபிக் பெருங்கடலில் மஞ்சள் மற்றும் இதர வகை சூரை மீன்களின் எண்ணிக்கையைக் காப்பாற்ற, நிலைநிறுத்தக் கூடிய அளவில் மீன் பிடிப்பை வருடந் தோறும் அனுமதித்தல்.

**34. வடக்கு பசிபிக் கடலில் ஆழ்கடல் மீன் வளத்திற்கான பன்னாட்டு சம்பிரதாயம், (திருத்தப்பட்டவாறு). அமலில் உள்ளது**

நோக்கம்

பசிபிக் கடலின் மீன் வள ஆதார உற்பத்தியை முடிந்த அளவில் நிலைநிறுத்தலை உறுதி செய்யும் இலக்கிற்காக ஆராய்ச்சி மற்றும் பாதுகாத்தலை ஒருங்கிணைத்தல்.

**35. வடகிழக்கு அட்லாண்டிக் மீன் வள சம்பிரதாயத்தை (27/6/63) தள்ளுபடி செய்த எதிர்கால பல்நோக்கு கூட்டுறவுக்கான சம்பிரதாயம் அமலில் உள்ளது.**

நோக்கம்

வடகிழக்கு அடலாண்டிக் மற்றும் அடுத்துள்ள நீர்ப்பரப்பில் மீன் ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் தேசீய உபயோகத்தை உறுதி செய்தல்.

**36. கடல்சார் மீன்பிடிப்பில் கூட்டுறவு குறித்த ஒப்பந்தம் , அமலில் உள்ளது**

நோக்கம்

கடல்சார் மீன்பிடிப்பு, மீன்பிடிப்பு தொழில் நுட்பங்கள் மீன் பதனிடும் தொழில் நுட்பம், கடல் வாழ் உயிரின ஆதாரங்களின் நிலைகுறித்த விஞ்ஞான ஆராய்ச்சி மேம்பாடு ஆகியவைக்கான ஒத்துழைப்பை பேணுதல்.

**37. அட்லாண்டிக் சூரை மீன்வகை பாதுகாத்தல் குறித்த பன்னாட்டு சம்பிரதாயம். அமலில் உள்ளது (உ வே அ)**

நோக்கம்

சூரை மற்றும் அது போன்ற மீன்களின் எண்ணிக்கையை அட்லாண்டிக் கடலில் ஒரே நிலையில் நிர்வகிக்க, உணவு மற்றும் இதர உபயோகங்களுக்கு முடிந்த அளவில் நிலைநிறுத்தும் வகையில் அனுமதித்தல்.

**38. வடமேற்கு அட்லாண்டிக் கடலில் மீன்வளத்திற்கான எதிர்கால பல்நோக்கு ஒத்துழைப்பு சம்பிரதாயம். அமலில் உள்ளது**

நோக்கம்

விரிவாக்கப்பட்ட கரையோர நாடுகளின் மீன்வள கட்டுப்பாட்டு எல்லையில் பொருந்திய திட்டத்தின் கீழ் வடமேற்கு அட்லாண்டிக் பகுதியில் மீன்வள ஆதாரங்களை அனுகூலமான உபயோகத்திற்காக பாதுகாத்தலை மேம்படுத்துதல், இவ்வகை ஆதாரங்கள் குறித்த பன்னாட்டு ஒத்துழைப்பு கலந்தாய்வு ஆகியவற்றை ஊக்கப்படுத்துதல்.

**39. தென்பசிபிக் மீன்வள பிரதிநிதித்துவ பொதுமன்றத்தின் சம்பிரதாயம். 1979. அமலில் உள்ளது (உ வே அ)**

நோக்கம்

உயிர்வாழும் கடல் ஆதாரங்களைப் பாதுகாத்தல் அனுகூலமான உபயோகம், குறிப்பாக அதிகம் நகரும் இனங்களில் மீன்வளக் கொள்கைகளில் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் இணைந்து செயல்படுதல் ஆகியவற்றை தென்பசிபிக் பிராந்தியத்தில் உறுதி செய்தல்.

இணை 1

**40. அண்டார்டிக் கடல்வாழ் ஆதாரங்களைப் பாதுகாத்தல் சம்பிரதாயம். 1982. அமலில் உள்ளது.**

நோக்கம்

சமநிலையான உயிர்வாழும் கடல் ஆதாரங்களின் அழிவுகளைத் தவிர்க்கும் பொருட்டு கடல் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்தலுக்கான நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல்

**41. வடஅட்லாண்டிக் கடலில் Salmon வகைகளை பாதுகாத்தலுக்கான சம்பிரதாயம். 1982. அமலில் உள்ளது.**

நோக்கம்

வடக்கு அட்லாண்டிக் கடலில் Salmon வகைகளின் இருப்பை பன்னாட்டு ஒத்துழைப்புடன் பாதுகாத்தலை ஊக்கப்படுத்துதல்

**42. நீண்ட மிதப்பு வலைகளில் தென் பசுபிக் கடலில் மீன் பிடிக்க தடை – சம்பிரதாயம். 1989. அமலில் உள்ளது.**

நோக்கம்

சம்பிரதாயத்திற்கு உட்பட்ட பகுதியில் மிதப்பு வலை மீன்பிடிப்பு நடைமுறைகளை பன்னாட்டு விதிகளுக்கு உட்பட்டு குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**43. ஆழ்கடலில் மீன்பிடிக்கும் கலன்கள் பன்னாட்டு பாதுகாத்தல் மற்றும் நிர்வாக முறைகளுக்கு இணக்கமாவதை மேம்படுத்த ஒப்பந்தம், 1993. அமலில் இல்லை (உவேஅ).**

நோக்கம்

ஆழ்கடல் மீன்பிடிப்பில் சம்மதிக்கப்பட்ட பாதுகாத்தல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு இணக்கத்தைத் தவிர்க்க, கொடியிடுதல் மற்றும் மறுகொடியிடுதலை நிறுத்த, ஆழ்கடலில் மீன்பிடிக்கும் கலன்களுக்கு அங்கீகார அமைப்பு நிறுவுதல்

**44. 1995 இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம்பெயரும் மீன் இருப்புகளை பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல் குறித்த 10.12.1982 கடல் சட்டத்தின் ஐக்கிய நாடுகளின் சம்பிரதாய நிபந்தனைகளை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம், அமலில் இல்லை.**

நோக்கம்

இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம்பெயரும் மீன் இருப்புகளை பாதுகாத்தல் தொடர்பான நிபந்தனைகளை செயல்படுத்தி நீண்ட கால பாதுகாப்பு மற்றும் நிலைநிறுத்தப்பட்ட உபயோகம் ஆகியவற்றை உறுதி செய்தல். இந்த ஒப்பந்தம் குறிப்பிலுள்ள மேற்பட்ட பகுதிகளில் பொருந்திய இனங்களை தேசீய எல்லைக்குள் பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தலுக்குப் பயன்படும்.

விதித்தொகுப்பில் தெரிவிக்கப்பட்ட வடிவமைப்பு வகைகள், கலன்களின் கட்டுமானம், இவற்றின் இயக்கங்கள் ஆகியவற்றில் பன்னாட்டு சம்பிரதாயங்கள் ஒப்பந்தங்கள், ஏற்பாடுகள் அல்லது பிற சட்ட பூர்வமான உபகரணங்கள் விளைவை ஏற்படுத்தும். மேற்கண்ட உதாரணங்கள், பல தீர்மானங்கள், பரிந்துரைகளால் ஆதரவு அளிக்கப்படுகிறது. கடல் விவகாரக் கோட்டம், கடல் சட்டம் அல்லது உரிய நிறுவனங்களிலிருந்து உள்ளடக்கம் மற்றும் இந்த உபகரணங்களின் தற்போதைய நிலைகுறித்து மேல் விபரம் பெறலாம்.

இணை 1

கடல் விவகாரக்கோட்டம் மற்றும் கடல்சட்டம்
ஐக்கிய நாடுகள், நியூயார்க்,
N.Y. 10017, USA

ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி கூட்டம் (UNCTAD)
பாலைஸ் டெஸ் நேஷன்ஸ், CH-1211 ஜெனிவா –10, சுவிட்சர்லாந்து

ஐக்கிய நாடுகளின் சுற்றுப்புறச் சூழ்நிலை திட்டம்,
த. பெ. எண் 30552, நைரோபி, கென்யா

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு
4, ரூட் டெஸ் மோரில்லான்ஸ், CH–1211 ஜெனிவா –22
சுவிட்சர்லாந்து

பன்னாட்டு கடல்சார் அமைப்பு
4, ஆல்பர்ட் எம்பார்க்மெண்ட்
லண்டன், SEI 7SR, United Kingdom

பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியம்
பிலேஸ் டெஸ் நேஷன்ஸ், CH–1211 ஜெனிவா –20
சுவிட்சர்லாந்து

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
வியாலே டெல்லே டெர்மே டி காரகல்லா
00100, ரோம், இத்தாலி

அண்டார்டிக் கடல்வாழ் ஆதாரங்களைப் பாதுகாக்கும் ஆணைக்குழு
25, ஓல்டு வார், ஹோபார்ட் , டாஸ்மானியா, ஆஸ்திரேலியா

தென்பசிபிக் மீன்வள பிரதிநிதித்துவ பொது மன்றம்
த.பெ. எண் 629, ஹோனியாரா, சாலமன் தீவுகள்

அமெரிக்கா இடையில் வெப்ப மண்டல சூரை மீன் வகைக்கான ஆணைக்குழு
ஸ்கிரிப்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஓசனோகிராபி,
A 003 லா ஜோல்லா, CA 92093, USA

அட்லாண்டிக் சூரை மீன் பாதுகாத்தலுக்கான பன்னாட்டு ஆணைக்குழு
பிரின்ஸ்ப்பி டி வெர்கானா, 17-28001, மேட்ரிட், ஸ்பெயின்

கடல் துருவாய்வு சோதனைக்கான பன்னாட்டு மன்றம்
பாலகிரேடு 2–4, DK1261 ஹோபென்ஹேகன், டென்மார்க்

வடக்கு அட்லாண்டிக் மீன்வள அமைப்பு
த.பெ.எ 638, டார்ட் மௌட், நோவா ஸ்கோட்டியா, கனடா

வடக்கு அட்லாண்டிக் Salmon வகையினை பாதுகாத்தல் ஆணைக்குழு
11, ருட்லாண்ட் ஸ்கொயர், எடின் பர்க், EHI 2AS, United Kingdom

# இணைப்பு 2

மீன்பிடிகலன்கள் குறி அடையாளம் இடுதல் மற்றும்
அடையாளம் காணுதலுக்கான தரப்படுத்தப்பட்ட விபரங்கள்

இணைப்பினைத் தயாரித்தல்

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழு 1989 ஏப்ரலில் ரோமில் சம்மதித்து பரிந்துரைத்த மீன்பிடிக்கலன்களுக்கு குறி அடையாளம் இடுதல் மற்றும் அடையாளம் காணுதல் குறித்து நியமிக்கப்பட்ட அமைப்பின் விபரங்களை இந்த ஆவணம் கொண்டுள்ளது.

இப்பொருள் குறித்த பின்னணி ஆவணங்கள் மீன்பிடிக்கலன் குறியிடுதலுக்கான வல்லுநர் கலந்தாய்வறிக்கை மார்ச் 11–15, 1985 நியூஸ்கோடியா கனடா (உவேஅ மீன்வள அறிக்கை எண். 343), ஜூன் 16–20 1986 ரோம் மீன்வள மேலாண்மை மற்றும் அபிவிருத்திக்கான உலக கூட்ட அறிக்கை (உவேஅ மீன் வள அறிக்கை எண். 367 மற்றும் ஏப்ரல் 10–14, 1989 உவேஅ மீன்வளக்குழுவின் 18வது அமர்வு அறிக்கை (உவேஅ மீன்வள அறிக்கை எண். 416)

இணை 2

# உள்ளடக்கம்

பக்கம்


**முகவுரை** ................ 46

**1. பொதுவான ஏற்பாடுகள்** ................ 46

1.1 நோக்கம் மற்றும் வாய்ப்பு ................ 46

1.2 வரையறை ................ 46

1.3 தரப்படுத்தப்பட்ட விபரங்களுக்கான அடிப்படை ................ 47

**2. அடிப்படை முறை மற்றும் பயன்பாடு** ................ 47

2.1 அடிப்படை முறை ................ 47

2.2 பயன்பாடு ................ 47

**3. தொழில் நுட்ப விபரங்கள்** ................ 48

3.1 எழுத்து மற்றும் எண்களுக்கான நியமங்கள் ................ 48

3.2 வர்ணம் பூசுதல் ................ 49

**4. குறி அடையாளங்களைப் பதிவு செய்தல்** ................ 50

**5. பன்னாட்டு அழைப்பு சங்கேதக்குறிகள் ஒதுக்கீடு** ................ 50

இணை 2

**முகவுரை**

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு 1984 உலக மீன்வளக் கூட்டத்தில் மீன்பிடிகலன்களில் குறி அடையாளமிடுதல் மற்றும் அடையாளம் காணுதலுக்கான நியமிக்கப்பட்ட பன்னாட்டு விபரங்களின் தேவைக்கு ஒப்புதல் அளித்தது. மீன்பிடிகலன்களுக்கு குறி அடையாளமிடுதலுக்காக கனடா அரசு ஹாலிபேக்ஸ், நோவா ஸ்கோட்டியா, கனடாவில் 1985ல் உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து நடத்திய வல்லுநர் கலந்தாய்வு, நியமிக்கப்பட்ட அமைப்பிற்கான அடிப்படையை விரிவாக்கியது.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழுவின் 16 வது அமர்வு மேற்கொண்ட வல்லுநர் கலந்தாய்வு அறிக்கையின் ஆய்வு, மீன்பிடிகலன்களில் குறி அடையாளம் இடுதலுக்கான தொழில் நுட்ப விபரங்களுக்கு 1986 ஜூனில் கூட்டப்பட்ட வல்லுநர் கலந்தாய்வில் முடிந்தது.

இங்கு குறிக்கப்பட்ட விபரங்களை 1989 ஏப்ரலில் நடைபெற்ற உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழு, கொடியிட்ட நாடுகள் தவிர்த்து, இதர நாடுகளின் நீர்ப்பரப்பில் இயக்கத்தில் உள்ள மற்றும் இயக்க விரும்பும் மீன் பிடிகலன்கள், தன்னார்வ அடிப்படையில் அடையாளம் காண நியமிக்கப்பட்ட அமைப்பாக, நாடுகள் பின்பற்ற சம்மதம் தெரிவித்தது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பக தலைமை அலுவலர், உலக கடலாண்மை நிறுவனம் (IMO) பன்னாட்டு தொலைத்தொடர்பு மன்றம்(ITU) செயலாளர் மற்றும் அலுவலர்களுக்கு, மீன்வள மேலாண்மைக்கும் கடலில் பாதுகாப்பிற்கும் உதவியாக, இந்த நியமிக்கப்பட்ட விபரங்களைப் பின்பற்ற தெரிவித்துள்ளார்.

**1. பொதுவான ஏற்பாடுகள்**

**1.1 நோக்கம் மற்றும் வாய்ப்பு**

1.1.1 பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்றம் ரேடியோ அழைப்பு (சங்கேதக்) குறி முறைகளின் அடிப்படையில், மீன்வள மேலாண்மை மற்றும் கடலில் பாதுகாப்பிற்கு உதவிட, மீன்பிடிகலன்களை அடையாளம் காண்பதற்காக குறி அடையாளம் இடப்படவேண்டும். (IRCS)

1.1.2 கொடியிட்ட நாடு தவிர்த்து, இதர நாடுகளிலிருந்து நீர்ப்பரப்பில் இயங்கும், இயக்க விரும்பும் மீன்பிடிகலன் மீன் பிடிக்க, துணை நடவடிக்கையில் ஈடுபட எக்கலனையும் இந்த தரப்படுத்தப்பட்ட விபரங்களின் நோக்கத்திற்காக ‘‘கலன்’’ என்ற வார்த்தை உபயோகம் குறிக்கும்.

**1.2 வரையறை**

இந்த விபரங்களின் நோக்கத்திற்காக

அ) மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் கலனில் ஏற்றிச் செல்லப்படும் மற்றொரு படகு, சிறிய லேசான படகு, மரப்படகு (வானூர்தி தவிர) ஆகியவற்றை ‘‘கலன்’’ என்ற வார்த்தை உள்ளடக்கும்.

ஆ) படுக்கையான எந்த ஒரு பரப்பும், மாலுமி அறையின் மேற்கூரை உட்பட தளம் ஆகும்.

இ) வழங்கப்பட்ட பன்னாட்டு தொலைத் தொடர்பு ரேடியோ அழைப்பு சங்கேதக்குறி ரேடியோ நிலையம் எனப்படும்.

### 1.3 தரப்படுத்தப்பட்ட விபரங்களுக்கான அடிப்படை

தரப்படுத்தப்பட்ட விபரங்களுக்கான அடிப்படை, IRCS கீழ்க்கண்ட தேவைகளை எதிர்கொள்கிறது.

அ) அளவு மற்றும் கொள் அளவினைக் கருதாது அவற்றிற்காக பதிவேடு நிர்வகிக்கப்படினும் கலனின் தேசீயம் மற்றும் அடையாளம் இவற்றை உடனடியாகத் தீர்மானிக்க நிறுவப்பட்ட பன்னாட்டு ஏற்பாட்டினை உபயோகித்தல்;

ஆ) பன்னாட்டு மரபுகள், தேசியம், இருநோக்கு பழக்கங்கள் ஆகியவற்றிற்குப், பாதகம் இல்லாமை,

இ) அரசு மற்றும் கலன் உரிமையாளர்களுக்கு மிகக் குறைந்த அளவில் நிர்வாகம் மற்றும் செயல்பாட்டுச் செலவினம்,

ஈ) தேடுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எளிதாக்குதல்.

### 2. அடிப்படை முறை மற்றும் பயன்பாடு

### 2.1 அடிப்படை முறை

2.1.1 தரப்படுத்தப்பட்ட விபரங்கள் கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் ஆனவை

அ) நாட்டின் கப்பல் நிலையங்களுக்கு (சங்கேதக்) குறி வழங்கிட பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்ற முறை

ஆ) எழுத்து மற்றும் எண்களுக்காக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவமைப்பு நியமங்கள்

2.1.2 பன்னாட்டு தொலைத் தொடர்பு ரேடியோ அழைப்புக்குறிகள் கலன்களில் குறியிடப்பட வேண்டும் (IRCS)

2.1.3 கீழ் உள்ள 2.2.6 பத்தியில் உள்ளதைத் தவிர்த்து (IRCS) வழங்கப்படாத கலன்களின், பன்னாட்டு தொலைத்தொடர்பு மன்றத்தால் (ITU), கொடி நாட்டிற்கு வழங்கப்பட்ட அம்சங்கள், மற்றும் தொடர்த ல் பொருத்தம் எனில் கொடி நாட்டிற்கு ஒதுக்கிய உரிமம், பதிவு எண் குறிப்பிட்டிருக்கப்பட வேண்டும். அந்நிகழ்வுகளில், தேசீய அடையாளம் காட்டும் அம்சங்கள் மற்றும் கலனை அடையாளம் காட்டும் உரிமம், பதிவு எண்கள் ஆகியவை இடைக்குறிகளுக்கு இடையே அமைக்கப்படுதல் வேண்டும்.

2.1.4 எழுத்துக்கள் ஐ மற்றும் ட இவற்றிற்கிடையே குழப்பத்தினைத் தவிர்க்கும் பொருட்டு எண்கள் 1 மற்றும் 0 பிரத்யேகமாக (ITU) அழைப்பு சங்கேத குறிகளில் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2.1.5 கலன்களின் பெயர் அல்லது அடையாளக் குறி தேசீய பழக்கம் அல்லது தேசீய சட்டத்தில் தேவைப்பட்டபடி பதிவு செய்யப்பட்ட துறைமுகம் தவிர்த்து குறிப்பிட்டபடி இக்குறியிடும் முறையில், குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு, பிற கலன்களில் மட்டும் எழுத்து மற்றும் எண்கள் கொண்ட அடையாளக்குறிகள் கப்பலின் உடற்பகுதியில் அல்லது மேலுள்ள பகுதியில் வர்ணத்தால் இடப்பட வேண்டும்.

2.2 பயன்பாடு

2.2.1 அடையாளக் குறிகள் எப்பொழுதும் கவனத்தைக் கவரும் வகையில் காட்டப்பட வேண்டும்.

இணை 2

அ) கப்பல் பக்கப்பகுதி அல்லது மேலே உள்ள பகுதி, இடப்புறம் மற்றும் வலப்புறம், கலனின் பக்கம் அல்லது மேல் பகுதியில் ஒரு கோணத்தில் சரிந்த நிலையான இணைப்பு, ஒரு கோணத்தில் சாய்மானம், வானிலிருந்தோ அல்லது பிற கலனிலிருந்தோ குறியீட்டைக் காண்பதை தடுக்க வில்லையெனில் பொருத்தமான இடமாகவே கருதப்படும்.

ஆ) தளத்தில், கீழ்க்கண்ட 2.2.4 பத்தியில் குறித்தானவை தவிர்த்து, சூரிய வெப்பத்திற்கு எதிராக மூடி இடுதல் அல்லது பிற தற்காலிக உறைகள் தளத்தின் குறியீடுகள் புலப்படாத வகையில் இடப்படும் எனில் மூடிகள் மற்றும் உறைகளும் குறியிடப்பட வேண்டும். இக்குறிகள் எழுத்து மற்றும் எண்களின் மேற்பகுதி வளைவான முன் பகுதியை நோக்கி குறுக்காக வைக்கப்பட வேண்டும்.

2.2.2 இருபுறமும் நீர்மட்டக் கோட்டிற்கு மேலாக எவ்வளவு இயலுமோ அவ்வளவு உயரத்தில் குறிகள் இடப்பட வேண்டும். கலத்தின் அடிப்பகுதி, சீறி எழும் வளைவான முன்பகுதி மற்றும் பின்பகுதி ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும்.

2.2.3 இக்குறிகள்:

அ) மீன்பிடி வலைகளை உபயோகப்படுத்தும் பொழுதோ அல்லது அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொழுதோ மறைக்காத வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

ஆ) கால்களால் மிதி படாத வண்ணம் அல்லது சில வகையான மீன்பிடிப்புகளில் சிலவகை இனங்கள் சேதம் ஏற்படுத்தும் அல்லது வர்ணத்தைப் போக்கும் பகுதிகள் உள்ளிட்ட கலனிலிருந்து வெளியாகும் கழிவுகளினால் சேதம் ஏற்படாதபடி தெளிவாக அமைக்கப்பட வேண்டும்.

இ) நீர்மட்டக் கோட்டிற்கு கீழே விரிவு படுத்துதல் கூடாது.

2.2.4 படுக்கை வசப்பரப்பில் குறிகளைக் காட்ட வேண்டிய தேவை தளமில்லாத கலன்களுக்கு ஏற்படாது. எனினும், எங்கு இயலும் எனில் அங்கு, வானிலிருந்து தெளிவாகப் பார்க்கும் வண்ணம் குறிகளைத் தாங்கிய பலகைகளை பொருத்த கலன் உரிமையாளர்கள் ஊக்கப்படுத்தப்படு தல் வேண்டும்.

2.2.5 பாய்மரம் பொருத்தப்பட்ட கலன்களில் கலன் அடிப்பகுதிக்கு கூடுதலாக பாய்மரங்களிலும் குறிகள் காட்டப்பட வேண்டும்.

2.2.6 கலன் கொண்டிருக்கும் அதே குறிகளை, மீன்பிடி நடவடிக்கைகளுக்காகக் கலன் கொண்டு செல்லும் படகு சிறிய லேசான படகு போன்றவையும், கொண்டிருக்க வேண்டும்.

2.2.7 உவே அமைப்பின் மீன்பிடிக்கலன்களுக்கான குறியிடுதல் மற்றும் அடையாளம் காணுதலுக்கான நியமிக்கப்பட்ட விபரங்கள்வெளியீட்டில் பக்கம் 47 முதல் 69 வரை குறிகள் அமைத்தலுக்கான உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3. தொழில் நுட்ப விபரங்கள்

3.1 எழுத்து மற்றும் எண்களுக்கான நியமங்கள்.

3.1.1 முழுதும் அச்சான எழுத்துக்கள் மற்றும் எண்களை உபயோகித்தல்

3.1.2 எழுத்து மற்றும் எண்களின் அகலம் உயரத்திற்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும்

3.1.3 எழுத்து மற்றும் எண்களின் உயரம் கீழ்க்கண்டவற்றிற்கு இணங்க கலத்தின் அளவுக்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

அ) கப்பலின் பகுதி மேல் பகுதி, மற்றும் / அல்லது சாய்மானப்பகுதியில் அமைக்கப்படும் குறிகளுக்கான விபரங்கள்

| கலனின் நீளம் முழுதுமாக (LOA) மீட்டரில் (மீ) | எழுத்து மற்றும் எண்களின் உயரம் மீட்டரில் (மீ) கீழ்க்கண்டவற்றிற்கு குறையாதவாறு |
|---|---|
| 25 மீ மற்றும் அதற்கு மேல் | 1.0 மீ |
| 20 மீ மற்றும் 25 மீ குறைந்த | 0.8 மீ |
| 15 மீ மற்றும் 20 மீ குறைந்த | 0.6 மீ |
| 12 மீ மற்றும் 15 மீ குறைந்த | 0.4 மீ |
| 5 மீ மற்றும் 12 மீ குறைந்த | 0.3 மீ |
| 5 மீ கீழ் | 0.1 மீ |

ஆ) 5மீ மற்றும் அதற்கு மேலான எல்லாவகைக் கலன்களிலும் தளத்தில் அமைக்கப்படும் குறிகளுக்கான உயரம் 0.3மீக் கு குறையாத அளவில் இருக்க வேண்டும்.

3.1.4 இடைக்குறிகளின் நீளம், எழுத்து மற்றும் எண்களின் உயரத்தில் பாதியளவாக இருக்க வேண்டும்.

3.1.5 எழுத்து, எண் மற்றும் இடைக்குறிகளின் கோடுகளின் அகலம், உயரம் h/6 ஆக இருக்க வேண்டும்.

3.1.6 இடைவெளி

அ) எழுத்து மற்றும் எண்களுக்கான இடைவெளி, உயரம்/6 க்கு குறையாது, உயரம் h/4 க்கு மேற்படாது இருக்க வேண்டும்.

ஆ) அடுத்தடுத்த சரிவான பகுதி கொண்ட எழுத்துக்களுக்கிடையே இடைவெளி, உயரம் h/ 10க்கு குறையாது, உயரம் h/8 க்கு மேற்படாது இருக்க வேண்டும். உதாரணம் AV

### 3.2 வர்ணம் பூசுதல்

3.2.1 இக்குறி அடையாளங்கள்

அ) கருப்புப் பின்னணியில் வெள்ளை அல்லது

ஆ) வெள்ளைப் பின்னணியில் கருப்பு ஆக இருக்க வேண்டும்.

3.2.2 குறி அடையாளத்தைச் சுற்றி, உயரம் h/6 க்கு குறையாத அளவில், ஓரம் அமைக்கப்படும் வகையில் பின்னணி விரிவாக்கப்பட வேண்டும்.

3.2.3 முழுவதுமாக தரம்வாய்ந்த கடல் சார் வர்ணங்களைப் பயன்படுத்த வேண்டும்.

3.2.4 இக்குறி அடையாளங்கள் இப்பொருட்களின் தரப்படுத்தப்பட்ட விபரங்களை அளிக்கும் பட்சத்தில், பின்னுக்கு பிரதிபலிக்கும் அல்லது வெப்பம் உண்டாக்கும் பொருட்களின் உபயோகம் ஏற்கப்படும்.

3.2.5 எப்பொழுதும் குறி அடையாளங்கள் மற்றும் பின்னணி நல்ல நிலையில் நிர்வகிக்கப்பட வேண்டும்.

## 4. குறி அடையாளங்களைப் பதிவு செய்தல்

4.1 கலன்களின் தேசீயம் மற்றும் அதன் பெயர் விபரங்களை, பன்னாட்டு ரேடியோ அழைப்பு சங்கேதக்குறி பதிவேடுகளை, உலக அளவில் பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்றம் நிர்வகித்துப் புதுப்பிக்கும்.

4.2 பன்னாட்டு ரேடியோ அழைப்பு சங்கேதக்குறி வழங்கப்பட்ட கலன்களின் தனிப்பட்ட பதிவேட்டை நிர்வகிப்பதோடு கூடுதலாக கொடி நாடு தான் வழங்கிய தேசிய சின்னத்தை (பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்றத்தால் ஒதுக்கப்பட்ட) தொடர்ந்து இடைக்குறி மற்றும் உரிமம் எண் பெற்ற கலன்களின் பதிவேடுகளை நிர்வகிப்பதோடு,
அக்கலன்களின் உரிமையாளர் மற்றும் விபரங்களை கொண்டிருக்க வேண்டும்.

## 5. பன்னாட்டு அழைப்பு சங்கேதக் குறிகள் ஒதுக்கீடு

5.1 பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்றம், ஜெனிவா, அழைப்பு சங்கேதக் குறிகளை நாடுகளுக்கு வழங்குகிறது. இதற்காக மொழியின் எழுத்துக்களின் வடிவம் அல்லது எழுத்துக்கள் அல்லது எண்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. உதாரணமாக–

- இத்தாலிக்காக வழங்கப்பட்ட அழைப்பு சங்கேதக்குறி வரிசைகளில் ஒன்று LAA-IZZ உட்பட்டது
- மலேசியாவிற்கு வழங்கப்பட்ட அழைப்பு சங்கேதக் குறி வரிசைகளில் ஒன்று 9WA–9wz ஆகும்

5.2 பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்றத்தால் வழங்கப்பட்ட அழைப்பு சங்கேதக்குறிகள் கொடி நாட்டின் அடையாளத்தைக் காட்டுகிறது. “ ரேடியோ நிலையத்தை” அடையாளம் காட்ட, கொடி நாடு கூடுதலாக வழங்கப்பட்ட அழைப்பு சங்கேதக்குறிக்கு எழுத்துக்களை சேர்க்கிறது. ஜப்பான் கலத்திற்கான ஒன்று JNQK அடையாளமான எடுத்துக் காட்டாகும்.

5.3 அன்றைய தினம் வரை புதுப்பிக்கப்பட்ட அழைப்பு சங்கேதக் குறி பட்டியலுக்கு பன்னாட்டு தொலைத்தொடர்பு மன்றம் தொடர்பு கொள்ளப்பட வேண்டும்.

# இணைப்பு 3

மீன்பிடிக்கருவிகள் அடையாளம் இட முன்மொழியப்படும் முறை

## இணைப்பினைத் தயாரித்தல்

மீன்பிடி கருவிகளுக்கு உரிமையாளரை அடையாளம் காண, அடையாளக் குறியிடுவதற்காக முன்மொழியப்படும் தரப்படுத்தப்பட்ட முறைக்காண விபரங்களை இந்த இணைப்பு கொண்டுள்ளது.

இப்பொருள் குறித்த பின்னணி ஆவணங்கள் உவே அமைப்பின் மீன்வளக்குழு அறிக்கை (உவே அறிக்கை எண் 387, 416, 459 மற்றும் 488), 1991 ஜூலை 14–19ல் விக்டோரியா, பிரிட்டிஷ் கொலம்பியா, கனடாவில் நடைபெற்ற மீன்பிடி வலைகளுக்கு அடையாளமிடுதலுக்கான வல்லுநர் கலந்தாய்வின் அறிக்கை (உவே அமைப்பின் மீன்வள அறிக்கை எண் 485), ஆழ்கடல்களில் மீன்பிடிக்கலன்களுக்கான பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு இணக்கத்தினை ஊக்குவிக்கும் ஒப்பந்தம், 1995 அக்டோபர் 31 ல் உவே அமைப்பின் கூட்டம் பின்பற்றிய பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு, இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்பு பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை குறித்த டிசம்பர் 10, 1982 கடல்சட்டம் செயல்படுத்தும் ஏற்பாடுகளுக்கான ஒப்பந்தம்

இணை 3

**உள்ளடக்கம்**


பக்கம்

அ. முன்னுரை ........ 53

ஆ. மீன்பிடி வலைகளுக்கு அடையாளம் இடுதலுக்கான முன்மொழியப்பட்டமுறை ..... 55

1. பொது ஏற்பாடுகள் ........ 55
2. மீன் பிடி வலைக்கு அடையாளம் இடும் முறை ........ 55
3. தரப்படுத்தப்பட்ட செய்முறையை செயல்படுத்துதல் ........ 56
4. இழந்த மற்றும் புறக்கணிக்கபட்ட வலைகளை மீட்டல் ........ 58
5. இழந்த அல்லது புறக்கணிக்கபட்ட மீன்பிடி வலைகளின் மீட்புப்பணி ........ 58
6. மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதனம் ........ 59

## அ. முன்னுரை

1. பல நூற்றாண்டுகளாக, வலையின் உரிமையாளரை அடையாளம் காண்பதற்காக, வலைகளுக்கு அடையாளமிடுதல் வழக்கத்தில் உள்ளபோதிலும், இதுவரை எவ்வாறு வலைகளை அடையாளமிடுவது, அடையாளம் எத்தகைய விபரங்களைக் கொண்டிருக்க வேண்டும், எவ்வாறு விபரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அல்லது திரும்பப்பெற வேண்டும் என்பதற்காக பொதுவான தரப்படுத்தப்பட்ட நிலைப்பாடுகள் ஏதும் இல்லை.

2. கடல் சார் வாரியத்தில் பொதுவான முறை இன்மையால், MARPOL 73/78[1]க்கான வளர்ச்சியில் மீன்பிடி வலைகளை சமாளிப்பது கடினமாகிறது. இப்பிரச்சினை குறித்து விண்ணப்பிக்க, மீன்பிடி வலைகளுக்கு அடையாளம் இடும் தொழில் நுட்பத்தில் வளர்ச்சிக்கான பரிந்துரை உலக கடலாண்மை நிறுவனத்தின் வழிகாட்டு முறைகளுடன், MARPOL ன் இணைப்பு 5 ஐ செயல்படுத்திட சேர்த்துக் கொள்ளப்பட்டது.

3. உரிமையை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, பன்னாட்டு வழிமுறைகள், விதிமுறைகள், பொதுவான வழக்கங்கள், தேசீய எல்லைக்கு வெளியே இடப்படும் வலைகளுக்கான குறியீடுகளுக்கு இல்லையென்பதை, உணவு மற்றும் வேளாண்மை அமைப்புக் குழு (COFI) ஏப்ரல் 1989ல் தனது 18வது அமர்வில் கருத்தில் கொண்டது. இது கடல்வள ஆதாரங்கள், மீன்பிடி வலைகளிலும் மற்றும் ஒதுக்கப்பட்ட வலைகளிலும் சிக்குவதை பாதுகாப்பது குறித்த பிரச்சினை என்பதை சில பிரதிநிதிகள் தெரிவித்தனர். மீன்பிடி வலைகளுக்கு அடையாளம் இடும் நியமங்களை விரிவாக்குவது கடலோர நாடுகளுக்கு நன்மையளிக்கக்கூடியது என்பதை உணர்ந்து, மேலும் ஆராய்ந்து தெரிந்து கொள்ள கவனம் செலுத்த பரிந்துரைத்தது.

4. பயன்படுத்தப்பட்ட முறை (முந்தைய மற்றும் தற்போதைய) அடையாளம் காண கிடைக்கும் தொழில் நுட்பம் குறித்து உவே அமைப்பு ஆராய்ந்தது. கனடா அரசின் ஒத்துழைப்புடன் 1991 ஜுலை 14–19 ல் மீன்பிடி வலைகளுக்கு அடையாளம் இடுதலுக்கான வல்லுநர் கலந்தாய்வு நடைபெற்றது. இவை தனிநபர்களாகவோ, நிறுவனங்களாகவோ, சமுதாயமாகவோ கூட இருக்கலாம் என்பதை கருத்தில் கொள்ளாது பொதுவாக நபர்களுக்கான எளிய பதிவேடு கொள்வதே வழக்கமாகும். ஆகையால் அடையாள வில்லை, பல வர்ணமுடைய முறுக்கு நூல், என உரிமை பெற்ற சீட்டுடன் கலனின் உபயோகத்தில் உள்ள ரேடியோ அழைப்பு சங்கேதக்குறி தொகுப்பு என முறைகள் விபரங்களில் வேறுபடுகிறது என அறியப்பட்டது.

5. மீன்பிடி வலைகளுக்கு அடையாளமிடுதலுக்கான வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை உவே அமைப்பின் மீன்வளக்குழுவிற்கு 1993 ல் சமர்ப்பிக்கப்பட்டது. அந்நேரத்தில் நியமிக்கப்பட்ட முறைக்கான பிரதானப்பகுதியை தீர்மானிக்கும் முன், மேலும் ஆராய்தலுக்கான தேவை கருத்தில் கொள்ளப்பட்டது.

6. இடம்பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்புக்கான[2] 1995 ஆகஸ்டில் பணியினை முடித்துக் கொண்ட ஐக்கிய நாடுகளின் கூட்டம் மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடிகலன்களுக்கு அடையாளம் காண குறியிடுதல், ஒரே சீராக மற்றும்

---

[1] *MARPOL 73/78 கப்பல்களிலிருந்து மாசுபடுதலைத் தவிர்த்தல், பன்னாட்டு சம்பிரதாயங்கள் 1973, அதன் மூலப்பத்திரம் 1978 ல் மாற்றப்பட்டவாறு, குறித்தான*

[2] *இடம்பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்பு பாதுகாத்தல் மற்றும் நிர்ணயம் குறித்தான டிசம்பர் 1982 கடல்சட்டத்தின் ஐக்கிய நாட்டு சம்பிரதாயங்களை செயல்படுத்துதல் ஒப்பந்தத்தை பின்பற்றுதலோடு 1995 ஆகஸ்டில் கூட்டம் பணியினை முடித்துக் கொண்டது.*

பன்னாடுகளிலும் அங்கீகரிக்கப்ப டும் வகையில் குறியிடும் முறைகள் மீன்பிடிகலன்களின் குறியிடுதல் மற்றும் அடையாளம் காணுதலுக்காக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு நியமம் செய்யப்பட்ட விபரங்கள் போன்றவை.

7. மீன்பிடிவலையின் உரிமையாளர் அடையாளம் காணப்படும் வகையில் தேசிய சட்ட அமைப்பிற்கு இணங்க மீன்பிடி வலைகளை அடையாளம் இடுவதற்கான ஏற்பாடுகளை பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு கொண்டுள்ளது. மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்தல், மீன்பிடிகலன்கள் குறித்த பதிவேடுகளை நிர்வகித்தல் பதிவேடுகள் கலன் விபரங்கள் அவற்றின் உரிமையாளர் மீன்பிடிப்பு அங்கீகாரம் ஆகியவற்றிற்கும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. இதுகுறித்து, இணக்க ஒப்பந்தத்தில்[3], நடத்தை விதித் தொகுப்பினை முழுமையாக்க தேவையான ஒன்றாக மீன்பிடிகலன்களின் உரிமையாளர்களின் விபரம் அடங்கிய, இருப்பு செய்தல் மீட்டுக் கொள்ளுதல் விபரங்களை பரப்புதல் குறித்த பதிவேடுகளை நிர்வகிக்க முக்கிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

8. 1993ல் COFI 20வது அமர்விலிருந்து இந்த முன்னேற்றங்கள் மீன்பிடி வலைகளுக்கு அடையாளமிட பொதுவான முறையைப் பின்பற்றுவதால் நேரக்கூடிய தெளிவான கூடுதல் நிர்வாக சுமைகள் குறித்து அப்போது குழுவின் உறுப்பினர்கள் கவலைதெரிவித்தமையால், உரியவர்களுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

9. மீன்பிடி வலைகளுக்கு அடையாளமிடுதல் மற்றும் முறையை செயல்படுத்த வழிகாட்டும் முறைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. முன் மொழியப்பட்ட முறையாக இவை கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

அ) மீன்பிடி வலைகளுக்கு அடையாளமிடுதலுக்கான வல்லுநர் கலந்தாய்வு அறிக்கையின் உள்ளடக்கம் (உவே அமைப்பின் அறிக்கை எண் 485)

ஆ) COFI ன் 20வது அமர்வுக்குப்பின் உவே அமைப்பு பெற்ற குறிப்புகள்

இ) ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில், இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம்பெயரும் மீன் இருப்புகள் பற்றிய பேச்சு வார்த்தை

ஈ) பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு விரிவாக்கப்படும் பொழுது நடைபெற்ற மீன்பிடி வலைகளுக்கு அடையாமிடுதல் மீதான விவாதம்

உ) இணக்க ஒப்பந்த செயல்பாட்டிற்கான அடிப்படை விபரங்கள் தயாரிப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் .

---

3 *ஆழ்கடலில் மீன்பிடிப்பு கலன்கள் பாதுகாத்தல் மற்றும் வேளாண்மை முறைகள், பன்னாட்டு சம்பிரதாயங்களுக்கு இணங்க ஊக்கமளிக்கும் ஒப்பந்தம்*

இணை 3

## ஆ. மீன்பிடி வலைகளுக்கு அடையாளம் இடுதலுக்கான முன்மொழியப்பட்ட முறை

### 1. பொது ஏற்பாடுகள்

1.1 கலனின் பாதுகாப்பு மற்றும் செலுத்துவோர் பாதுகாப்பு உள்ளிட்ட வலிமை அல்லது சூழ்நிலைகள் தவிர்த்து தேசீய சட்டத்தின் படி எந்த ஒரு நபரும் வேண்டுமென்றே ஏதேனும் வலையை அல்லது அதன் பகுதியை நீர்வாழ் சுற்றுப்புறச்சூழலில் தள்ளுவது அல்லது ஒதுக்குவது குற்றமாகும்.

1.2 வலையின் உரிமையாளர் அடையாளம் காணப்பெறும் வகையில் தேசீய சட்டத்திற்கு உட்பட்டு மீன்பிடி வலைகள் அடையாளம் இடப்பட வேண்டும். பன்னாடுகளிலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் வலை அடையாளம் இடப்படும். ஒரே ரீதியிலான முறையில் வலைக்கு அடையாளம் இடும் தேவையை கணக்கில் கொள்ள வேண்டும்.

1.3 எல்லா வகையான மீன் பிடி வலைகள், மற்றும் சாதனங்கள் அடையாளம் இடப்படுவதைப் போன்று மீன்வளம் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் அடையாளம் இடும் முறை பயன்படுத்தப்பட வேண்டும்.

1.4 முறை வழங்குபவை யாவன:

அ) மீன் பிடி வலையின் உரிமையாளரை அடையாளம் காட்ட, எளிதான செய்யக்கூடிய நிறைவேற்றப்படக் கூடிய முறை

ஆ) உலக அளவில் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறை

இ) மீன்வள மேலாண்மைக்கு உதவியான ஒப்பந்தம்

### 2. மீன் பிடி வலைக்கு அடையாளம் இடும் முறை

2.1 தேசீய சட்டத்தில் மீன்பிடி வலைக்கு அடையாளம் இடும் முறை ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்

2.2 மீன் பிடிப்பு அங்கீகாரத்திற்கு மீன் பிடி வலை அடையாளம் இடப்படுதல் ஒரு நிபந்தனையாக இருக்க வேண்டும். அத்தகைய வழியில் ஒவ்வொருவரின் மீன் வளம் குறித்த நிபந்தனை விபரம் மற்றும் எல்லையில் வேறுபட்டிருக்க வேண்டும். அங்கீகாரம் பொதுவாக கீழ்க்கண்ட விபரங்களுக் கான தேவையைப் பெற்றிருக்க வேண்டும்.

அ) மீன்பிடிக்க அங்கீகரிக்கப்பட்டவர் (களின்) பெயர், முகவரி, கலன்களின் பெயர் (பொருந்தும் இடத்தில்)

ஆ) வலைகளின் வகை

இ) உபயோகப்படுத்திட நினைக்கும் பகுதி

ஈ) முக்கிய இலக்கிட்ட மீன் வகைகள்

2.3 தனிப்பட்ட தேவைகளை பிரதிபலிக்கும் வண்ணம் அடையாளம் இடும் முறை வடிவமைக்கப்பட வேண்டும்.

அ) ஆழ்கடலில் மீன்பிடிக்கும் கலன்கள்

ஆ) கொடியிட்ட நாடுகள் தவிர்த்து இதர நாடுகளின் நீர்ப்பரப்பில் மீன்பிடிக்கும் கலன்கள்

இ) கடலோர நாடுகளின் கலன்கள் நாட்டின் எல்லைக்குள் உள்ள நீர்ப்பரப்பி ல் மீன் பிடித்தல்

இணை 3

ஈ) மீன் கலனுக்கு தொடர்பில்லாத மீன் பிடி வலைகள் மற்றும் சாதனங்களின் உரிமையாளர்கள்

2.4 இதன்பிறகு ''அடையாளம்'' அல்லது ''அடையாளங்கள்'' எனக் குறிக்கப்படும் பத்தி 2.2 ல் அமைக்கப்பட்ட விபரங்களை காண்பித்திட அல்லது எடுத்துச் செல்ல உபயோகப்படுத்தப்படும் உண்மையான முறை அல்லது சாதனம் கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்.

அ) எளிமையாக

ஆ) அதிக செலவின்றி

இ) பிராந்தியத்திலேயே கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு எளிதாக தயாரிக்கப்படுபவையாக

ஈ) எளிதில் படிக்கக்கூடிய அல்லது கண்டுபிடிக்கக்கூடியதாக

உ) பொருத்திய நிலையில் இருக்கக் கூடிய தாக

ஊ) நீண்ட காலம் தேயாது உழைக்கக் கூடிய தாக

எ) மீன்பிடிகலனின் மீன்பிடி நடவடிக்கை மற்றும் செய்கைகளில் குறிக்கிடாத வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். துண்டுச்சீட்டு குறித்த வகையில் அச்சிடப்பட்ட அல்லது பல்வேறு வகையில் புடைக்கப்பட்ட விபரங்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக இருக்க வேண்டும்.

2.5 குறி அடையாளம் மிகக் குறைந்த அளவிலேனும், உரிமையாளரின் பெயர், முகவரியை கண்டுபிடிக்கும் வகையில் போதிய விபரம் கொடுக்க அல்லது பெற்றிருக்க வேண்டும். உவே அமைப்பின் மீன்வள அறிக்கை 485 (இணைப்பு) துண்டுச் சீட்டு எனின் வகை உரிமையாளர்களை அடையாளம் காணும் முறை, ஆகியவற்றை விவரிக்கிறது. குறி அடையாளம் மற்றும் நிர்வகிக்கப்படும் மீன்பிடி அங்கீகார பதிவேடுகளுக்கும் இடையே விபரச் சங்கிலியாக இணைப்பு இருப்பதாக உணரப்படுகிறது.

2.6 இந்த முறை வழங்க வேண்டியவை ஆவன

அ) இழந்த, நிராகரிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் அறிவித்தல்

ஆ) கண்டெடுக்கப்பட்ட வலைகள் அறிவித்தல்

இ) புறக்கணிக்கப்பட்ட அல்லது இழந்த வலைகளை மீட்டல்[4]

ஈ) பழைய மற்றும் தேவையற்ற வலைகளைக் கழித்து ஒதுக்குதல்

## 3. தரப்படுத்தப்பட்ட செய்முறையை செயல்படுத்துதல்

3.1 வலைகளுக்கு குறி அடையாளமிடுதல் மீன் பிடிக்கும் அங்கீகாரத்திற்கு ஒரு நிபந்தனை ஆக வேண்டும்

3.2 நாடுகள் தனியாகவோ அல்லது மற்ற நாடுகளுடன் கூட்டாகவோ இரு நோக்குடன் மண்டலம் அல்லது சார் மண்டல மீன்வள சபைகள் மூலமாக தீர்மானிக்க வேண்டும்:

அ) பயன்படுத்த வேண்டிய முறை

ஆ) இலக்காக்கப்படும் மீன் வகைகள்

---

[4] *புறக்கணிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் மேலே உள்ள 1.1 பத்தியில் அமைந்தவாறு*

இ) அறிவிக்கும் முறைகள்

ஈ) விபரம் சேமித்தல் திரும்பப்பெறுதல் மற்றும் விபரங்கள் பரிமாற்றம்

உ) தவிர்த்தல்

**3.3** சொந்தமான அனைத்து மீன்பிடி வலைகள் சாதனங்கள் பயன்படுத்தப்படும் வரையில் உரிமையாளருக்கு குறி அடையாளம் அல்லது சங்கேதம் ஒதுக்கப்பட வேண்டும்.

**3.4** ஒன்றுக்கு மேற்பட்ட உபயோகிக்கும் குழுவினரால் அல்லது சுழல் முறையில் கலன்களால், பொதுவான சேர்க்கை அடிப்படையில் குறிஅடையாளம் இடப்படும் மீன்பிடி வலைகள் உபயோகப்படுத்தப்பட உள்ளன என்பதை நிரூபிக்கும் பட்சத்தில், உரிய அதிகாரமுடையவர் பொதுவான குறி அடையாள உபயோகத்தை, ஒருநிறுவனம், மீன்பிடிப்பு அமைப்பு போன்ற பொருளுக்கு அங்கீகரிக்கலாம். குறி அடையாளங்களால் அடையாளம் காண்பிக்கப்படும் உரிமையாளர்(கள்) இந்நிகழ்வுகளில் மீன்பிடி வலைகளின் இருப்பிடத்திற்கான தினசரி குறிப்புப் புத்தகம் வைத்திருக்க வேண்டும்.

**3.5** தாய்க்கப்பல் நடவடிக்கைகளில் மீன்பிடிப்புக் கப்பல்கள் கொண்டு செல்லும் மீன்பிடி வலைகள் தாய்க்கப்பலின் குறி அடையாளத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

**3.6** ஆழ்கடலில் மீன்பிடிக்கும் அனைத்துக் கலன்களும் பொதுவாக ஏற்கப்பட்ட முறை ஒன்றை மீன் பிடி வலைகளுக்கு அடையாளமிட உபயோகப்படுத்த வேண்டும். பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்ற ரேடியோ அழைப்பு சங்கேதக் குறி அடிப்படையில் மீன் பிடிக்கலன் குறி அடையாளம் இடப்படும் முறையை இந்த இணக்கமான ஒப்பந்தம் வழங்கும். இதனை மீன்பிடி வலைகளுக்கு அடையாளமிட அடிப்படையாக உபயோகிப்பதும் பொருத்தமாக இருக்கும். பன்னாட்டு தொலைத் தொடர்பு மன்ற ரேடியோ அழைப்பு சங்கேதக் குறி வழங்கப்படாத கலன்களுக்கு பன்னாட்டு தொலைத்தொடர்பு மன்றத்தால் வழங்கப்பட்ட அம்சங்கள் தொடர்ந்து இடைவெளிக்கோடு மற்றும் பொருத்தமானவாறு தொடர, நாடு ஒதுக்கிய உரிமம் எண், மீன்பிடி அங்கீகார எண் ஆகியவற்றை குறி அடையாளம், காண்பிக்க வேண்டும் அல்லது கொண்டிருக்க வேண்டும். அத்தகைய முறையை, தேவையான விபரங்களை பரிமாறிக்கொள்வது பயன்படுத்துவது ஆகியவற்றால் நன்மைகள் பெருகும்[5].

**3.7** கொடி நாடு தவிர்த்த இதர நாடுகளின் நீர்ப்பரப்பில் மீன் பிடிக்க அங்கீகாரம் பெற்ற கலன்களுக்கு சம்மந்தப்பட்ட கடலோர நாடுகள், அத்தகைய கலன்களுக்கு உரிய மீன்பிடி வலைகளுக்கு, ஆழ்கடலுக்காக விளக்கப்பட்டுள்ள மேலே கண்ட பத்தி **3.6**ல் உள்ள அடையாளமிடும் முறையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**3.8** மீன்பிடி வலைகளுக்கு அடையாளம் இடும் முறையை அமலாக்குதல் கட்டுப்படுத்துதல் நிர்வகித்தல், மேலாண்மை செய்தல், கடுமையான மேற்பார்வையின் ஒருங்கிணைந்த பகுதி என்பதை நாடுகள், மண்டலம், சார்மண்டல மீன் வள அமைப்புகள் உறுதி செய்தல் வேண்டும்.

**3.9** மீன்பிடி வலைகளில் இழப்பு கைவிடப்பட்ட நிகழ்வுகளில், உரிய அதிகாரமுடையவருக்கு இதனை அறிவித்தல் உரிமையாளருக்கு அவசியமானது.

**3.10** உரிமையாளர் இழந்த, புறக்கணிக்கப்பட்ட வலைகளை மீட்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

---

[5] *மீன்பிடி வலைகள் எடுத்துச் செல்லும் குறி அடையாளங்கள் மிகக் குறைவான அளவிலேயே கலனின் ப.தொ.ரே.அ. சங்கேதக் குறி மற்ற மாலுமிகள் கொடி நாடு இழந்த மற்றும் புறக்கணிக்கப்பட்ட வலைகள் பற்றி தெரிவிக்கும் கலன் ஆகியவற்றை அடையாளம் காண உதவும்.*

3.11 இழந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட வலைகள், கடல்பயணத்திற்கு ஆபத்து ஏற்படுத்தும் இடங்களில் மீன்பிடி வலை உரிமையாளர் உடனடியாக சுற்றுப்புறத்தில் உள்ள மாலுமிகளுக்கும் உரிய அதிகாரம் உடையவருக்கும் மீன் பிடி விபரங்களையும் அவற்றை இழந்த இடம் (நிலை) ஆகியவற்றையும் தெரிவித்து எச்சரிக்க வேண்டும்[6]. உரிய அதிகாரமுடையவர் உடனடியாக சம்பவ இடத்தில் உள்ள சக்தி வாய்ந்த முறைகளைப் பயன்படுத்தி மாலுமிகளுக்கு பொதுவான எச்சரிக்கை வழங்க வேண்டும்.

3.12 உரிய அதிகாரமுடையவர், மீன்பிடி வலைகளுக்கு சாதனங்களுக்கு, மீன்களை ஓரிடத்தில் திரளவைக்கும், சாதனங்களுக்கு குறி அடையாளமிடும் முறைக்கு இணங்காத உரிமையாளர்களுக்கு பொருத்தமான அபராதம் விதிக்க வேண்டும்.

அ) மீன்பிடி அங்கீகாரத்திற்கான நிபந்தனைபடி தேவையான அடையாளம் இடாது மீன்பிடி வலைகளை விடுதல்

ஆ) வேண்டுமென்றே அடையாளங்களை நீக்குதல்

இ) பிற உரிமையாளருக்கு, மீன்பிடி வலைகளுக்கு ஒதுக்கப்பட்ட அடையாளத்தை, உபயோகித்தல்

ஈ) மீன்பிடி வலைகளின் உபயோகம், இழப்பு, புறக்கணிப்பு, கழித்து ஒதுக்குதல் பற்றிய தவறான தகவல்கள் வழங்குதல்

## 4. இழந்த மற்றும் புறக்கணிக்கப்பட்ட வலைகளை மீட்டல்

4.1 மீன்பிடி வலை உரிமையாளர்கள் வலைகளை திரும்பப்பெற போதிய சாதனம் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்

4.2 உரிமையாளர் இழந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட வலைகளை திரும்பப் பெறுவதில் தோல்வியுறும் நிகழ்வுகளில், உரிய அதிகாரமுடையோர் அவற்றைத் திரும்ப பெறத் தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக மீன் பிடி வலைகள்,

அ) மேற்பரப்பு மற்றும் சார் மேற்பரப்பு கடல் பயணங்களுக்கு இடையூறு

ஆ) பாறைகளை மாசு படுத்தும்

இ) முட்டையிடும் பகுதிகளை மாசுபடுத்தும்

ஈ) மீன்பிடிப்புக்கு முட்டுக்கட்டையாகும்

உ) தொடர்ந்து நிழல் உருவம் எனில்

4.3 தகுதி வாய்ந்த அதிகாரமுடையவர் திரும்பப் பெற்ற மீன்பிடி வலைகளை மீண்டும் உபயோகப்படுத்துதலை ஊக்குவிக்க வேண்டும்.

## 5. இழந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட மீன்பிடி வலைகளின் மீட்புப்பணி

5.1 மீட்புப்பணி குறித்த தேசீயச் சட்டம், கண்டுபிடிக்கப்பட்ட, பொறுக்கி எடுக்கப்பட்ட மீன்பிடி வலை, குறி அடையாளம் உள்ள அல்லது இல்லாதது எனினும் உடனடியாக குறைந்த கால அவகாசத்தில், பாழானவற்றைக் கவனிக்கும் பொறுப்புடைய தகுதிவாய்ந்த அதிகாரமுடையவரிடம் வழங்குவதற்கு வழி வகுக்க வேண்டும்.

---

[6] *கலன் ஓட்டுபவர் அல்லது கலனின் பொறுப்பான நபர், உரிமையாளர்களிடமிருந்து வேறுபட்டால் உரிமையாளர் சார்பாக நடப்பவராக கருதப்படுவார். அனுப்பப்பட்ட அறிக்கை, முடிந்தவரையில் துறைமுகத்திற்கு திரும்பியவுடன், உரிமையாளரால் மேலொப்பம் இடப்படும்.*

5.2 தேசீய அல்லது அயல்நாட்டு உரிமையாளர்கள், வலை திரும்பப் பெற்றது பற்றி தெரிவிக்க வேண்டும். பொருத்தமான குறி அடையாளம் இருப்பின் வலைமீதான உரிமை பற்றி தெரிவித்து பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

5.3 தகுதி வாய்ந்த அங்கீகாரமுடையவர் உரிமையாளர்களுக்கு திருப்பித் தரும் வலையின் பகுதிகளுக்கு கட்டணம் வசூலித்து அதனை மீட்கப்படும் பணிக்கான செலவினத்திற்கு ஈடுசெய்து கொள்ளலாம்.

## 6. மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதனம்

6.1 மீன்பிடிப்பிற்கான அங்கீகாரம், மீன்களை ஓரிடத்தில் திரளவைக்கும் சாதனங்களை நிறுவிடுதல் குறித்த நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதன உரிமையாளரை அடையாளம் காட்டும் விதத்தில், குறி அடையாளம், கொண்டு செல்வதில், அங்கீகாரம் கீழ்க்கண்டவற்றை தொடர்பு படுத்த வேண்டும்.

அ) மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதன வகை

ஆ) ஒதுக்கப்பட்ட இடத்தின் பூகோளவியல் நிலை விபரங்கள்

இ) மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதனத்தில் அனுமதிக்கப்பட்ட மீன்பிடிப்பு நடவடிக்கைகள்

6.2 மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதனம் மிதந்து சென்றால் மீட்கும் பொறுப்பு உரிமையாளருடையதே.

6.3 (மிதந்து செல்லும் அல்லது நிலைநிறுத்தப்பட்ட) மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதன இழப்பு இழந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட மீன் பிடி வலைகளைப் போன்றே நடத்தப்படும்.

6.4 மீன்களை ஓரிடத்தில் திரள வைக்கும் சாதன இழப்பு அல்லது புறக்கணிப்பு நிகழ்வுகளில், கடற்பயணத்திற்கு இடையூறு எனக் கருதப்படின் தகுதி வாய்ந்த அதிகாரமுடையவர் மேற்கண்ட 5.2 பத்திக்கு இணங்கி உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

## இணைப்பு 4

### மீன்பிடிக்கருவிகளின் அடையாளம் அமைவிடம் காண்பதற்காகப் பயன்படுத்தப்படும் விளக்குகள் வடிவமைப்புகளுக்காக நிலைப்படுத்தப்பட்ட அமைப்புகளுக்கான கருத்துருக்கள்

### இணைப்பினைத் தயாரித்தல்

அமைக்கப்பட்ட மீன்பிடிக்கருவிகளின் வகை அவை இடப்பட்ட இடம் மற்றும் எந்த இடத்தில் அல்லது திசையில் மீன்பிடிக்கருவி இல்லை என்பது குறித்து முன்மொழியப்படும் வரையறை செய்யப்பட்ட அமைப்பிற்கான விபரங்களை இந்த இணைப்பு கொண்டுள்ளது.

இப்பொருள் குறித்தான பின்னணி ஆவணங்கள் ஆவன, ஏப்ரல் 1989, ரோமில் நடந்த உவே அமைப்பின் மீன் வளக் குழுவின் 18 வது அமர்வு அறிக்கை (உவே அமைப்பின் மீன்வள அறிக்கை எண் 416. 14–19 ஜூலை 1991) விக்டோரியா பிரிட்டீஷ் கொலம்பியா கனடா மீன் பிடிக் கருவிகளின் குறி அடையாளம் மீதான வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை உலக கடலாண்மை நிறுவன பாதுகாப்புக் குழுவின் பொருத்தமான அறிக்கை மற்றும் கடலில் மோதலைத் தடுக்கும் அனைத்துலக விதிமுறைகளும்.

**உள்ளடக்கம்**

பக்கம்

அ. முன்னுரை ........ 62

ஆ. மீன்பிடிக்கருவிகள் மீன்பிடி சாதனங்களுக்கான விளக்குகள் மற்றும் வடிவமைப்புகளுக்காக வரையறுக்கப்பட்ட முறை ........ 63

1. பொதுவான ஏற்பாடுகள் ........ 63

2. தொழில்நுட்ப ஏற்பாடுகள் ........ 63

3. வரையறை செய்யப்பட்டமுறையைப் பயன்படுத்துதல் ........ 64

4. தொழில் நுட்ப விபரங்கள் ........ 65

இணை 4

## அ. முன்னுரை

1. மீன்பிடிக்கருவிகளுக்கான குறி அடையாளமிடுவது குறித்தான, உவே அமைப்பின் மீன்வளக்குழுவின் 18 வது அமர்வில், விவாதங்களில், பெரும்பான்மையான பிரதிநிதிகள், மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்கள் பயன்படுத்தும் மீன்பிடிக் கருவிகளை அடையாளம் காண்பிக்கும் விளக்குகள் வடிவடிமைப்புகள் மற்றும் பலவகையான மீன்பிடிக் கருவிகள் பற்றியும் ஆய்வு செய்யும் தேவையை ஏற்றுக் கொண்டனர். இதனை உலக கடலாண்மை நிறுவனத்திற்கு கொண்டு வர குழு உவே அமைப்பின் தலைவரிடம் கேட்டுக் கொண்டது. ஏதேனும் மாற்றம் உணரப்படின் கவனமான பரிவு வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டது.

2. உலக கடலாண்மை நிறுவனத்தின் கவனத்திற்கு இப்பொருள் கொண்டு வரப்பட்டது. அதன் கடற்பயணத்திற்கான உபக்குழுவின் பார்வைக்குப்பின், அதன் உறுப்பினர்கள், மோதல்கள் குறித்தான விதிகளில் விதி 26 ஐ மாற்றியமைக்கும் தேவை குறித்து கருத்துரு மற்றும் குறிப்புரை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டனர். அது காணாமல் போன புறக்கணிக்கப்பட்ட மற்றும் கவனிக்கப்படாத மீன்பிடிக்கருவிகளுக்கு உரிமையாளரை அடையாளம் காணும் விதத்தில் குறி அடையாளம் இட வல்லுநர் கலந்தாய்வு ஏற்பாடு செய்ய உவே அமைப்பு கருதியதையும் கருத்தில் கொண்டது. இப்பிரச்சினை, கடல் பாலூட்டிகளுக்கும் மற்றும் பறவைகளுக்கும், கடற்பயண பாதுகாப்பிற்கும், இடையூறு ஏற்படுத்தும் என்பதால் உவே அமைப்பின் கலந்தாய்வு எந்த பரிந்துரையையும் பரிவுடன் பரிசீலிக்க உபக்குழு முடிவு செய்தது.

3. 14–19 ஜூலை 1991 ல் விக்டோரியா பிரிட்டிஷ் கொலம்பியா கனடாவில் மீன்பிடிக்கருவிகளுக்கு அடையாளம் இடும் வல்லுநர் கலந்தாய்வில் உலக கடல் மேலாண்மை அமைப்பும் கலந்து கொண்டது. மீன் பிடிப்போர் மற்றும் கருவிகளைப் பாதுகாக்கவும் விடப்பட்ட மீன்பிடிக் கருவிகள் இருப்பதை மாலுமிகளுக்கு அறிவிக்கவும் தரப்படுத்தப்பட்ட விளக்கு மற்றும் வடிவமைப்பு முறை உபயோகப்படும் என்பதனை கலந்தாய்வு ஏற்றுக் கொண்டது. அத்தகைய முறையின் தொழில் நுட்ப விபரங்கள் மாலுமிகளுக்கு அவசியம் தெரிவிக்கப்பட வேண்டும். அதனால் அனைவரும் கடலில் எதிர்ப்படும் அடையாளங்கள், விளக்குகள், ராடார் பிரதிபலிப்பான்கள் மற்றும் வடிவமைப்புகள் பற்றியும் அறிந்து புரிந்து கொள்வார்கள் என்பதையும் ஏற்றுக் கொண்டது. மீன் பிடிப்போர் மற்றும் மாலுமிகளுக்கான பயிற்சித் திட்டங்களில் அத்தகைய விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. உலக கடலாண்மை நிறுவனம், மீன் பிடிக்கருவிகளுக்கு அடையாளம் இடுவதற்கான வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை, COLREGS மாற்றி அமைப்பதற்கான பரிந்துரைகளை ஆய்வு செய்தது. 1972 மோதல் விதிகளின் இணைப்பு 2 ன் பிரிவு 2 ல் வழங்கப்பட்ட விளக்குகள் தேர்ந்தெடுக்கும் உரிமை 20 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளமுடைய கலன்களுக்கு ஆழப்பகுதி மற்றும் இதர பரப்பிற்கான மீன்பிடிக்கருவிகளைப் பயன்படுத்தி அல்லது இரட்டை மடியின் போது, இழுவையில் ஈடுபடும் கலன்களுக்கு கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பதை உவே அமைப்புடன் இணைந்து ஏற்றுக் கொண்டது (மோதல் விதிகளின் இணைப்பு 2ன் பிரிவு 3 ல் விவரித்தவாறு). பர்சீன் உபயோகிப்பாளர் மஞ்சள் நிற விளக்குகளை ஒளிரச் செய்வதற்கான கருத்துருவை உலக கடலாண்மை நிறுவனம் ஏற்றுக் கொள்ள வில்லை. மீன்பிடிப்பில் ஈடுபடும் கலன்களில், அத்தகைய மீன்பிடிப்பு நடவடிக்கைகள் கலனின் போக்கு மற்றும் வேகம் அல்லது இரண்டிலும் விரிவான மாற்றங்களைக் கொண்டிருக்கும். தொடர்பான கலன் மீன்பிடிக்கருவிகளால்

தடைபடுத்தப்படும். எனினும் கடலில் மீன்பிடிக்கருவிகளுக்கு கடலில் நிலை அறிய அடையாளம் இடப்படுவது COLREGS ல் சேர்த்துக் கொள்ளத் தேவையற்றது என்பதையும் ஏற்றுக் கொண்டது.

5. மீன்பிடிக்கருவிகளுக்கு அடையாளம் இடுதலுக்கான வல்லுநர் கலந்தாய்வு அறிக்கை (உவே அமைப்பின் அறிக்கை எண் 485 மற்றும் அதன் இணைப்பு). உலக கடலாண்மை நிறுவன விவாதங்களின் வெளிப்பாடு அடிப்படையிலும் இந்த இணைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஆ. மீன்பிடிக்கருவிகள், மீன்பிடி சாதனங்களுக்கான விளக்குகள் மற்றும் வடிவடிவமைப்புகளுக்காக வரையறை செய்யப்பட்ட முறை.

### 1. பொதுவான ஏற்பாடுகள்

1.1 மீன்பிடிப்போர் மற்றும் அவர்களின் மீன்பிடிக்கருவிகளைப் பாதுகாக்கவும், மீன் பிடிக்கருவிகள் இடப்பட்டுள்ளதை மாலுமிகளுக்குத் தெரிவித்து எச்சரிக்கை செய்யவும் தேசீய சட்டத்தில் மீன்பிடிக்கருவிகளை அடையாளம் காணவும் நீர்ப்பரப்பில் அவற்றின் நிலையினை அடையாளம் இடவும் வரைமுறை செய்யப்பட்ட முறையை பயன்படுத்த நாடுகள் நிபந்தனைகள் ஏற்படுத்த வேண்டும்.

1.2 அம்முறையின் விபரங்களை உள்ளடக்கும் மீனவர்கள் மற்றும் பிற மாலுமிகளுக்கு பயிற்சி திட்டங்களை நாடுகள் வகுக்க வேண்டும்.

1.3 மீன்பிடிகருவிகள், மீன்பிடிச் சாதனங்கள் மற்றும் மீன்பிடிகலன்களுக்கான விளக்கு மற்றும் வடிவமைப்பு முறையினை ஏற்றுக் கொள்வது, மீன்பிடி அங்கீகாரத்திற்கான நிபந்தனை ஆகும்.

### 2. தொழில் நுட்ப ஏற்பாடுகள்

2.1 முறை கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை ஆவன:

அ) கடலில் மோதலைத் தவிர்க்கும் பன்னாட்டு விதிமுறைகளின் நிபந்தனைகள்

ஆ) உள்ளூர் விதிகள், ஆறு, கடல், ஏரி குறித்த கடல் பயண விதிகள், கடலோர மீன்வளம் குறித்த விபரங்கள்

இ) கரையிலிருந்து விலகியுள்ள அமைப்புகள் சார்ந்த கட்டுப்பாடுகள்

ஈ) உரிமையாளரை அடையாளம் காண்பதற்காக மீன்பிடிக்கருவிகளுக்கு அடையாளம் இடும் முறை

2.2 எங்கு இயலுமோ அங்கு நிலைகாட்டும் குறியிடும் விளக்குகள் அனைத்தும், மீன்பிடிக் கருவிகளுக்கு பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

அ) கடல் மட்டத்தில் குறைந்தது 2 கடல் மைல் தூரத்திலிருந்து பகற்பொழுது தெளிந்த சூழ்நிலையில் இயன்றவரை தெளிவாகக் காணும் வகையில் இருக்க வேண்டும்.

ஆ) ராடார் பிரதிபலிப்பான்களைக் கொண்டிருக்க வேண்டும்

இ) கடற்பயண அடையாளக் குறிகளோடு முரண்பாடு இல்லாத இயல்புடைய விளக்குகள், தெளிவான இரவில் 2 கடல்மைல் தூரத்தில் இருந்து காணும் வகையில் இருக்க வேண்டும்.

ஈ) பகற்பொழுதில் காண்பதற்கு உதவியாக ஒளிரும் பொருட்களால் ஆன வர்ணமிட்ட கொடி அல்லது கொடிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

**2.3** இடப்பட்ட மற்றும் மிதக்கும் மீன் பிடிக்கருவிகளின் திசை மற்றும் பரப்பு ஆகியவற்றையும் விளக்கு மற்றும் வடிவமைப்புகள் குறிப்பிட வேண்டும்.

**2.4** தொடர்ந்து தானே இயங்கும் தெரிவிப்பு எச்சரிக்கை குறிகளால் (சமிக்ஞை) ரேடியோ வழிகாட்டி போன்ற மின்னணு பொருட்களையும் விளக்கு மற்றும் வடிவமைப்புகளுடன் கூடுதலாக பயன்படுத்தலாம். எனினும் அத்தகையவை கடற்பயண தேடுதல் மற்றும் காப்பாற்றுதலுக்கு ஆன சாதனங்களுக்கு முரண்படும் வகையில் இயக்கப்படுதல் கூடாது.

## 3. வரையறை செய்யப்பட்ட முறையைப் பயன்படுத்துதல்

**3.1** பாண்டம், வலைப்பை, கட்டப்பட்ட வலைகள் அதனைப் போன்ற பிற கருவிகள் தனியான மிதவையுடன் அல்லது இதர சாதனம் ஆகியவற்றால் நிலையைத் தெரிவிக்கும் வகையில் மேற்பரப்பில் அடையாளம் இடப்பட வேண்டும். ஒரே கோட்டில் இணைக்கப்படும் பாண்டங்களின் எண்ணிக்கை போன்று, மீன்பிடிகருவிகள் வரிசையாக அமைக்கப்படும் நிலையில், ஒவ்வொரு நுனியில் மிதவையால் அடையாளம் இடப்பட வேண்டும்.

**3.2** நிலைநிறுத்தப்பட்ட அல்லது மிதக்கும் மீன்பிடிக் கருவியின் தொடர்ந்த மேற்பகுதி ஓரம் நீரின் மேற்பரப்பிலிருந்து 2 மீ. ஆழத்திற்கு மேல் இருக்கும் எனில் கீழ்க்கண்டவாறு அடையாளம் இடப்பட வேண்டும்.

அ) நங்கூரத்திலிருந்து தாய்க்கப்பல் வரை நீட்டப்பட்டு கடல்மட்டத்திற்கு கீழ் அமைக்கப்படும் மீன்பிடிக் கருவிகளின் இரு நுனிகளும், மற்றும் இடைப்பட்ட நிலையும் பாய்மரதூண் போன்ற மிதவைகளால் அடையாளம் இடப்பட வேண்டும். இடைப்பட்ட அடையாளங்களுக்கிடையே உள்ள தூரம், நுனிக்கு மிகவும் அருகில் உள்ள இடைப்பட்ட அடையாளங்கள், மற்றும் எல்லை அடையாளங்களுக்கு இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டருக்கு மிகாது இருக்க வேண்டும். கலனோடு பொருத்தப்பட்ட மீன்பிடிக்கருவிகளில், கலனுக்கு அருகில் உள்ள எல்லை அடையாளம் பெற்றிருக்கத் தேவையில்லை.

ஆ) பகல் நேரத்தில் அடையாளம் காண, கடலில் படுக்கை வசத்தில் உள்ள அக்கருவியின் மேற்கு எல்லையில் உள்ள மிதவையில் ஒன்றின்மேல் ஒன்றாக இரு கொடிகள் அல்லது ஒரு கொடி ராடார் பிரதி பலிப்புடன் பொருத்தப்பட வேண்டும். கிழக்கு எல்லைப் பகுதியில் ஒரு கொடி அல்லது ஒரு ராடார் பிரதிபலிப்புடன் பொருத்தப்பட வேண்டும்.

இ) இரவு நேரத்தில் அடையாளம் காண மேற்கு எல்லையின் இரு வெள்ளை விளக்குகள் ஒன்றின் மேல் ஒன்றாக மற்றும் கிழக்கு எல்லையில் ஒரு வெள்ளை விளக்கு பொருத்தப்பட வேண்டும்.

**3.3** நீர்ப்பகுதியில் மேற் பரப்பில் இருந்து 2மீ ஆழத்திற்குள் மீன்பிடிக்கருவிகள் அமைக்கப்படும் எனில் அதனால், குறுக்கே செல்லும் சில கலன்களுக்கு இடையூறு என்பதால் அவை கீழ்க்கண்டவாறு அடையாளம் இடப்பட வேண்டும்.

அ) பகல் நேரத்தில் அடையாளம் காண, கருவியின் எல்லைகளில் (பாய்மரத்தூண் போன்றது) மிதவை உச்சியில் ஒரு மீட்டருக்கு குறையாத இடைவெளியில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக இரண்டு பந்து வடிவமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டும். மேல் பந்து கீழே இருப்பதைவிட அதன் விட்டத்தில் பாதியாக –சிறியதாக இருக்கும்.

ஆ) இரவு நேரத்தில் அடையாளம் காண, கருவியின் எல்லைகளில் மிதவை உச்சியில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஒரு மீட்டருக்கு குறையாத இடைவெளியில் இரண்டு மஞ்சள் விளக்குகள் பொருத்தப்பட வேண்டும். இடைப்பட்ட மிதவைகளில் வேறு நிற விளக்குகள் பொருத்தப்பட வேண்டும்.

இ) கருவிகள் ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு மேல் விரியும் எனில், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்படாத இடைவெளியில் ஒன்றாக இடைப்பட்ட மிதவைகள் பொருத்தப்பட வேண்டும். இடைப்பட்ட மிதவைகள் பகல் நேரத்தில் அடையாளம் காணப்பட ஒரு பந்து வடிவமைப்பையும், இரவு நேரத்தில் ஒரு மஞ்சள் விளக்கையும் கொண்டிருக்க வேண்டும்.

ஈ) மேற்பரப்பில் கலன் செல்ல "வழி" அமைக்கப்பட வேண்டும். வழியின் ஒவ்வொரு புறமும் மிதவையால் (பாய்மரத்தூண் போன்றது) அடையாளம் இடப்பட்டிருக்க வேண்டும். இடைப்பட்ட மிதவை, இவற்றிலிருந்து 10 மீட்டருக்கு குறையாது இருக்க வேண்டும்.

உ) கருவியில் கலனுடன் இணைக்கப்பட்டுள்ள எல்லையில் அடையாளம் இடப்படும் தேவையில்லை.

**3.4** நிலையான பெரிய மீன்பிடி வலைகள் மற்றும் பறந்து இழுக்கும் மற்றும் பர்சீன் போன்ற வேகமான மீன்பிடி கருவிகளில் உபயோகப்படுத்தப்படும் மிதவைகள் (dhan) பத்தி 2.2 ல் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

**3.5** மீன்களை ஓரிடத்தில் திரளவைக்கும் சாதனங்களும் மீன்பிடிக்கருவிகள் போன்று இவ்வாறே அடையாளம் இடப்பட வேண்டும். இரவு மற்றும் பகல் நேரத்தில் அவற்றின் நிலையினை அடையாளம் காணும் விதத்தில் முறைகளை கொண்டிருக்க வேண்டும். மிக குறைந்த தேவையாக பத்தி 2.2 ல் அமைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டும். பத்தி 2.4 ல் குறிப்பிடப்பட்டவை மீன்களை ஒன்றுதிரட்டும் சாதனத்தின் பொருத்தப்பட்ட மின்னணு சாதனங்களில் உபயோகப்படுத்த வேண்டும்.

## 4. தொழில் நுட்ப விபரங்கள்

**4.1** மிதவை (பாய்மரத்தூண்கள் போன்றது) கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

அ) மிதப்பிற்கு மேல் நீண்டிருக்கும் மிதவையின் தூண் 2 மீ உயரம் கொண்டிருக்க வேண்டும். அடையாளம் இடப்பட்ட மீன்பிடிக்கருவியினால் கடற்பயணத்திற்கு இடையூறு இல்லை என்பதில் நிர்வாகம் திருப்தி கொண்டால், 2 மீட்டருக்கு குறைந்திருக்கலாம்.

ஆ) ராடார் பிரதிபலிப்பான்கள் தேவையெனில் அவை தூணின் மேற்பகுதியில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

இ) கொடியின் நீளம் 25 செ மீ. அகலம் 35 செ மீ[1]. குறையாது இருக்க வேண்டும். இரண்டு கொடிகள் தேவையெனில் இவற்றின் இடைவெளி 10 சென்டி மீட்டருக்கு குறையாது இருக்க வேண்டும். கொடிகள் தண்ணீர் புக முடியாத ஒளிரும் வர்ணங்களைக் கொண்ட பொருட்களினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

---

[1] *கொடிகள் மிகவும் பெரிதாக இருக்கக் கூடாது. ஏனெனில் பலத்த காற்றில் முடிந்தவரை மிதவை நேராக நிற்பதைப் பாதிக்கும்.*

இணை 4

ஈ) கொடிகளால் மறைக்கப்படாத வகையில் விளக்குகள் தூணில் பொருத்தப்பட வேண்டும்.

உ) தொலைவிலிருந்து பார்க்கும் பொழுது பந்தின் தோற்றம் உள்ள வடிவமைப்புகள் மேலே பத்தி **3.3** இ, பந்தின் கீழ் பகுதி வடிவமைப்பு ஒன்று பொருத்தப்பட்டால், விட்டம் **30** செமீ குறையாது இருக்க வேண்டும். மேற்பகுதியில் உள்ளது கீழே உள்ளதை விட சிறியதாக, அதன் விட்டத்தில் பாதியளவு கொண்டதாக இருக்க வேண்டும். இரு வடிவமைப்புகள் தேவைப்படின் இரண்டிற்குமான இடைவெளி குறைந்தது **10** செமீ. ஆக இருக்க வேண்டும்.

ஊ) இடைப்பட்ட மிதவைகள் குறைந்தது **50** செமீ. விட்டம் கொண்டிருக்க வேண்டும்[2].

**4.2** ராடார் பிரதிபலிப்பான்கள் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்,

அ) இயன்றவரை எடை குறைந்ததாக

ஆ) எண்கோள் வடிவமைப்புகளாக

இ) உலோகப்பட்டை அல்லது கம்பி வலை கட்டுமானங்களுடன்

**4.3** குறைந்தது **2** கடல் மைல் தொலைவிலிருந்து காணும்படியாக விளக்குகள் அமைய வேண்டும். குறிப்பாக தானாகவே மாலையில் ஏற்றப்பட்டு காலையில் அணையும் விதத்தில் உணர்த்திகள் பொருத்தப்பட்ட வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும்[3].

**4.4** மிதவை அல்லது மீன்களை ஒன்று திரள வைக்கும் சாதனத்திற்கான ரேடியோ வழிகாட்டு வகைகளே மிதக்கும் வகையெனில் மிதவையுடன் (பாய்மரத்தூண் போன்றது) இணைக்கப்பட வேண்டும்.

---

[2] *தகுதி வாய்ந்த அதிகாரமுடையவர் உள்ளூரில் கிடைக்கும் பொருட்களை, மிதவைகள் செய்வதற்காக கணக்கில் கொள்ள வேண்டும். பல மீன் பிடிப்போர் பந்து வடிவ அமைப்புகளை, உலகின் சில பகுதிகளில், தொலைவிலிருந்து காணும் வகையில் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மரத்துண்டுகளை இணைத்து அமைப்பர்.*


[3] *கிடைக்கும் விளக்குகள் பாய்மரத்தூண் போன்ற மிதவைகளில் பொருத்தப்படக் கூடியதா என்பதை அறிய இயலாது. எனவே தகுந்த அதிகாரமுடையோர் உள்ளூரில் பழக்கத்தில் உள்ளதை கணக்கில் கொள்ள வேண்டும்.*

## அனுபந்தம் 1

### விளக்குகள் வடிவமைப்புகள் மற்றும் ஒளி சம்மந்தமான சாதனங்கள்

நீர்ப்பரப்பில் **2**மீ ஆழத்திற்குள் நகரும் மற்றும் அமைக்கப்பட்ட மீன்பிடிக்கருவிகளுக்கான கொடிகள்

பார்வை பத்தி **3.2** ஆ




**பாய்மரத்தூண் போன்ற மிதவை**

நீர்ப்பரப்பிலிருந்து **2** மீ ஆழத்திற்குள் நகரும் வலைகள் அமைக்கப்படும் பொழுது மீன்பிடிக்கருவிகளுக்கான பந்து வடிவ அமைப்புகள்

பார்வை பத்தி **3.3** அ மற்றும் இ


எல்லை மிதவை இடைப்பட்ட மிதவை




**பாய்மரத்தூண் போன்ற மிதவை**

இணை 4


பர்சீன் நிலையான பெரிய மீன்பிடி
வலைகள் மற்றும் பறந்து இழுக்கும்
வலைகள் போன்ற வேகமான மீன்
பிடிக்கருவிகளில் பயன்படுத்தப்படும் மிதவை.



**மிதவை**




மிதப்பது



(
பாய்மரத் தூண் போன்ற)
மிதவையில் பொருத்தப்பட்ட
நிலை


**ரேடியோ வழிகாட்டி**

(பாய்மரத்தூண் போன்ற மிதவையின்) கிழக்குப்பகுதியில் மீன்பிடிக் கருவிகள் உள்ளதை தெரிவித்தல்





**நீர்ப்பரப்பின் மேல் இருந்து 2மீ ஆழத்தில் இடப்பட்ட மீன் பிடிக்கருவிகள்**

(பாய்மரத்தூண் போன்ற மிதவையின்) மேற்குப்பகுதியில் மீன்பிடிக் கருவிகள் உள்ளதை தெரிவித்தல்





**நீர்ப்பரப்பின் மேல் இருந்து 2மீ ஆழத்தில் இடப்பட்ட மீன் பிடிக்கருவிகள்**

இணை 4





**நீர்ப்பரப்பிலிருந்து 2 மீ ஆழத்தில் இடப்பட்ட மீன்பிடிக்கருவிகள் அமைக்கப்பட்ட நுழைவு**




**நீர்ப்பரப்பிலிருந்து 2 மீ ஆழத்தில் இடப்பட்ட மீன்பிடிக்கருவிகள் அமைக்கப்பட்ட நுழைவு**

இணை 4

அலுமினியப் பட்டை அல்லது
கம்பி வலை பொருத்தமானது.
சிறந்த இலக்கு அமைக்க
பிரதிபலிப்பு தகுதியான
அளவுடையதாக
இருக்க வேண்டும். மிகவும்
பெரிதாக இருப்பின் மிதவை அதிகம்
சாய்ந்த நிலைக்கு சென்று விடும்




**ராடார் பிரதிபலிப்பான்கள்**

# இணைப்பு 5

## கரைக்குத் தொலைவில் பன்னாட்டு கடல் படுகை மற்றும் தனிப் பொருளாதார மண்டலத்தில் நிறுவப்பட்டவை மற்றும் அமைப்புகளை நீக்குதல் தொடர்பான வழிகாட்டு முறைகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்டவை.

### இணைப்பினைத் தயாரித்தல்

அக்டோபர் 19, 1989 ல் உலக கடலாண்மை நிறுவனம் பின்பற்றிய கரைக்குத் தொலைவில் உள்ள அமைப்புகளை முழுதுமாக அல்லது பகுதியாக நீக்குதலுக்கான வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறை செய்யப்பட்டவைகளை இந்த இணைப்பு கொண்டுள்ளது.

உலக கடலாண்மை நிறுவன சபையின் அ 672 (16) முடிவுகள் மற்றும் இணைப்புகள் இப்பத்திரத்திற்கு அடிப்படை ஆகும்.

**உள்ளடக்கம்**

பக்கம்

**அ. முன்னுரை** ........ 74

**ஆ. தீர்மானங்கள் அ 672 (16)** ........ 75

**இ. கரைக்குத் தொலைவில் பன்னாட்டு கடல் படுகை மற்றும் தனிபொருளாதார மண்டலத்தில் நிறுவப்பட்டவை மற்றும் அமைப்புகளை நீக்குதல் தொடர்பான வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறை செய்யப்பட்டவை.** ........ 76

1. பொதுவான நீக்குதல் தேவைகள் ........ 76

2. வழிகாட்டு முறைகள் ........ 76

3. வரைமுறைகள் ........ 77

இணை 5

## அ. முன்னுரை

உலக கடலாண்மை நிறுவனத்தில் வாதமிடும்பொழுது, மீன் தொழில் சார்ந்த பிரதிநிதிகள், கரைக்குத் தொலைவில் நிறுவப்பட்டவை மற்றும் அமைப்புகளை நீக்குதல் தொடர்பான முடிவுகளை மேற் கொள்ளும் நிலையில், தங்களது உரிமைகளுக்கு போதிய கவனம் இல்லாததை குறித்து கவலை தெரிவித்தனர். நீக்குதல் திட்டங்களில் குழாய்களும் சேர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தனர். சேர்ந்த குப்பைக் கழிவுகளும் நீக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தனர். உலக கடலாண்மை நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறை செய்யப்பட்டவை எந்த தனிப்பட்ட கடல் உபயோகிப்பாளரின் உரிமையையும் வலியுறுத்தவில்லை.

பன்னாட்டு கடல் படகு மற்றும் கடல் தளம் ஆகியவற்றை, ஆராய்ச்சி பயன்பாடு ஆகியவற்றால் ஏற்படும் தூய்மைக்கேடுகளிலிருந்து, மெடிட்டரேனியன் கடல் பகுதியைப் பாதுகாப்பதற்கான மூலப்பத்திரம், புறக்கணிக்கப்பட்ட அல்லது உபயோகத்தில் இல்லாத நிறுவப்பட்டவைகளை அகற்றுவதற்கு, தகுதி வாய்ந்த பன்னாட்டு நிறுவனங்கள் பின்பற்றும் வழிகாட்டு முறைகள், வரைமுறை செய்யப்பட்டவைகளைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்பான கடல் பயணத்தை உறுதிப்படுத்திட, இயக்குபவர் தேவைப்படுகிறது. அத்தகைய அகற்றுதல், மற்ற சட்ட பூர்வமான கடல் உபயோகத்தையும் குறிப்பாக மீன்பிடிப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு, புறக்கணிக்கப்பட்ட பொருட்கள், அமைப்புகளை அகற்றுவதற்கான முடிவு எடுப்பதற்கு முன்பு, மீன்வளப்பிரிவு ஆலோசிக்கப்பட வேண்டும் என்பதை அங்கீகரிப்பது.

மீன்வளப்பிரிவின் தகவலுக்காக பத்திரம், உலக கடலாண்மை அமைப்பின் பன்னாட்டு கடல்படுகை மற்றும் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில், கரையின் தொலைவில் நிறுவப்பட்டவை, அமைப்புகளை அகற்றுதலுக்கான வழிகாட்டுமுறைகள் மற்றும் வரைமுறை செய்யப்பட்டவை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## ஆ. தீர்மானங்கள் அ 672(16)

1989 அக்டோபர் 19 ல்பின்பற்றப்பட்டது
நிகழ்ச்சி நிரல் எண் 10

**பன்னாட்டு கடல் படுகை மற்றும் தனிபொருளாதார மண்டல கடல்பகுதியில் கரையிலிருந்து தொலைவில் உள்ள நிறுவப்பட்டவை அமைப்புகளை நீக்குவதற்கான வழிகாட்டு முறைகள் மற்றும் வரையறை செய்யப்பட்டவை.**

கூட்டம்,

உலக கடலாண்மை நிறுவனம் கட்டுரை 15 (ஜே) சம்பிரதாயப்படி, கடல்சார் பாதுகாப்பு, கடல்சார் தூய்மைக் கேட்டினைத் தடுத்து பாதுகாத்தல் குறித்த விதிமுறைகள் மற்றும் வழிகாட்டு முறைகளுக்கான கூட்டத்தின் பணிகள்.

1982 கடல்சட்டத்தில் ஐக்கிய நாடுகளின் சம்பிரதாயங்கள், கடற்பயண பாதுகாப்பிற்காக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தகுதி வாய்ந்த பன்னாட்டு அமைப்புகளில் நிறுவப்பட்ட பன்னாட்டு வரைமுறைகளை கருத்தில் கொண்டும், அத்தகைய அகற்றுதல்களில் பிற நாடுகளின் மீன்பிடிப்பு, கடல்சார் சுற்றுப்புறச்சூழ்நிலையைப் பாதுகாத்தல், கடமை மற்றும் உரிமைகளை மதித்து உபயோகமற்ற அல்லது புறக்கணிக்கப்பட்ட நிறுவப்பட்டவை மற்றும் அமைப்புகள் அகற்றப்படல் வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

உலக கடலாண்மை நிறுவனம் இப் பொருள் குறித்தவற்றை நிர்வகிக்க வேண்டிய நிறுவனம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்

கடல் சார் பாதுகாப்புக் குழுவின் 57வது அமர்வில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடல்சார் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்பு குழுவின் ஒத்துழைப்புடன் வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறைகள் ஏற்படுத்தப்பட்டது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

1. பன்னாட்டு கடல் படுகை மற்றும் தனி பொருளாதார மண்டல பகுதிகளில் கரையிலிருந்து தொலைவில் உள்ள அமைப்புகள் மற்றும் நிறுவப்பட்டவைகளை அகற்றுவதற்கான வழிகாட்டு முறைகள் மற்றும் வழிமுறைகள் இந்தத் தீர்மானத்தின் இணைப்பில் அமைக்கப்பட்டுப் பின்பற்றப் படுகிறது.

2. உறுப்பினரான அரசுகள், புறக்கணிக்கப்பட்ட, உபயோகமற்ற நிறுவப்பட்டவை மற்றும் அமைப்புகளை நீக்குவது குறித்து முடிவுக்கு வரும் முன்பாக மேலே கூறப்பட்ட வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறைகளை கருத்தில் கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைக்கிறது.

இணை 5

## இ. கரைக்குத் தொலைவில் பன்னாட்டு கடல் படுகை மற்றும் தனி பொருளாதார மண்டலத்தில் நிறுவப்பட்டவை மற்றும் அமைப்புகளை நீக்குதல் தொடர்பான வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறை செய்யப்பட்டவை.

### 1. பொதுவான நீக்குதல் தேவைகள்

1.1 பன்னாட்டு கடல் படுகை அல்லது தனிப்பொருளாதார மண்டலத்தில், புறக்கணிக்கப்பட்ட அல்லது உபயோகமற்ற நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்டவைகளை நீக்குதலுக்கான தேவை முழுதும் அல்லது பகுதி நீக்கப்படாத நிலை கீழ்க்கண்ட வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறைகளுக்கு சீரானது என்பது தவிர்த்து

1.2 முதலாவதாக எதற்காக அமைக்கப்பட்டதோ அல்லது நிறுவப்பட்டதோ தொடர்ந்து அதற்கான நோக்கங்களுக்காக பயன்படாத நிலையில் அல்லது தொடர்கிற புது உபயோகத்திற்காக அல்லது பொருத்தமான கடற்பகுதியில் நிறுவப்பட்டவையோ அல்லது அமைக்கப்பட்டவையோ அல்லது அதன் பகுதி தொடர்ந்து இருப்பதற்கு, வழிகாட்டு முறைகள் அல்லது வரைமுறைகளின் படி பொருத்தமான காரணம் இல்லாத நிலையில், அவைகள் முழுதாகவோ அல்லது பகுதியாகவோ வழிகாட்டு முறைகள், வரைமுறைகளுக்கு உட்பட்டு நாட்டின் எல்லைக்குள் உள்ள அவை நீக்கப்படுகின்றன என்பதனை கடலோர நாடு உறுதி செய்ய வேண்டும். நிறுவப்பட்டவை மற்றும் அமைக்கப்பட்டவை புறக்கணிக்கப்பட்ட அல்லது எப்பொழுது உபயோகமற்ற நிலையில் இருக்கிறதோ உடன் நியாயமாக சாத்தியமானவரை மிக விரைவில் அவற்றை அகற்றுதலை மேற் கொள்ள வேண்டும்.

1.3 அகற்றாதிருத்தல் அல்லது பகுதி நீக்கம் குறித்த அமைப்பு அறிவிக்கை அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

1.4 பன்னாட்டு கடல் படுகை மற்றும் தனிபொருளாதார மண்டலத்தில் அமலில் இருக்கும் அல்லது வருங்காலத்தில் நிறுவப்பட இருப்பவை, அமைக்கப்பட இருப்பவைகளை கடலோர நாடு மிகவும் கண்டிப்பாக நீக்குவதற்கான தேவைகளை விதிப்பதிலிருந்து விலக்கம் பெற வழிகாட்டு முறைகள் மற்றும் வரைமுறைகளில் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

### 2. வழிகாட்டு முறைகள்

2.1 குறிப்பாக கரையோர நாட்டின் எல்லையில் ஒவ்வொன்றாக மதிப்பீடு செய்தபின் நிறுவப்பட்டவை அல்லது அமைப்பு முழுமையாகவோ, பகுதியாகவோ தொடர்ந்து இருக்க கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கிடலாம்.

1. நீர்ப்பரப்பு அல்லது சார் நீர்ப்பரப்பில் கடல் பயணத்தின் பாதுகாப்புக்கு, கடலின் பிற உபயோகிப்பாளர்களுக்கு சாத்தியமான விளைவுகள்
2. பொருளின் அழியும் விகிதம் மற்றும் தற்போதைய மற்றும் வருங்காலத்தில், கடல்சார் சுற்றுப்புறச்சூழ்நிலையில் ஏற்படக்கூடிய விளைவுகள்
3. உயிர்வாழும் ஆதாரங்கள் உட்பட கடல் சார் சுற்றுப்புறச்சூழ்நிலையில், சாத்தியமான விளைவுகள்
4. தற்போதைய நிலையில் இருந்து, வரும் காலத்தில் நகரும் எனில், அதனால் ஏற்படும் அபாயம்
5. செலவினம், தொழில் நுட்ப சாத்தியம், அமைப்பு மற்றும் நிறுவப்பட்டவை ஆகியவற்றை நீக்குதலில் ஈடுபடும் நபர்களுக்கு காயம் ஏற்படும் அபாயம்

6. கடல் தளத்தில் நிறுவப்பட்டவை அல்லது அமைக்கப்பட்டவை தொடர்ந்து நீடிக்க புதிய உபயோகத்தை தீர்மானித்தல், ஏற்றுக் கொள்ளக் கூடிய தக்க காரணம்

2.2 பரப்பு அல்லது சார்பரப்பில் கடற்பயணம், கடலில் பிற உபயோகிப்பாளர் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான சாத்வீக விளைவை, கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டும்.அவ்வழியே செல்வதாக எதிர்பார்க்கப்படும் கலனின் எண், வகை, தேவையான ஆழம், கடலில் ஏற்றிச் செல்லப்படும் சரக்கு, அலை, நீரோட்டம், பொதுவான நீரியல் நிலை சாத்தியமான வெப்பநிலை, அடுத்துள்ள அல்லது வழக்கமான கடல் பாதை, துறைமுகத்தை அணுகும் வழி, கடற்பயணத்திற்கான வழிகாட்டிகள், வணிகரீதியில் மீன் பிடிப்பு பகுதிகளின் இருப்பிடம், கடல் பயண பாதையில் உபயோகப்படுத்தக் கூடிய அகலம், அப்பகுதி ஜல சந்தியில் உள்ளதா அல்லது பன்னாட்டு கடற்பயணத்திற்கான பன்னாட்டு வழியா என்பவைகளை கருத்தில் கொள்ளுதல்.

2.3 விஞ்ஞான உண்மையின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். நீரின் தரத்தில் ஏற்படுத்தும் விளைவு, புவியியல், நீரியல் தன்மைகள் ஆபத்திற்குள்ளான அபாய எச்சரிக்கை செய்யப்பட்ட வகை உயிரினங்களின் இருப்பு, இருக்கும் உறைவிட வகைகள், உள்ளூர் மீன்வள ஆதாரங்கள், கரையிலிருந்து தொலைவில் உள்ள நிறுவப்பட்டவை, அமைக்கப்பட்டவை, ஆகியவற்றின் அழிவுகளினால் வரும் மீதிப் பொருட்கள் விளைவிக்கும் தூய்மைக் கேடு மற்றும் கலப்படம் ஆகியவற்றிற்கான சாத்தியங்கள்.

2.4 கரையிலிருந்து தொலைவில் கடல்தளத்தில் உள்ள நிறுவப்பட்டவை, அமைப்புகள் தொடர்ந்திடுவதற்கு அனுமதிக்கும் முறை, கடல் நாட்டின் அலுவலக அங்கீகாரத்துடன், நிறுவப்பட்டவை அல்லது அமைப்பின் அதிகார எல்லையை அடையாளமிடுதல், கடல் தளத்தில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தொடர்ந்து இருக்க அனுமதிக்க காரணங்கள், கொடி நாடு மீன் பிடித்திட தனிப்பட்ட சட்டம் வரைதல், கடல் தளத்தில் சேரும் மற்றும் வீணாகும் பொருட்களை கண்காணித்தல் அவற்றால் கடல் பயணத்திற்கோ அல்லது கடல் சார் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கோ கேடான விளைவுகள் ஏற்படாது என்பது உறுதி செய்யப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட நிலை, அளவு அளவை செய்யப்பட்ட ஆழம், முழுதுமாக நீக்கப்படாத நிறுவப்பட்டவை, அமைக்கப்பட்டவை ஆகியவைகளின் அடையாளம் பற்றி முன்னதாக நாடுகளுக்கு அறிவிப்பு செய்ய வேண்டும். உரிய நீரியல் சேவைக்கு கடற்பயண வரைபடங்களில் திருத்தம் மேற் கொள்ள முன்னதாக அறிவிப்பு செய்ய வேண்டும்.

### 3. வரைமுறைகள்

கரையிலிருந்து தொலைவில் உள்ள நிறுவப்பட்டவை, அமைப்புகளை நீக்குவதற்கான முடிவு மேற்கொள்ள கீழ்கண்ட வரைமுறைகள் கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

3.1 தளம், மேற்பட்ட பகுதி நீங்கலாக, புறக்கணிக்கப்பட்ட உபயோகமில்லாத நிறுவப்பட்டவை, அமைப்புகள் 75 மீ தண்ணீரில், காற்றில் 4000 டன் எடைக்கு குறையாது இருப்பின், நீக்கப்பட வேண்டும்.

3.2 ஜனவரி 1, 1998 அன்று அல்லது அதற்குப் பிறகு கடல் படுகையில் இடப்பட்ட அனைத்து புறக்கணிக்கப்பட்ட, உபயோகமற்ற நிறுவப்பட்டவை, அமைப்புகள் 100 மீ தண்ணீரில், காற்றில் 4000 டன் எடைக்கு குறையாத அனைத்தும் தளம், மேற்பட்ட பகுதி நீங்கலாக முழுதுமாக நீக்கப்பட வேண்டும்.

இணை 5

**3.3** கடற்பயணம், கடல்சார் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகள் ஏதுமின்றி அகற்றும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். முழுதும் அல்லது பகுதி அகற்றுதல் பணி முடியும் முன்பாக, தேவைப்பட்ட IALA பரிந்துரைகளின் படி நிறுவப்பட்டவை தொடர்ந்து அடையாளம் இடப்பட்டிருக்க வேண்டும். அகற்றும் பணி முடிந்த பின்பும் தொடர்ந்து இருக்கும் நிறுவப்பட்டவைகளின் நிலை, அளவு பற்றிய விபரங்களை நாட்டின் உரிய அதிகாரமுடையவருக்கு தெரிவிக்க வேண்டும். உலக நீரியல் வரைபடம் தயாரிப்போருக்கும் தெரிவிக்க வேண்டும். குறிப்பாக ஆபத்திற்குள்ளான அல்லது அபாய எச்சரிக்கை செய்யப்பட்டுள்ள உயிரின வகைகளுக்கோ ஆதாரங்களுக்கோ குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளை, அகற்றுதல் முறை ஏற்படுத்துதல் கூடாது.

**3.4** நிறுவப்பட்டவை, அமைப்பு முழுதுமாக, பகுதியாக எப்பகுதியில் விடப்பட வேண்டும் என்பதை கடலோர நாடு தீர்மானிக்கலாம்.

1. பத்தி **3.1** அல்லது **3.2** பகுதியில் தெரிவிக்கப்பட்ட ஒன்றினை உள்ளிட்ட, இருக்கும் நிறுவப்பட்டவை அல்லது அமைப்பு முழுதுமாக அல்லது பகுதியாக கடல்பகுதியின் அதே இடத்தில் உயிர்வாழும் ஆதாரஅதிகரிப்பாக தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படின், புதிய உபயோகத்திற்காக பயன்படும் என்பதால்,

2. பத்தி **3.1** அல்லது **3.2** பகுதியில் தெரிவிக்கப்பட்டவாறு இருக்கும் நிறுவப்பட்டவை அல்லது அமைப்பு தவிர்த்த அதே இடத்தில், கடலின் இதர உபயோகங்களில் தேவையற்ற இடையூறு ஏற்படுத்தாதவாறு விடப்படலாம்.

**3.5** பத்தி **3.1** மற்றும் **3.2** ன் தேவைக்கு தடையில்லாதவாறு முழுதுமான அகற்றுதல் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமில்லை எனில், மிக அதிகமான செலவினம் எனில், ஏற்றுக் கொள்ள இயலாத வகையில் சுற்றுச் சூழல் மற்றும் பணியாளர்களுக்கு அபாயம் இல்லையெனில், இவை அகற்றப்பட வேண்டிய தேவையில்லை என கடலோர நாடு தீர்மானிக்கலாம்.

**3.6** கடற்பரப்புக்கு மேல் உயர்ந்திருக்கும் புறக்கணிக்கப்பட்ட உபயோகமற்ற நிறுவப்பட்டவை, அமைப்பு, அதன் பகுதியாக அமைப்பின் தோல்வியைத் தடுக்க போதிய அளவில் நிர்வகிக்கப்பட வேண்டும். பகுதியாக நீக்குதல் குறித்தவற்றில் **3.4.2** அல்லது **3.5**ல் தெரிவித்தவாறு பாதுகாப்பான கடற்பயணத்தை உறுதிசெய்ய போதுமானதாக **55** மீட்டருக்கு குறையாத நீர்ப்பரப்பு கடல் பரப்புக்கு மேல் நீண்டிருக்காத பகுதியாக நீக்கப்பட்ட அமைப்பு மற்றும் நிறுவப்பட்டவைகளுக்கு இருக்க வேண்டும்.

**3.7** அமைப்பு, நிறுவப்பட்டவை முதலாவதாக எந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டதோ அதற்காக பயன்படாது, பன்னாட்டு பயணங்களுக்காக பயன்படுத்தப்படும் ஜலசந்தி, வழிகள், வழக்கமான ஆழப்பகுதியான கடல்வழிகள் அல்லது நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் வழிகள் உடன் நெருங்கிய பகுதி ஆகியவற்றில் இருப்பவை முழுதுமாக அகற்றப்பட வேண்டும். விதிவிலக்கு ஏதும் இல்லை.

**3.8** கடல்படுகையில் முழுதுமாக அகற்றப்படாத நிறுவப்பட்டவை, அமைப்பு குறித்த நிலை, அளவை செய்யப்பட்ட ஆழம், பொருளின் அளவு குறித்த விபரங்கள், கடற்பயண வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ளன என்பதை கடலோர நாடுகள் உறுதி செய்ய வேண்டும். தேவையெனில் மீதியானவை உரிய முறையில் கடல்பயண உதவிக்காக அடையாளம் இடப்பட வேண்டும் இவற்றின் நிலை குறித்து மாலுமிகளுக்கும் உரிய நீரியல் சேவைக்கும் குறைந்தது **120** நாட்களுக்கு முன்பாக முன்னறிவிப்பு வழங்குவதை கரையோர நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

3.9 கடலின் அலை, கடலின் ஏற்ற வற்றம், நீரோட்டம், புயல், எதிர்பாராத இயற்கைக் காரணங்கள் ஆகியவற்றால் கடற்பயணத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நகராது எனின் அமைப்பு, நிறுவப்பட்டவை, பகுதியாக அகற்ற சம்மதம் தெரிவிக்கும் முன்பு கரையோர நாடு திருப்தி பெற வேண்டும்.

3.10 தேவையென கருதும் நிலையில் கடற்பயணத்திற்கு தடை ஏற்படுத்தும் எனில் அதன் நிலையினை அடையாளம் இடவும், மீதியான பொருட்களின் நிலையினைக் கண்காணிக்கவும், கடற்பயணத்திற்கு உதவிடுபவைகளை நிர்வகிக்கவும் பொறுப்பான குழுவினை* கடலோர நாடு அடையாளம் காண வேண்டும். பொறுப்பான குழுவினர்* வழிகாட்டு முறைகள், வரைமுறைகளுக்கு தொடர்ந்து இணக்கமாக தேவைப்படும் வரையில் கண்காணித்தலை கடலோர நாடு உறுதி செய்ய வேண்டும்.

3.11 கடல்படுகையிலிருந்து முழுதுமாக அகற்றப்படாத நிறுவப்பட்டவை, அமைப்புகளுக்கு சட்ட பூர்வ தலைப்பு அவசியம் என்பதை உறுதி செய்ய வேண்டும். நிர்வகிக்கும் பொறுப்பு எதிர்கால சேதங்களுக்காக எதிர்பார்க்கப்படும் சுமைக்கான போதிய நிதி ஆகியவை தெளிவாக நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

3.12 கடல்படுகையில், நிறுவப்பட்டவை, அமைக்கப்பட்டவை ஆகியவற்றை நீக்குததலால் பெறும் பொருட்கள் வைக்கப்படும் இடங்களில் உயிர்வாழும் ஆதாரங்கள் அதிகரிக்கின்றன. (உ.ம். செயற்கை பாறை அமைத்தல்) கடல்சார் பாதுகாப்பு நிர்வகித்தலுக்கான தொடர்புடைய வரைமுறைகள், வழிகாட்டு முறைகள், வரைமுறைகளைக் கணக்கில் கொண்டு வழக்கமான போக்குவரத்து பாதைகளுக்கு போதிய அளவு தொலைவில் இப்பொருட்கள் விடப்பட வேண்டும்.

3.13 வடிவமைப்பு மற்றும் கட்டுமானம், புறக்கணிக்கப்பட்டவை, நிரந்தரமாக உபயோகமற்ற தன்மையால் முழுதுமாக அகற்றுதல் சாத்தியம் எனில் ஜனவரி 1,1998 அன்று அல்லது அதற்குப்பின் நிறுவப்பட்டவை, அமைக்கப்பட்டவை எந்த ஒரு கடல்படுகையிலும் அல்லது பிரத்யேக பொருளாதார மண்டலத்திலும் வைக்கப்படக் கூடாது.

3.14 குறிப்பிடப்படாத வரையில் நடப்பில், அவ்வாறே வருங்காலத்தில் நிறுவப்பட்டவை மற்றும் அமைக்கப்பட்டவைகளுக்காக இந்த வரைமுறைகள் பயன்படுத்தப்படும்.

* ‘‘பொறுப்பான குழு’’ என்ற வார்த்தைகள் மேலே உள்ள பத்தி 3.1 ல் தெரிவித்த நோக்கத்திற்காக கடலோர நாடு அடையாளம் காணும் ஜூரி அல்லது நபர்களைக் குறிக்கும்.

## இணைப்பு 6

## மீன்பிடிகலன்களுக்கான துறைமுகம், இறங்குதளங்களின் வளர்ச்சி மற்றும் மேலாண்மைக்கான செயல்முறைகள்

### இணைப்பினைத் தயாரித்தல்

மீன்பிடி கலன்களுக்கான துறைமுகம், இறங்கு தளங்களின் வளர்ச்சி மற்றும் மேலாண்மை குறித்த செயல் முறைக்கான கருத்துருக்களைக் கொண்டுள்ளது. புது கட்டுமானம், இருக்கும் வசதிகளை மேம்படுத்துதல் குறித்த சுற்றுப்புறச்சூழல் ஆய்வு நடத்துவதற்கான வழிகாட்டு முறைகளையும் வழங்குகிறது.

இப்பொருள் குறித்த அடிப்படை பத்திரங்களாவன, பினாங்கு, மலேசியாவில் டிசம்பர் **9–11, 1991** ல் நடைபெற்ற தூய்மையான துறைமுகத்திற்கான பிராந்திய பன்னாட்டு கடல்படுகை, கடல்தளம், மண், குறித்த கலந்தாய்வு அறிக்கை துருவி ஆய்தல், பயன்பாடு குறித்த பார்சிலோனா சம்பிரதாய மூலப்பத்திரம், உவே அமைப்பகத்தின் சைப்ரஸ், குவைட், ஈரான், பாகிஸ்தான் மற்றும் மாலத்தீவிலுள்ள துறைமுகங்களின் திட்ட அறிக்கை, உலக கடலாண்மை நிறுவனம் MARPOL குறித்த ஆவணங்கள்.

இணை 6

## உள்ளடக்கம்


பக்கம்

**அ. முன்னுரை** ........ 82

**ஆ. தரப்பபடுத்தப்பட்ட செய்முறைகள்** ........ 83

1. பொதுவான ஏற்பாடுகள் ........ 83
2 வாய்ப்பு மற்றும் நோக்கங்கள் ........ 83
3. மேலாண்மை ........ 84
4. சுற்றுப்புறச்சூழல் ஆய்வு செய்தல் ........ 85
5. சுற்றுப்புறச்சூழல் மதிப்பீடுகள் ........ 86
6. திட்டமிட்ட மாற்றங்கள் ........ 87
7. எதிர்நோக்கும் விளைவுகள் ........ 87
8. சமனப்படுத்தும் செயல் முறைகள் ........ 88
9. வடிவமைப்புத்திட்டம் ........ 88
10. கல்வி மற்றும் பயிற்சி ........ 90
11. சுட்டுக் குறிப்புகள் ........ 91

இணை **6**

**அ. முன்னுரை**

1. மீன்பிடி கலன்களுக்கான புதிய துறைமுகங்கள், இறங்குதளங்கள், கட்டுமானம், வளர்ந்து வரும் பிரச்சினைகள், கலன்களின் இயக்கம் மற்றும் நிர்வாகம் ஆகியவை உலகின் சில பகுதிகளில் ஆபத்தான நிலையை எட்டி உள்ளது. மீன்பிடி கலன்களின் நடவடிக்கைகள், மீன் விற்போர் பதப்படுத்துவோர் ஆகியோரால் துறைமுக தூய்மைக் கேட்டிற்கு பாதகமான விளைவுகள் ஆகியவை போதிய வசதி இன்மையால் மோசமடைகின்றன. வளர்ந்து வரும் நாடுகளிலிருந்து, இயங்கும் துறைமுகங்களில் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு, புதியவற்றை நிறுவி வடிவமைக்க உதவி என வளர்ந்து வரும் தேவை **1980** களில் உணரப்பட்டது.

2. வங்காள விரிகுடாவின் சார்மண்டலத்தில், இப்பொருள் விவகாரத்திற்கு காரணமாகி விட்டது. உலக கடலாண்மை நிறுவனம் **(**அதன் தூய்மையான கடல் திட்டங்களில்**)** உதவியுடன், வங்காள விரிகுடா திட்ட வரிசையாக முக்கியமான ஆய்வுகள் தொடங்கியது. அதே நேரத்தில் உவேஅமைப்பின் வடிவமைப்பு கட்டுமானம் மற்றும் துறைமுகங்களின், இறங்கு தளங்களின் நிர்வாகத்திற்கும் ஆன, கையேடு தயாரிப்பில் இறங்கியது. இக்கையேட்டின் முக்கிய பகுதி தூய்மைக் கேட்டை குறைப்பது பற்றியது ஆகும்.

3. வங்காள விரிகுடா திட்ட நடவடிக்கைகள் குறித்து மலேசிய அரசு சார் மண்டலக் கருத்தரங்கிற்கு டிசம்பர் **9–11, 1991** ல் பினாங்கில் ஏற்பாடு செய்தது. வங்காள விரிகுடாத்திட்டம் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவுகள் இக்கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன. உவே அமைப்பு, பிற மண்டலங்களில் அதன் நடவடிக்கைகள் பற்றியும், உலக கடலாண்மை நிறுவனம், MARPOL[1] குறித்த வளர்ச்சிகளையும் விவரித்தது.

4. சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான ஜூன் **1992** ல் ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில், சுற்றுப்புறச்சூழ்நிலை பாதகாப்பு குறித்து முன் ஜாக்கிரதை, எதிர் நோக்கும் வழிகள் இருப்பதைக் காட்டிலும், கடல் தூய்மைக்கேடு சீரழிவைத் தடுப்பதே தேவை என உணரப்பட்டது. சுற்றுச் சூழல் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டம் சுற்றுப்புறச்சூழ்நிலையின் தாக்கத்தை மதிப்பிட செய் முறைகளைப் பின்பற்றிட பரிந்துரைத்தது.

5. சமீப காலத்தில் கடலோர நாடுகள் சுற்றுப்புறச்சூழல் ஆய்வு, வளர்ச்சிக்கான அங்கீகரிக்கப்பட்ட வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. திட்ட அறிக்கையை ஊக்கமளிப்பவரோடு ஆலோசித்து திட்டத்தையும் சுற்றுப்புறச்சூழ் நிலையின் குறிப்பான விளைவு குறித்தும் திட்ட மிடப்பட்ட நடவடிக்கை குறித்தும் கூட்டாக நாடு மதிப்பீடு செய்ததை உறுதி செய்ய வேண்டும். ஆய்வு முறை முதற்கட்ட மதிப்பீடு பகுதி ஆய்வுக்கு வழி செய்தல் வேண்டும். அதன் அடிப்படையில் அரசு திட்டத்தை மேற்கொண்டு தொடர்வதா வேண்டாமா என்பதை முடிவு செய்யும். கூடுதலாக திட்டத்தின் அளவு, நிதி, திட்டத்தின் செய்முறைத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, முழு ஆய்விற்கான நிபந்தனைகளை ஏற்படுத்த வேண்டும்.

6. வங்காள விரிகுடாத்திட்டம், உவே அமைப்பு, ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து, கடலோர வளர்ச்சிக்கான தாக்க மதிப்பீடுகள் பொருளின் உண்மைநிலை தெரிவிக்கப்படாத வரையில், பொது அறிவு குறித்த பொருள் என்பது புலனாகிறது. அவ்வாறே கடலோரப்பகுதியை உபயோகிப்பவரிடையே நிலவும் ஒத்துழைப்பு, தேவைக்கு ஏற்றவாறு இல்லாது மிகவும் குறைந்து விடுகிறது.

---

[1] *கப்பல்களிலிருந்து வரும் தூய்மைக் கேட்டை தடுப்பதற்கான பன்னாட்டு சம்பிரதாயங்கள் **1973,** MARPOL **73 / 78** குறித்து, **1978** ன் மூலப்பத்திரம் மாற்றியமைக்கப்பட்டவாறு.*

7. அதனால் வங்காள விரிகுடாத் திட்டத்தின் பினாங்கு கருத்தரங்கில் இணைப்பை தயார் செய்வதில் சிறந்த நிர்வாக முறையினை அடையாளம் காண்பதற்கான தூய்மையான துறைமுகங்கள் குறித்து, MARPOL ன் சமீபத்திய வளர்ச்சிகளை செயல்படுத்துதல் (துறைமுக வரவேற்பு வசதிகள்) சுற்றுச் சூழல் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் கூட்ட நிகழ்ச்சி நிரல், பொறுப்பார்ந்த மீன் வள நடத்தை விதித்தொகுப்பின் கட்டுரை 8 மற்றும் 10 கணக்கில் கொள்ளப்பட்டன.

## ஆ. தரப்படுத்தப்பட்ட செய்முறைகள்

### 1. பொதுவான ஏற்பாடுகள்

1.1 பொறுப்பார்ந்த மீன்பிடி நடவடிக்கை, கடலோர மேலாண்மையுடன் இணைந்த மீன்வளம் ஆகிய எண்ணங்களுடன், மீன்பிடி கலன்களுக்கான துறைமுகம், இறங்குதளங்களின் மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்காக உதவிடும் செயல்முறைகளை நடத்திட தொழில் நுட்ப வடிவமைப்பை இந்த இணைப்பு வழங்குகிறது.

1.2 இந்த எதிர்கால மீன்வளம் குறித்த உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான சுற்றுப்புறச்சூழ்நிலை ஆய்வுக்கான வடிவமைப்புகள் மற்றும் செயல்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

1.3 தன்னார்வமாக, பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பின் பகுதியாக இருந்தபோதிலும் இணைப்பில் சில முன்னேற்பாடுகளுக்கு UNCLOS 82[2], மற்றும் MONTREAL PROTOCOL[3] மற்றும் MARPOL 73/78. போன்ற கட்டுப்படுத்தக்கூடிய விளைவுகளுக்காக அதிகாரங்கள் வழங்க வேண்டும்.

### 2. வாய்ப்பு மற்றும் நோக்கங்கள்

2.1 முன்மொழியப்படும் கருத்துரு உலகளாவிய வாய்ப்புடையது. மீன்பிடி கலன்களுக்கான துறைமுகம், துறைமுக உள்கட்டமைப்பு, இறங்குதளங்கள் ஆகியவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுமானம், நிர்வாகம், மேலாண்மை ஆகியவற்றில் ஈடுபடும் அரசு அல்லது தனியார் அனைவரின் வழிகாட்டுதலுக்கானது.

2.2 திருப்திகரமான சுற்றுப்புறச்சூழல் வளர்ச்சி, மேலாண்மை, பாதுகாத்தல் நடவடிக்கைகளை பின்பற்றிட உறுதிசெய்திடும் நாட்டின் திறனை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

அ. நன்முறையில் தரப்படுத்தப்பட்ட மேலாண்மை (உபயோகத்திலிருக்கும் மற்றும் எதிர் கால துறைமுகம், இறங்கு தளங்களின்),

ஆ. வருங்கால மீன்வள உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு சுற்றுப்புற ஆய்வு, கட்டுமான அலகுகள் நிறுவுதல்,

இ. சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வுக்கான கல்வி மற்றும் பொருத்தமான பயிற்சி.

---

2 கடல்சட்டத்தில் ஐக்கிய நாட்டின் சம்பிரதாயங்கள் 10 டிசம்பர் , 1982

3 வியன்னா சம்பிரதாயங்களுக்கான மாண்டிரால் மூலப்பத்திரம்

இணை 6

## 3. மேலாண்மை

**3.1** சட்டபூர்வ, நிறுவன வடிவமைப்பு கடலோர வளர்ச்சியை நிர்வகிக்க பயன்படுத்தப்படுகிறது என்பதனை நாடு உறுதி செய்தல் வேண்டும்.

**3.2** கடலோர மேலாண்மை ஏற்பாடுகளில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்திட, மீன்வளப் பிரிவும் இணைந்த அங்கமாக வேண்டும்.

அ. கடலோர மீன் பிடிக்கும் சமுதாயத்தினரின் உரிமை, நிலைத்து நிற்கும் வளர்ச்சி ஆகியவற்றிற்கு இணக்கமாகும் அளவிற்கு அவர்களின் வழக்கமான செய்முறைகளை உரிய வகையில் கணக்கில் எடுத்துக் கொள்ளுதல்.

ஆ. மீன்வளம் தொடர்பான திட்டங்கள், கடலோர மேலாண்மை தொடர்பான மீன்வளம் அல்லாத நடவடிக்கைகளில் அவர்களது பங்களிப்பு குறித்து முடிவு செய்யும் முறைகளில் மீன்வளப்பிரிவு, மீன் பிடிக்கும் சமுதாயத்தினருடன் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

**3.3** மீன் இறங்கு தளம் அல்லது துறைமுக அளவில், பின்வருவனவற்றை உறுதி செய்திட, மேலாண்மை அமைப்பு நிறுவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அ. மீன்பிடித்துறைமுகம் அல்லது இறங்கு தளம் வசதிகள் குறித்த சட்டம், துறைமுக நாட்டின் பணிகளில் கட்டுப்பாடு, சட்ட விதிகளுக்கு இணக்கம் ஆகியவற்றை தகுதியான அதிகாரமுடையோர் பின்பற்ற வேண்டும்.

ஆ. மண்டலம், சார் மண்டலம் மற்றும் தேசீய அடிப்படையில் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு நிர்வகிக்கும் முறைகளுக்கு இணக்கம் தகுதியான அதிகாரம் உடையோரால் பின்பற்றப்படும்[4].

இ. மற்ற உபயோகிப்பாளர்களுடன் ஒருங்கிணைதல் (மீன்பிடி கலன்களுக்கு பிரத்யேக வசதி இல்லாத நிலையில்)

ஈ) முடிவு எடுக்கப்படும் முறைகளில் வெளிப்படையான தெளிவு

**3.4** மேலாண்மை அமைப்புகளை நிறுவுதலில் உரிய அதிகாரமுடையோர் அவ்வமைப்புகளுக்காக கீழ்க்கண்டவற்றை உறுதி செய்ய வேண்டும்.

அ. அமைப்பு அமைக்கப்பட்ட நோக்கத்திற்காக பணியாற்றிட போதுமான நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆ. வசதிகளை உபயோகிக்கும் அனைத்து வகையினருக்கும் பிரதிநிதித்துவம்

இ. பல்வகையான உபயோகிப்பாளரிடையே கலந்தாய்வினை அனுமதித்தல்.

ஈ. அமைப்பின் பணிகள், வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள், வசதிகளின் அளவு ஆகியவற்றிற்கு தகுதியான அமைப்பு

---

[4] *மண்டலம் சார் மண்டலம் ஆகியவற்றின் ஒப்பந்தங்களில் உறுப்பினராக உள்ள நாட்டின்தேசிய சட்டங்களில் முன்னேற்பாடுகள் உட்படுத்தப்பட்டிருக்கும்.*

3.5 கிராம நிலையில் நிர்வாகம், சமுதாய மீன்வள மையத்திடம் அல்லது அதுபோன்ற மீனவர் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். வசதிகள் மற்றும் சேவைகள், குறிப்பிட்ட கிராமம் அல்லது பகுதியில் அமைதியானவை, மிதமானவை என்ற போதிலும் ஒழுங்கான மேலாண்மை உருவாக்கும் தேவை உள்ளது[5].

3.6 தொழில் அளவில், மேலாண்மை நன்றாக நிர்ணயிக்கப்பட்ட அமைப்பால் நிர்வகிக்கப்பட வேண்டும். துறைமுகத்தின் பல பிரிவான உபயோகிப்பாளர்கள், அதேபோன்று பெரிய அளவில் சமுதாயத்தினரிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோர் உறுப்பினராக இருக்க வேண்டும். வசதிகள் ஒரே நிறுவனத்திற்கு சொந்தம் எனில் அங்கு இவ்விதிக்கு விலக்கு உண்டு. முழுதுமான நிர்வாக அமைப்பிற்குள் எனின் நிறுவனம் அதன் நடவடிக்கைகளுக்கு பொறுப்பானதாகும்.

## 4. சுற்றுப்புறச்சூழல் ஆய்வு செய்தல்

4.1 நீரியல் சுற்றுப்புறச்சூழ்நிலையில் தேவையற்ற அழிவுகளைக் குறைக்கும் முன் ஜாக்கிரதைக்காகவே எதிர் செயல்களுக்கு அல்லாது, வளர்ச்சிக்கான கருத்துரு அமைக்கப்பட்டுள்ளதை நாடு உறுதிப்படுத்த வேண்டும்.

4.2 துறைமுகம் மற்றும் இறங்கு தளங்களுக்கான வருங்கால வளர்ச்சிக்கான கருத்துருவில், தேசீய வளர்ச்சித் திட்டங்களில் பொருந்தும் இடங்களில், மீன்வளம் மற்றும் கரையோர மேலாண்மை திட்டங்களை சேர்ப்பதற்கான செயல் முறைகளை, நாடு நிறுவ வேண்டும். திட்ட மிட்ட காலத்திற்குள், உதாரணமாக, மீன்வளத்தில் இயற்கை அழிவுகள் உட்பட எதிர் பாராத மாற்றங்களின் காரணமாக கருத்துருக்கான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் செயல்முறைகள் வளையக்கூடிய தன்மையில் இருக்க வேண்டும்.

4.3 அக்கருத்துருக்கள் அனைத்தும் தெளிவாக வரையறுக்கப்பட்ட தேவைகளுக்கானவை என்பதை நாடு உறுதி செய்ய வேண்டும்.

4.4 கடலோரப்பகுதியில் அல்லது உள்நாட்டுப்பகுதியில், மீன்பிடி கலன்களுக்கான துறைமுகம், இறங்குதளங்களின் கட்டுமானம் அல்லது விஸ்தரிப்பு ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களுக்கு ஆதரவாக, நாடு, சுற்றுப்புறச்சூழல் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்[6].

4.5 பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைப்பாட்டிற்கு இணங்க முழு சுற்றுப்புறச்சூழல் ஆய்வு மேற்கொள்ள ஆய்வு செயல்முறைகள்.

அ. முன்மொழியப்படும் இடத்தில், சமூக, கலாச்சார நடவடிக்கைகள், நில உபயோகத் தன்மை உட்பட தற்போது இருக்கும் சுற்றுப்புற சூழலை மதிப்பிடுதல்.

ஆ. முன்மொழியப்பட்ட திட்டத்தினால் சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்பட இருக்கும் திட்ட மிட்டமாற்றங்கள் பட்டியல்.

இ. தற்போது இருக்கும் சூழ்நிலைக்கு திட்டத்தால் ஏற்பட இருக்கும் எதிர்பார்க்கப்படும் தாக்கத்தின் மதிப்பீடு[7].

ஈ) தற்போது இருக்கும் சூழ்நிலைக்கு திட்டத்தால் ஏற்பட இருக்கும் எதிர்பார்க்கப்படும் தாக்கத்தின் அளவைக் குறைக்க சாந்தப்படுத்தும் முறைகளை முன்மொழிதல்

---

5 *சமுதாய மீன் பிடிப்பு மையங்கள் நிறுவுதல் மற்றும் இயக்கத்திற்காக உவேஅ வழிகாட்டு முறைகள்.*

6 *அத்தகைய ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆற்றல் கொண்ட நிறுவன அமைப்புகள் அல்லது தனியார் பிரிவு அமைப்புகள் அடையாளம் காணப்பட வேண்டும்.*

7 *பார்வை 1 ல் மீன்பிடி துறைமுகங்கள் திட்டமிடுதல் உவே அமைப்பின் கட்டுரை*

உ) திட்ட இடத்தின் அருகாமையில் சுற்றுப்புறச்சூழல் நிர்வகிப்பதற்கான முறையினை நிறுவுதல்

**4.6** ஆய்வு முறையை ஆரம்பிக்க புதிய கட்டுமானத்திற்கான அனைத்து விண்ணப்பங்களுடனும் கருத்துரு வடிவமைப்பின் விரிவான குறிப்பு இணைக்கப்பட்டிருப்பதை நாடு உறுதி செய்ய வேண்டும்.

**4.7** கருத்துரு வடிவமைப்பின் விரிவான குறிப்பு தனித்து நிற்கும் பத்திரம் ஆகும். சுற்றுப்புறம் கட்டுமானம் மற்றும் இயக்கத்தின் போது அப்பகுதியில், ஆதாரத்தில் எதிர்பார்க்கப்படும் தேவை சாந்தப்படும் மற்றும் சுற்றுச் சூழலை நிர்வகிக்கும் கருத்துருக்கள் குறித்த திட்டக் கருத்துருக்களின் விபரமான குறிப்புகள், மனைப்பிரிவு வரைபடம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். விரிவான வடிவமைப்பில் உள்ள விபரங்கள் முன்மொழியப்படும் திட்டங்களுக்கு தகுதியானதாக இருக்க வேண்டும். பெரிய திட்டம் எனில் அதிக விபரங்கள் தேவைப்படும். தகுதியான அதிகாரமுடையோரால் கட்ட அனுமதி வழங்குதல், முழு அளவில் திட்டமிடுதல் முடியும் வரை இப்பத்திரம் சுற்றுப்புறச்சூழல் ஆய்வின் ஒரு பகுதியாக இருக்கும்.

## 5. சுற்றுப்புறச்சூழல் மதிப்பீடுகள்

**5.1** திட்டமிடப்பட்ட இடத்தில் தற்போதைய சுற்றுச்சூழல் கீழ்க்கண்டவற்றின் மூலம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

அ. கரையின் மற்றும் கரையிலிருந்து தொலையில் 20 மீ எல்லைக் கோடு வரை இடத்தின் புவியியல் நீரியல் வரைபடங்கள், கரை வழியே ஒவ்வொரு திசையிலும் சுமார் ஒரு கிலோ மீட்டருக்கு குறையாத அளவில்[8]

ஆ. இடத்தின் 1 : 2000 க்கு குறையாத விகிதத்தில் விண்வெளி வழங்கும் உருவம் கிடைக்கக் கூடிய துணைக்கோள் வழங்கும் உருவத்துடன்

இ. முன்மொழியப்பட்ட இடத்திலிருந்து 5 கிலோ மீட்டருக்குள் அமைந்திருக்கும் கரையோர அமைப்புகளின் விபரங்கள்

ஈ. இடத்தின் கரையோரப்பகுதியின் வெளித்தன்மையினைப்பற்றிய விபரங்கள் முன்பு மணல் மேடுகள், கடற்கரை, பாறைகள், மேற் கூரைகள், ஆறுகள், அருகில் உள்ள ஆறுகளில் உள்ள அணைகள், ஆற்று முகத்துவாரங்கள் போன்ற முக்கிய உள்ளூர் தகவல்களுக்கான புவியியல் விபரங்களும் பின்னணியில் தரப்பட்டிருக்க வேண்டும்.

உ. அலை, கடல் நீர் ஏற்றம் வற்றம் அல்லது ஏரிகளில் இறுதியான நிலையில் நேரிடக்கூடிய தன்மைகளின் புள்ளியியல் பட்டியல்

ஊ. மழையளவு, ஆறுகளில் நீரோட்டம், நீரின் அடர்த்தி, நீரின் வெப்பநிலை, ஊட்டச்சத்து மிகுதி, நுண்ணுயிர்களால் ஏற்படும் தூய்மைக் கேட்டின் அளவு ஆகியவற்றின் பருவ கால மாறுபாடுகள்

எ. கரை நெடுகிலும் கரையின் மற்றும் கடல் தளத்தின் புவியியல், வண்டல் படிதல், பெட்ரோ கிராஃபிக் தன்மைகள், ஆதாரங்களின் அளவு மற்றும் பருவகால மாற்றங்கள் உட்பட தன்மைகள்.

---

[8] *உலகின் பல பகுதிகளுக்கு துணைக்கோள் படங்கள் உள்ளன. உவே அமைப்பின் தொலை தூர தொடு உணர்வு அலகுகள், அதன் மண்டல நிலையங்கள் பொருத்தமாக இணைப்புகள் வழங்கும்.*

ஏ. திட்டமிடப்பட்ட இடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கரையோரம், கரையிலிருந்து தொலைவிலுள்ள வசிப்பிடங்களின் வரைபடம் (பவளப்பாறைகள், உப்பு நீர் ஏரிகள், சதுப்பு நிலத் தாவரங்கள், முகத்துவாரங்கள் முதலியன).

ஐ. திட்டமிடப்பட்ட இடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், வசிப்பிட வகைகளின் வரைபடம் (புகலிடம், முட்டையிடும் குஞ்சு பொறிக்கும் இடங்கள், உணவுக்கான இடங்கள்)

ஒ. பெறக்கூடிய உயிரின வகைகளின் பட்டியல் பாதுகாக்கப்பட்டவை அல்லது அரிதானவை ஆகியவற்றின் பட்டியல், உயிரியல் சுட்டிக்காட்டிகள், மீன் பிடி முறைகள்.

ஓ. மாதிரி வரைபடம் ஆதாரப்பணிக்கான ஆட்கள் மற்றும் அளவு, தண்ணீர், மின்சாரம் வழங்குதல், பகிர்ந்தளித்தல், சாலை மற்றும் தொலைத் தொடர்பு, கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல் போன்றவை.

ஔ. தனிப்பட்ட கழிவு வெளியேற்றம், கரையிலுள்ள மீன் பண்ணை, இறைச்சிக்காக வெட்டும் இடங்கள், மரங்களைத் துண்டிடுதல், அறுவை நிலையங்கள், மரக் கூழ் தொழிற்சாலைகள், சுரங்கம், உலோகத்தாதுக்களை சுருக்கும் நிலையங்கள், மரத்தொழிற்சாலைகளிலிருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளியேறி நீர் வாழ் சுற்றுப்புறத்தில் கலக்கும் நீர் வழிகளை காட்டும் வரைபடங்கள்.

## 6. திட்டமிட்ட மாற்றங்கள்

6.1 சுற்றுப்புறச்சூழ்நிலைக்கு திட்டமிடப்பட்ட மாற்றங்களை, மதிப்பீடுகள் தெரிவிக்க வேண்டும். அவை கீழ்க்கண்டவைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

அ. இடம், வகை, அளவு, திட்டத்தில் இணைந்து ஏற்படுத்தப்படும் பல்வேறு அம்சங்களின் குறுக்கு வெட்டுத் தோற்றம், முன்மொழியப்படும் கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளின் விளக்கம் ஆகியவை உட்பட திட்டத்தின் பொதுவான விளக்கம்.

ஆ. திட்ட கட்டுமானத்தின் அல்லது இயக்கத்தின் போது உள்ளூரில் கிடைக்கும் ஆதாரங்களின் தேவை

இ. திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவு மற்றும் புகைகக்குதல்

ஈ. திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் நில உபயோகத் தன்மைகள் மற்றும் சமூக கலாச்சார நடவடிக்கை உட்பட நிலத்தோற்றத்தில் மாறுதல்கள்

## 7. எதிர் நோக்கும் விளைவுகள்

7.1 தற்போதைய சுற்றுப்புறச்சூழ்நிலையில் அத்திட்டம் இடப்பட்டுள்ள திட்டத்தில் எதிர்நோக்கும் மதிப்பீடு இவற்றை உட் கொண்டிருக்க வேண்டும்.

அ. கட்டுமானத்தின் போது அல்லது முடிந்தபின் தாவரம், மாறாத நிலை திரும்பும் வரை விலங்கின வசிப்பிடம், நில உபயோகம் ஆகியவற்றின் மீதான விளைவுகள், புவியியல், நீரியல், கடலியல் மாற்றங்கள், மணல் வாருதல், சீர்படுத்துதல் உட்பட.

ஆ. நீரின் தன்மையில் மாற்றங்கள் (வெப்பநிலை உப்புத்தன்மை பிராண வாயு ஊட்டச்சத்து மிகுதி நுண்ணுயிர்களால் ஏற்படும் தூய்மைக்கேடு, கலங்கிய தன்மை) கட்டுமானத்தின் போது அல்லது அதன் பிறகு தாவரம், விலங்கினம் நில உபயோகம், வசிப்பிடம் ஆகியவற்றின் மீதான விளைவுகள்

இ. கழிவுகள், புகை, திடக் கழிவுகளை வெளியிடும் தூய்மைக் கேட்டிற்கான ஆதாரங்கள் கட்டுமானத்தின்போது அல்லது அதன்பிறகு மாறாத நிலை திரும்பும் வரை, வசிப்பிடம், தாவரம், விலங்கினம், நில உபயோகம் மீதான விளைவுகள்

ஈ) கடல் தோற்றம் நிலத்தோற்றத்தில் பார்க்கக் கூடிய விளைவுகள், பொதுவாக திட்டத்திற்காக முன்மொழியப்படும் இடத்தைச் சுற்றி உள்ள பொதுவான வாழ்க்கைத்தரம்.

7.2 கடலோர ஆதாரங்களுக்கு விலை நிர்ணயித்தலின் போது தகுதி வாய்ந்தஅதிகாரமுடையோர் சந்தையில் தேவையுள்ள பகுதி மட்டும் அல்லாது அனைத்து பகுதிகளின் மதிப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும். சந்தையில் வர்த்தகமாகவில்லையெனில், அது மதிப்பு இல்லாத ஒன்று அல்ல என்ற உண்மையை உணர வேண்டும். (கடற்கரையின் சமூக நன்மைகள், பவளப்பாறைகளுக்கான சுற்றுலாப் பயணிகள், நலதாத்பரியத்திற்கு சுத்தமான காற்று என்பவை கருதப்படுதல் வேண்டும்).

## 8. சமனப்படுத்தும் செயல்முறைகள்

8.1 விரிவான வடிவமைப்பு எல்லைக் குறிப்பு சுற்றுப்புறச்சூழ்நிலையில் எதிரிடையான விளைவுகளை தடுக்க, குறைக்க சமனப்படுத்த திட்டமிடப்பட்ட செயல்முறைகளை பட்டியலிட வேண்டும். சமனப்படுத்தும் செயல்முறைகளாவன,

அ. தொழில் நுட்பம், எண்ணெய் வரவேற்பு வசதிகள், தண்ணீர் மறுசுழற்சித் திட்டங்கள், கழிவு சுத்திகரிப்பு திட்டங்கள் குளோரோஃப்ளோரோகார்பன் (CFC) இல்லாத குளிர் சாதனம், பொருந்துமிடங்களில் மாற்று வழி மணல் வாருதல்.

ஆ. மேலாண்மை தெளிவாக வரையறுக்கப்பட்ட தொழிலாளர் அமைப்பு, முன்மொழியப்பட்ட திட்டத்தின் அளவுக்கு ஏற்ப தகுதியாக்குதல் மற்றும் அதனிடம் எதிர்பார்க்கும் பொறுப்புகள்

இ. சட்ட ரீதியான நிர்வாகம் அதாவது எல்லை மீறல்களை அனுமதிக்க தேசீய சட்டத்திற்கு இணங்கி வடிவமைக்கப்பட்ட செயல்முறையை ஏற்படுத்துதல்.

8.2 விரிவான வடிவமைப்பு எல்லைக் கோடு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் சுற்றுப்புறச்சூழ்நிலையின் அளவினை அடையாளம் காண முன்மொழியப்படும் நிர்வாக முறைகளின் பட்டியல்.

8.3 முதலாவதாக அத்தகைய கருத்துருக்கள் உரிய காட்டிகளை அடையாளம் காண வேண்டும். இரண்டாவதாக நிர்வாக முறைகளை செயலாற்றிடும் ஆற்றல் வாய்ந்த சர்வதேச அமைப்புகளை அடையாளம் காண வேண்டும்.

அ. பொருள் சார்ந்த வழி அலகுகள் (அதாவது வண்டல் படிதல், கடலரிப்பு போன்ற கரையோர வெளிப்படையான மாற்றங்கள்)

ஆ. உயிரியல் வழி அலகுகள் ( அதாவது சில மெல்லுடலிகளை உண்பதற்கான தன்மை)

இ. வேதியல் வழி அலகுகள் (நீரின் தன்மை)

ஈ. சமூக பொருளாதார வழி அலகுகள் (மக்கள் தொகை அடர்த்தி, வருமான நிலை போன்றவை)

## 9. வடிவமைப்புத் திட்டம்

9.1 நீரியல் சுற்றுப்புறச்சூழ்நிலையின் தேவையற்ற அழிவினை தடுக்க உறுதி செய்திட பொதுவாக நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தக்க இவ்வடிவமைப்புத்திட்டத்தை, மீன் பிடி

கலன்களுக்கான துறைமுகம், இறங்கு தளங்களுக்கான வடிவமைப்பு, கட்டுமானத்திற்கு பின்பற்ற வேண்டும். விவரமான வடிவமைப்பு எல்லைக் கோடு, இறுதியான வடிவமைப்பு ஆகியவற்றிற்கு வடிவமைப்புத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்.

அ. கடல் அரிப்பு, வண்டல் படிதல் குறித்து கடலோரப்பகுதியின் வெளித் தன்மை அழிவு பற்றிய அடிப்படை பொறியியல் கோட்பாடுகளுக்கு இணங்கிடுதல் (UNCED92[9])

ஆ. நீரியல் சுற்றுப்புற சூழ்நிலையின் தூய்மைக்கேடு குறித்த பொருத்தமான அனைத்து சம்பிரதாயங்களுக்கும் இணங்கிடுதல் (MARPOL 73/78)

இ. சுற்றுப் புறச்சூழ்நிலை மீதான நடவடிக்கைளில் விளைவுகளை கண்காணிக்க போதிய முன்னேற்பாடுகள் (UNCED 92)

**9.2** விரிவான திட்டத்தின் எல்லைக்கோடு, தகுதிவாய்ந்த அதிகாரமுடையவர், திட்டத்தின் பூர்வாங்க மதிப்பீடு, திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளினால் தற்போதுள்ள சுற்றுப்புறச் சூழ்நிலையில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க (சிறப்பான) எதிர்விளைவு ஆகியவற்றை அறியும் வகையில் இருக்க வேண்டும்.

**9.3** விரிவான திட்டத்தில் எல்லைக் கோடு கீழ்க்கண்ட குறைந்த அளவு தொழில் நுட்ப அடிப்படையில் அமைதல் வேண்டும்.

அ. தற்போதைய 1: 1000 என்ற அளவிற்கு குறையாத விரிவான புவியியல் மற்றும் பேதிமெட்ரிக் வரைபடங்கள்

ஆ. அலை கடல்நீர் ஏற்றம் வற்றம் அல்லது ஏரிகளில் இறுதியான நிலையில் ஏற்படக்கூடிய தன்மைகளின் அட்டவணை, புள்ளியியல் ஆய்வுகள்

இ. நிலவியல், பெட்ரோவியல், வண்டல் படிதல் தன்மைகள்

ஈ. கரையோரம் கடல் அரிப்பு, வண்டல் படிதல் உட்பட எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள், கடலில் நிலை ( அலைபிரதிபலிப்பு, சுற்றோட்டம் உட்பட) குறித்த வடிவியல் மற்றும் பொருள் சார்ந்த திரவ சக்தி மாதிரிகள்

**9.4** உரிய அதிகாரமுடையோர் உறுதி செய்யப்பட வேண்டியவை

அ. வரைபடங்களின் பிழையின்மை, பகுத்தல் போதுமானவையாகவும் உண்மையானதாகவும் இருத்தல்.

ஆ. அலைகளின் புள்ளி விபரம் நம்பத்தக்கவையாக இருத்தல்

இ. விரிவு மற்றும் விபரத்தில் புவியியல் ஆய்வுகள் போதுமானதாக இருத்தல்

ஈ) திரவயியல் மாதிரிகள், அளவு நிர்ணயிக்க போதுமானதாக இருத்தல். முடிவுகள் நம்பத்தக்கவையாக இருத்தல்

**9.5** உரிய தகுதி படைத்தவரின் ஒப்புதல் சுற்றுப்புறச்சூழல் ஆய்வுக்கு கிடைத்தபின்பே இறுதியான வடிவமைப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

**9.6** இறுதியான வடிவமைப்பு, தகுதிவாய்ந்த அதிகாரமுடையவர் இறுதியான சுற்றுப்புறச்சூழல் ஆய்வில் அங்கீகரித்தவாறு விரிவான வடிவமைப்பு எல்லைக் கோட்டைச் சார்ந்தது (மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாற்றங்கள்) என்பதனை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

**9.7** நாடு உறுப்பினராக உள்ள பன்னாட்டு சம்பிரதாயங்களின் பொருத்தமான இறுதி வடிவமைப்பு முன்னேற்பாடுகளுக்கு உட்பட்டது. கீழ் வருவன போன்று :

---

9 *சுற்றுப்புறச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டம் 1992*

இணை 6

அ. UNCLOS 1982  கடல்சார்ச்சுற்றுப்புற சூழ்நிலையில் தூய்மைக்கேடு குறித்து அமலாக்கத்திற்கான முன்னேற்பாடுகள் அதனைப் போன்று சுற்றுப்புறச்சூழல் நிலைப்பாடுகள் பற்றிய தரப்படுத்தப்பட்ட வழிமுறைகள்;

ஆ. MONTREAL PROTOCOL 1987– உலக அளவில் வெயியிடப்படும் ஓசோன் படலத்தை பாதிக்கும் பொருட்களைக் கட்டுப்படுத்திட போதுமான வழிமுறைகளை மேற்கொண்டு இப்படலத்தை ப்பாதுகாத்தல்;

இ. MARPOL 73/ 78 – எண்ணெய் மற்றும் துயர் விளைவிக்கக் கூடிய பொருட்களால் ஏற்படும் தூய்மைக் கேட்டினைத் தவிர்த்த கடல் சார் சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதுகாத்தல்,

ஈ. LONDON CONVENTION 1972– கடலில் கழிவுப் பொருட்களைக் குவிப்பதால் ஏற்படும் தூய்மைக் கேட்டைக் கட்டுப்படுத்துதல்.

## 10. கல்வி மற்றும் பயிற்சி

10.1 மீன்பிடித்துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்கள் குறித்து சுற்றுப்புற;சசூழல் பிரச்சினைகளைப் பற்றி நாடு விழிப்புணர்வை ஊக்கப்படுத்துதல் வேண்டும். நிர்ணயிக்கப்படும் சபையில் உள்ளடக்கப்படுவோர்:

அ. நேரடி உபயோகிப்பாளர்,

ஆ. உபயோகிக்கும் பிற குழுவினர்,

இ. அத்தகைய வசதிகளின் நிர்வாகம், இயக்கத்திற்கு பொறுப்பானவர்கள்,

ஈ. பொது மக்கள்.

10.2 துறைமுகம் மற்றும் இறங்குதளம் குறித்த விதித்தொகுப்பின் முன்னேற்பாடுகள், பயிற்சி மற்றும் மீனவர்களுக்கு சான்றளித்தலுக்கு பொறுப்பானவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதை நாடு உறுதி செய்ய வேண்டும். மீன்வளத் தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ளோர், அவர்களது குடும்பத்தாரின் கவனத்திற்கு முன்னேற்பாடுகள் கொண்டு செல்லப்பட்டதை விழிப்புணர்வூட்டும் திட்டங்கள் உறுதி செய்ய வேண்டும்.

10.3 அத்தகைய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களில் தனி நபர் சுகாதாரம், பொது நலம் (சுகாதார வசதிகள்) துறைமுகம் மற்றும் இறங்கு தளங்களை சுத்தமான நிலையில் எவ்வாறு நிர்வகிப்பது போன்றவற்றிற்காக வழிகாட்டும் முறைகள் சேர்க்கப்பட வேண்டும்.

10.4 அரசின் விரிவாக்கப்பணி ஆதரவுடன், சமுதாய அடிப்டை ஏற்பாடுகள் மூலமாக பிற உபயோகிப்பாளர் குழுக்கள் சேவை பெறுதல் வேண்டும்.

அ. சமுதாய மீன் பிடிக்கும் மையங்கள்(CFC)[10]

ஆ. மீன்வள வளர்ச்சி மையங்கள் (FDU)[11]

இ. பொது மக்களையும் சேர்த்துக் கொள்ளக் கூடிய தொழில் பயிற்சி திட்டங்கள்

10.5 துரைமுகம் மற்றும் இறங்குதளங்களின் மேலாண்மை மற்றும் நிர்வாகத்திற்கு பொறுப்பு உடையோரால் விழிப்புணர்வு ஊட்டும் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கப்படுகின்றன எனவும் மற்றும் அனைத்து உபயோகிப்பாளர்களுக்காக நன்மைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

[10] *உவேஅ / உகநி வழிகாட்டு முறைகள் பார்வை 3 மற்றும் 5*

[11] *மீன்வள தொழில் நுட்ப அறிக்கை 264 மீன்வள வளர்ச்சி மையத்தை நிறுவுதல் மற்றும் இயக்கம் – வழிகாட்டு முறைகள்.*

கவனத்தைக் கவரக் கூடிய வகையில் விளம்பரம் செய்யப்படும் என்றும் (சுவரொட்டி விளம்பரங்கள் பத்திரிக்கைகள்) உறுதி செய்யப் பட வேண்டும்.

10.6 பொது மக்கள் மற்றும் பொருந்தியவாறு பள்ளியில் படிப்போர்க்கும் சமுதாய விரிவான விழிப்புணர்வு ஊட்டும் திட்டங்களால், சுற்றுப்புறச்சூழல் ஆய்வுகளுடன் பிரச்சினைகளை இணைத்து இலக்காக்கப் படுவர்.

## 11. சுட்டுக் குறிப்புகள்

1. மீன்பிடித்துறைமுகம் திட்டமிடுதல் – உவே அமைப்பு மீன்வள தொழில்நுட்ப அறிக்கை எண் 123, ஐநா உவேஅ, ரோம், 1973.

2. சமுதாய நல மீன் வள மையம் : நிறுவுதல் மற்றும் இயக்குதலுக்கான வழிகாட்டு முறைகள் – உவேஅ மீன்வள தொழில் நுட்ப அறிக்கை எண் 264, பென்யாமி எம், ஆன்டர்சன் ஏ. எம்., உவேஅ, ரோம்,1985.

3. பாரம்பரிய மீனவர்களுக்கான மீன் பிடித்துறைமுகம், கிராம இறங்குதளம் கட்டுமானம் மற்றும் நிர்வாகம் – உவேஅ பயிற்சி வரிசை எண் 25, சிபார்டினோ ஜே. ஏ, ஐ நா உவேஅ, ரோம் 1995.

4. அரசுப்பிரதிநிதி மற்றும் உள்ளூர் உபயோகிப்பாளர் இணைப்பு பாரம்பரிய மீன்பிடித் துறைமுக வளர்ச்சிக்காக பங்கு கொள்ளும் நகர்ப்புற மதிப்பிடுதல் – ரியூசன் ஆர், ஜான்சன், ஜே., சுற்றுப்புற மற்றும் வளர்ச்சிக்கான பன்னாட்டு நிலையம், பிரதி எண் 21, நவம்பர், 1994.

5. தூய்மையான மீன்வளத்துறைமுகத்திற்கான வழிகாட்டு முறைகள், வங்காள விரிகுடாத் திட்டம் (சென்னை, 1993).

மீன்பிடி நடவடிக்கைகள் குறித்த தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளின் முதல் வரைவை உவே அமைப்பு மீன்வளக்குழுவின் பரிந்துரைக்கு இணங்க தயாரித்தது, ரோமில் செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 15 வரை 1994 ல் நடைபெற்ற பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு மீதான தொழில் நுட்ப கலந்தாய்வு இதனை சமர்ப்பித்தது. சுற்றுப் புறச் சூழல் மற்றும் வளர்ச்சி மீதான ஐக்கிய நாட்டு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் 21 ஐ.நா.சு.வ.கூ கான்கன் அறிவிக்கை மற்றும் 1994 ஜூன் 6 முதல் 11 வரை பிரிட்டிஷ் கொலம்பியா, கனடாவில் நடைபெற்ற பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு நடவடிக்கை மீதான கலந்தாய்வு அறிவிக்கை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு இந்த வரைவு தயாரிக்கப்பட்டது. அதன்பிறகு இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம் பெயரும் மீன் இருப்புகள் மீதான ஐ.நா. கூட்ட பேச்சு வார்த்தைகள், பொறுப்பார்ந்த மீன்வள நடத்தைக்கான விதித் தொகுப்பின் விரிவாக்கம் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு திருத்தி யமைக்கப்பட்டது. மீன் பிடிப்பு நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை அமல்படுத்துதலுக்கு உதவிட தொழில் நுட்ப வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. நாடுகள், பன்னாட்டு நிறுவனங்கள், மீன்வள மேலாண்மை அமைப்புகள், உரிமையாளர்கள், மேலாளர்கள், மீன்பிடி கலன்களை வாடகைக்கு அமர்த்துவோர், மீனவர் மற்றும் அவர்களின் நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு இவை தெரிவிக்கப்படும். பொது மக்களுக்கும் பொறுப்புகள் பற்றிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*January 2007*